ஸ்ரீ:

ஸ்ரீகாஞ்சீஜகத்குருஸ்வாமி திருவடியான

பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியன்

இயற்றிய

ஜடஹரஸூக்திஜயத்வஜமென்னும்

வாதிபீகரவிஜயம்.

படியடக்கமுடியொடுக்கம்.

(முதற்பகுதி - அவதாரிகை.)

922:22

திருவல்லிக்கேணி

வேதவேதாந்தவர்த்திநீஸபையாருடைய

வித்வத்ஸம்மாந பஹுமாநத்தைக்கொண்டு

சென்னை:

ஆர். ஜி. அச்சுக்கூடத்தில்

அச்சிடுவிக்கப்பட்டது.

5036 பவஹுபுரட்டாசித்திருவோணம்.

1934

இதன்விலை 0-4-0

ACL-TNAC
02594

C

Q22:22
N34
54796.

ஸ்ரீ:

காஞ்சீபுரம் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார் ஸ்வாமி

அருளிச்செய்த உரைகள்

நாலாயிர திவ்ய ப்ரபந்த உரைகள்.

வடமொழி தென்மொழிப்புலவர்களால் நாடெங்கும்புகழப்பெற்ற

'திவ்யார்த்ததீபிகை' என்னும் உரையுடன் கூடியவை.

	ரூ.	அ.
திருப்பல்லாண்டும் பெரியாழ்வார் திருமொழியும்	3	0
திருப்பாவை	1	4
நாச்சியார் திருமொழி	1	12
பெருமாள் திருமொழி	1	8
திருச்சந்த விருத்தம்	1	8
திருமாலை, திருச்சந்த விருத்தம், அமலனாதிபிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு	1	4
பெரிய திருமொழி—முதல் ஸம்புடம். (1, 2 பத்துக்கள்)	3	0
ஷை இரண்டாவது ,, (3, 4, 5 ,,)	3	0
ஷை மூன்றாவது ,, (6, 7, 8 ,,)	3	8
ஷை நான்காவது ,, (9 பத்து முதல் திருநெடுந்தாண்டகம் முடிய	5	0
திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் (தனி)	1	8
இயற்பா—முதல் ஸம்புடம் (முதல் 4 திருவந்தாதிகள்)	4	8
,, 2-வது ,, (திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி)	4	0
திருவிருத்தவுரை (தனி)	1	0
,, 3-வது ,, திருவெழுகூற்றிருக்கை, திருமடல்கள், ராமாநுஜ நூற்றந்தாதி	3	0
ராமாநுஜ நூற்றந்தாதி உரை - தனிப்புஸ்தகம்	1	0
மூவாயிரம் 10 ஸம்புடமும் ஒரே தடவையில் வாங்கினால்	30	0

கிடைக்குமிடம்:—திவ்யப்ரபந்த திவ்யார்த்ததீபிகை ஆபீஸ்.

32, பந்தர்தெரு, ஜி. டி. மதராஸ்.

ஸ்ரீ:

MADRAS

இந்நூலின் ஸாரஸங்க்ரஹம்.

[*]

யார் எந்நூல் வெளியிட்டாலும் எதையும் பார்க்க விரும்பாதவர்கள் பலர். 'நமக்கு அர்த்தமானாலும் ஆகாமற்போனாலும் கையிற்கிடைத்த நூலை வாசித்துவைப்போம்' என்றிருப்பார் சிலர். 'நமது ஆத்மோஜ்ஜீவநத்திற்கு உதவும் ஸத்க்ரந்தங்களாயிருந்தால் பார்ப்போம்' என்றிருப்பார் சிலர். வம்பு விவாதச்சுவடிகளையே பார்க்க விரும்புவார் சிலர். ஆகவிப்படிப்பட்ட பல் வகையினர் மலிந்த இவ்வுலகின்கண், ஒரு புஸ்தகத்தைப் பூர்த்தியாகப் பார்த்து ஸாராஸாரவிவேகமோ யுக்தாயுக்தநிர்ணயமோ பண்ணப்புகுமவர் சிலருமிலரென்றே சொல்லலாம்.

இத்தகைய விவாதங்களில் ஏதோவொருகக்ஷியையில் அபிநிவேசமுடையார் சிலர் 'நம்கக்ஷியில் புஸ்தகம் வெளிவந்ததா? எத்தனை பக்கம்? எதிர்க்கக்ஷியில் எத்தனை பக்கம்?' என்றிவ்வளவை மாத்திரம் பார்த்துக்கொண்டு குதூகலித்திருப்பர். உள்ளேபுகுந்து விஷயங்களை ஆராய்வாரில்லை.

அண்ணாவிஷயமான வாதப்ரதிவாத நூல்களில் இது நான்காவது: 'எதிரி என்ன சொல்லுகிறார், நாம் என்ன சொல்லுகிறோம்' என்பதைக் குறிக்கொள்பவர்களும் குறிக்கொள்ளவல்லவர்களும் ஒருவரிருவர் இருப்பரோ இராரோ! நமது நூலைப் பூர்த்தியாகப் பார்த்து எதிரியின் ஸகலவித ஆழல்களையும் அலகலகாகத் தெரிந்துகொள்ள ஒருமணியவகாசத்தைச் செலவிடமுடியாதவர்கள் பத்துநிமிஷத்தில் சுருக்கமாகத் தெரிந்துகொள்ள இந்த ஸாரஸங்க்ரஹம் எழுதப்படுகின்றது. ஊன்றிப்படிக்க உள்ளங்களிக்கும்.

"கோழிவெண் முட்டைக்கு என் செய்வதெந்தாய்! குறுந்தடி நெடுங்கடல்வண்ணா!" என்பது திருமங்கையாழ்வாரருளிச்செயல். கோழிமுட்டையைச் சிதைக்கக் குறுந்தடிதானும் வேணுமோவென்பர் உலகர். நமது எதிரியின் நூலுக்கு நாம் இவ்வளவு விஸ்தரம் கொள்வது மிகவும் அநாவச்யகமே. ஆனாலும், நாம் எது செய்தாலும் "**செய்வன திருந்தச்செய்**" என்பதையே சிக்கனக்கொண்டு அழுத்தந்திருத்தமாகவே செய்துமுடிக்குமியல்வினமாதலால் இதற்காக ஒரு தினத்தைப் பூர்த்தியாகவே செலவிட்டோம். விஷயத்தின் போக்கை விவேகிகள் கண்டுகளித்தால் அதுவே நமக்கு விடாயாற்றி.

ப்ரதிவாதிபயங்கரம் அண்ணாவைபவநூல்களில், அண்ணாதிருவவதாரம் கலி 4403, ப்லவஸூ ஆடிமீ க்ருஷ்ணசதுர்த்தசியும் வியாழனுங் கூடின புஷ்யநக்ஷத்ரத்தில் என்றும், அவர் பரமபதித்தது கலி 4496 ஸ்ரீமுகஸூ

1734

பங்குனிமீ புதன் புஷ்யத்தோடு கூடின சுக்லநவமியிலென்றும் பதிப்பிக்கப் பட்டிருந்தது. இதைக் கண்ட சிலர் 'இத்தகைத்தான வருஷலக்கக் குறிப் பின்படி பார்த்தால் தேசிககுமாரருக்கும் முன்னமே அண்ணபரமபதித்து விட்டாரென்று சொல்லவேண்டியதாக நேர்கின்றதே? கலிவருஷக்குறிப்பில் ஏதோ பிசகு இருக்கும்போல் தோன்றுகிறது. இதைக் கவனிக்கவேணும்' என்று அடியேனிடம் தெரிவித்தனர். அதன்மேல் ஆராய்ந்து பார்த்ததில் வாஸ்தவமாகவே ஒரு லக்கம் பிசகியிருந்தமை புலப்பட்டது அந்த ஸமயம் திருநாங்கூர்ஸ்வாமிகள் அண்ணவைபவாதிகளை அச்சிட்டு முடித்து வெளி யிடப்போகிற தருணமாயிருந்தது. அப்புத்தகத்திலும் ஷைலக்கப் பிசகு கவனிக்கப்படாமலே அச்சிட்டு முடிக்கப்பட்டிருந்தமையால் அதில் முகப்பில் பிழைதிருத்தம் வெளியிடப்பட்டது. இது நாலைந்து வருஷங்களுக்கு முன்பு நிகழ்ந்த விஷயம்.

இந்தப் பிழைதிருத்தத்தை ஒரு பெரியவிஷயமாக எடுத்துக்கொண்டு ஒரு அவ்யபதேச்யர் சென்றவருஷத்தில் **வித்வந்மனோரஞ்ஜன** மென்ற பெயரால் ஒரு சுவடியைக் கிளப்பினர். அதில் அவருடைய முக்கியமான வாதம் எதுவென்றால், பிழைதிருத்தத்திற்கு முன்னே "அண்ண அவதாரம் கலி 4403 ப்லவஹூ க்ருஷ்ணசதுர்த்தசி குருவாரயுக்த புஷ்யத்தில்" என்று வெளியிடப்பட்டிருந்ததே அதுதான் அண்ணவின் உண்மையான அவதார காலம்; பிறகு திருத்தப்பட்டிருக்கிறபடி கலி 4463 ப்லவஹூத்தில் என்பது சிறிதும்பொருந்தாது; திதிவாரநக்ஷத்ரப்பொருத்தம் சோதிடநூற் படி 4403 கலிஹூ ஆடிமாதத்திற் பொருந்துகின்றதேயன்றி 4463க்குப் பொருந்தவேமாட்டாதாகையால் இந்தத் திருத்தத்தைச் சோதிடர் பரிஹஸிப் பர். ஆதலால் 4403 ப்லவவருடத்தில்தான் அண்ண அவதாரமென்பதிணங் கும். ஆகவே, அந்த வருடம்முதல் 92 திருநக்ஷத்ரம் ஜீவித்திருந்து கலி 4496 ஸ்ரீமுகவருஷத்தில் பரமபதித்தவராக எழுதப்பட்டுள்ள அண்ணவுக்கு மணவாளமாமுனிகளின் ஸம்பந்தம் ப்ராப்தமாகக் கூடிய ஸந்தர்ப்பம்வாய்க்க வில்லை. ஏனென்றால் கலி 4472 ஸாதாரணஹூத்தில் மாமுனிகளின் திரு வவதாரமென்பது ஸர்வநிர்விவாதமாகையால் அண்ணபரமபதித்த ஸமயத் தில் மாமுனிகளுக்கு 24 திருநக்ஷத்ரமே ஆயிருப்பதாலும் அப்போது அவர் க்ருஹஸ்தராகவே இருந்திருக்கிறபடியாலும், அந்த மாமுனிகள் பரமபதித்த பின்பும் அண்ண ஜீவித்திருந்தாரித்யாதிகளைச் சொல்லி வைபவங்களெழுதி யிருப்பது கல்பனையேயாம் - என்பது வித்வந்மனோரஞ்ஜனகாரருடைய ஒருவாதம்.

59796

இந்தவாதத்தை அடியேன் பலபல ப்ரமாணங்களைக்கொண்டு கண் டித்து, **அண்ணவைபவவிளக்கம** சென்ற ஸ்ரீமுகபங்குனியுத்திரத்தில் வெளியிட்டேன். அப்போது அடியேன் வ்யாபகர்களான சோதிடர்களையும் விசாரித்து "கலி4403 ப்லவஹூ ஆடிமாதத்திற்கு சதுர்த்தசிகுருவாரபுஷ்ய நக்ஷத்ரயோகம் ஒருநாளும் இணங்கமாட்டாது, 4463க்குத்தான் அதுபொருந்

தும்'' என்பதை அப்ரத்ருஷ்யமாகவுந்தெரிந்து கொண்டு எதிரியின்நிர்மூல ப்ரலபிதங்களை அடியறுத்தேன்.

அப்போது அடியேன் பலசோதிடர்களுக்கும் எழுதியிருந்தபடியால், ஸ்ரீரங்கம்பஞ்சாங்கம் கணிப்பவர்களும் ராமநாதபுரம் பஞ்சாங்கம் கணிப்பவர்களும் பரிச்ரமப்பட்டு கணித்துப்பார்த்து, மேலேவெளியிட்டிருக்கிறபடிதான் பொருத்தமானது, பிரதிபக்ஷி கூறுகிறபடி கலி 4403க்குப் பொருந்துமென்பது அஸம்பாவிதம்; 4463க்குப்பொருந்தாதென்பதும் பிசகு. என்பதை கணிதவிவரண ப்ரதர்சநபூர்வகமாகவே(அந்தச் சோதிடர்கள்)விசதமாக எழுதி ஸ்ரீரங்கத்தில்நின்றும் வெளிவருகின்ற திருவரங்கம்பெரியகோயில் பத்ரிகையில் சென்ற ஆடிமாதத்தில் வெளியிடுவித்தார்கள்.

ஆக, அடியேனுடைய புஸ்தகத்தாலும் சோதிடர்களின் புஸ்தகத்தினாலும் எதிரியின்வாதம் தலைகாட்டமுடியாமற் போய்விட்ட பின்பும் எதிரி, தாமும் ஒருபதில்புத்தகம் வெளியிட்டு விட்டதாய்ச் சில பாமரர்களை வஞ்சிப்பதற்குமாத்திரம் பாங்காக படியடக்கமென்பதோர் சுவடியைக் கிளப்பியுள்ளார். இதில் இவர் எழுதியிருப்பவைகளால்—முன்சுவடியில் இவர்தாம் செய்திருந்தவாதம் பிசகென்பதை இப்போது தாமே நன்கு ஒப்புக்கொள்வதும், அண்ணா மணவாளமாமுனிகளின் திருவடிகளில் ஆச்ரயித்தவரேயென்பதைத் தாமே இசைந்து பேசுவதுமே ஸ்பஷ்டமாகின்றதென்பதை இங்கு ப்ராமாணிகர்களின் நெஞ்சுகளியக் காட்டுகின்றேன்.

முதல்விஷயம்=முன்பு எதிரி தாம்கூறியிருந்த விஷயத்தை இப்போது தாமேபிசகென்று பிரகாசப்படுத்தினாரென்பது.

அண்ணா கலி4403ப்லவஸூ ஆடிமீ க்ருஷ்ணசதுர்த்தசி வியாழன் கூடின புஷ்யநக்ஷத்ரத்தில் அவதரித்தாரென்று அண்ணாவைபவ நூல்களில் முதலில்பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. பிறகு பிழைதிருத்தத்தில் கலிஸூமாத்திரம் பூஜ்யஸ்தானத்தில் 6-போடப்பட்டிருக்கிறது. அப்படி பூஜ்யத்தையெடுத்து 6-போட்டால்தான் மற்ற திதிவாரநக்ஷத்ரங்கள் பொருந்துமென்பது வித்வாந்திகளின்வாதம். 6-போட்டால் பொருந்தாது, பூஜ்யமாகவே அதாவது 4403-ஆகவேயிருந்தால்தான் பொருந்தும் என்று எதிரியின் வித்வன்மனோபஞ்ஜனத்தில் வாதம். இதைத்திடமாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். படியடக்கத்திலெழுதுவது வேறு.

இராமநாதபுரம் - தேவகோட்டைச் சோதிடர்கள் விவாதகிரஸ்த கலி வருஷங்கள் பலவற்றின் வருஷம் மாதம் தேதி திதி வாரம் நக்ஷத்ரம் முதலான ஸகலத்தையும் கண்ணாடிபோல் விளக்கிப் புத்தகம் வெளியிட்டதைக் கண்ட எதிரி இப்போது தமது படியடக்கததில்(பக்கம் 13ல்) தாமும் ஒரு காலக்கண்ணாடி பதிப்பித்து, **''இதோ நிரூபித்துவிட்டோம்; இனி இவர் என்ன செய்யத் தயார்?''** என்றும் உறுமியிருக்கிறார்.' இவரது முகத்தில் சொட்டுகின்ற அசட்டுச்சிரிப்பை வெளியிடுவதற்கே நாம் தயார்' என்றுதான் பதில் எழுதவேண்டியிருக்கிறது.

கண்ணுடையவர்கள்காணலாம்; எதிரி காட்டியிருக்கும் காலக்கண்ணாடியில் கலி 4403ஞுத்தின் விவரணமும் உள்ளது, 4463ஞுத்தின் விவரணமும் உள்ளது. நம் முன்னோர் எழுதியிருக்கிற (அண்ணாஅவதார) திதி வார நக்ஷத்திரங்கள் எந்த வருஷத்திற்குப் பொருந்தியிருப்பதாக எதிரியே காட்டியிருக்கின்றார் என்பதைக் கண்திறந்து காணவேணும். [இதில், பிரபவாதி வருஷப்பொருத்தவிஷயத்தை அடுத்தபடியாக எடுத்துக்கொள்வோம்; இப்போது கலிவருஷ நிர்ணயம்மாத்திரமே செய்வோம்.]

அண்ணா அவதாரதினத்தில் வியாழனும் சதுர்த்தசியும் புஷ்யமும் கூட வேண்டுமென்பதும், அப்படி கூடும் தினம் எதுவோ அதுதான் உண்மையாக அண்ணா அவதாரகாலமாகும் என்பதும் எதிரியின்வாதம். நாமும் அதைத்தான் மெச்சுகின்றோம், தடஸ்தர்களும் அப்படிப்பட்ட காலம் எது? என்பதைத்தான் சோதிடர்வாயிலாக அறியவிரும்பியிருக்கிறார்கள். இந்த நிலைமையில் எதிரியானவர் (பக்கம் 13ல்) 4463 கலிவருஷத்தில்தான் வியாழனும் சதுர்தசியும் புஷ்யமும் கூடுகின்றன; 4403ல் செவ்வாய்க்கிழமையேயன்றி வியாழன் இல்லை; என்று கண்ணாடியாய்க் காட்டிவிட்டார்.

ஆகவே கலி 4403ல்தான் அண்ணாஅவதாரமென்று இவர் முன்பு காட்டியிருந்த வாதம் சிதைந்தொழிந்தது. ஒழியவே அதைவிட்டு இப்போது என்ன ஆரம்பித்திருக்கிறாரென்றால், எல்லாம் பொருந்தும்படியாகத் தாமே காட்டியிருக்கிற 4463ல்தான் அண்ணாஅவதாரமென்று தலைப்பொறையாக ஒப்புக்கொண்டு தீரவேண்டிநேர்ந்ததை ஒப்புக்கொண்டுவிட்டால் ப்ராமாணிகத்வம் பிரகாசித்துவிடுமேயென்கிற மஹாபயத்தினால் வேறொருவருஷத்தைத் தேடிப்பிடிக்க ஆரம்பித்தார். அதிலாவது வெற்றி பெறுகிறாரா என்று பார்த்தாலோ, அஃது எங்ஙனே பெறலாகும்? 4403ல் அன்று; 4402ல் அண்ணா அவதாரம் என்று இப்போது எழுதப்புகுந்தார்.

குறிப்பிட்ட திதி வார நக்ஷத்ரங்கள் கூடுகிற தினமே உண்மையான அவதாரதினமாக நிச்சயிக்க வுரியதென்பதை நண்பர்காள்! மறந்திருக்கமாட்டீர்களே. அந்த 4402க்கு செவ்வாய்தோஷம்கழிந்து வியாழன் வருகிறதென்பதை மாத்திரங் கொண்டாரேதவிர, திதி கூடவில்லையே யென்பதற்கு என்ன விடை கூறுகின்றாரென்பதைத் தடஸ்தர்களே கேட்டறியவேண்டும். எதிரி தாமே (பக்கம் 10ல்) திதி கூடவில்லையென்பதை ஸ்பஷ்டமாக ஒப்புக்கொள்ளுகிறார். 4462க்கு திதி வார மிரண்டுமே கூடவில்லையென்கிறார். அந்த 4462ஞுத்தைப்பற்றி என்ன விசாரம் வந்திருக்கிறது? இதுவரையில் எதிரியாவது நாமாவது அந்த வருடத்தைப்பற்றிப் பேச்சாகிலு மெடுத்ததுண்டோ? எல்லாம் கூடப்பெற்றதும் ஏட்டில் ஏறியிருப்பதுமான 4463ஞுத்தைவிட்டிட்டு 4462ஞுத்தை அநாவச்யகமாகவும் புதிதாகவும் தொட்டுக்கொண்டு அதில் திதி வாரங்கள் கூடவில்லையென்றெழுதுகின்ற எதிரியின் அஸமஞ்ஜஸத்வத்தை என்னென்போம்!. திதி வார நக்ஷத்ரங்கள் மூன்றும்

அழகாக அமையப்பெற்றுள்ள 4463ல்தான் அண்ணா அவதாரமென்று எதிரி தாமே நிர்த்தாரணஞ் செய்ததாகத் தேறுகின்றது.

[ப்ரபவாதிவருஷவிசாரம்.]

இதன்மேல் எதிரியின் வாதம் என்னவென்றால், திதி வார நக்ஷத்ரங்களோடுகூட [அண்ணா வைபவநூல்களில் ச்லோகபூர்வகமாகவுங் குறிப்பிட்டிருக்கிற] ப்லவவருஷயோகமும் அண்ணா அவதாரகாலத்திற் பொருந்தவேண்டும். கலி ஸூத்தை 4463 ஆகத் திருத்தியும் பயனில்லாதபடி அப்போது சுபக்ருத் ஸூமே யிருப்பதால் ப்லவ ஸூமுள்ள கலிவருஷத்தை நாடவேணும்; அப்போது 4402ல் திதி இணங்காவிடினும் திதி வார மிரண்டுமிணங்காத 4462 ஸூத்தைக் காட்டிலும் திதி ஒன்றுமாத்திரமே இணங்கப்பெறாத 4402ஸூத்தைக் கொள்ளுதல் யுக்தமல்லவா? என்கிற வாதம் சேஷிக்கின்றது.

இந்தவொரு விஷயத்தில்தான் மேதாவிகள் முழுநோக்குவைத்து விஷயங்களை நன்குவாங்கிக் கொள்ளவேண்டுகின்றேன்.—முதல் நூலாகிய வித்வன்மனோரஞ்ஜனத்தில் இவ்விஷயம் அடியோடு எதிரியால் ப்ரஸ்தாவிக்கப்படவேயில்லை யென்பதும், நமது சோதிடர்கள் வெளியிட்ட **“அண்ணாவின் கால நிர்ணயம்”** என்கிற புத்தகத்தில் (பக்கம் 85ல்) “மற்றொரு ஆராய்ச்சி” என்ற மகுடத்தின் கீழ் நூதனமாகப்ரஸ்தாவிக்கப்பட்ட விஷயமென்பதும் விவேகிகட்குத் தெரியும். ‘இதை யார் ப்ரஸ்தாவித்தாலென்ன? விஷயம் ஏறுகிறபக்ஷத்தில் விடையளித்துத்தானே தீரவேண்டும்; ப்லவ வருஷயோகம் அமையவேண்டுவது மிகவும் அவசியந்தானே; 4463க்கு அது அமையவில்லை யென்றால் அந்த வருஷத்தில் அண்ணா அவதரிக்கவில்லை யென்று கொள்ளத்தடை என்ன? என்று தடஸ்தர்கள் கேட்கவே ப்ராப்தம்.

மிக முக்கியமான சபதம்.

இதற்கு அடியேன் எழுதுகிற ருஜுவான ஸமாதானம் இணங்காதென்று யார்சொல்லி விட்டாலும் ரூ. 1000 ஆயிரம் பரிசு, ஸத்யம் ஸத்யம். 4463க்கு ப்லவ ஸூ என்று எதிரியின் வாயைக்கொண்டே அடியேன் ஒப்பவைக்காவிடில் என் கழுத்திலுள்ளது பூணூலன்று என்றுங்கொள்ளுங்கள்.

பஞ்சாங்ககாரர்களுள் இந்த வருஷநிர்த்தேசத்தில் இரண்டு பிரிவினைகள் [அதாவது அபிப்ராயபேதம்] இருப்பது ஜகத்ப்ரஸித்தம். இப்போது நடக்கிற பவஸூத்திற்கு கலிஸூ என்ன? என்று ஆராயத்தொடங்கி, பஞ்சாங்கங்களை யெடுத்துப்பார்த்தால் ஸ்ரீரங்கம் பஞ்சாங்கம் முதலிய சிலவற்றில் 5035 என்றும், பெருமாள்கோயில் தேவஸ்தான பஞ்சாங்கமாகிய கருங்குளம் பஞ்சாங்கம் முதலியவற்றில் 5036 என்றும் ஸ்பஷ்டமாகக் காணப்படும். இதனால் 4463க்கு சுபக்ருத்ஸூ என்று ஒருசாரார் கொள்கை என்பதும் அதற்குப்லவஸூ என்று மற்றொருசாரார்கொள்கையென்பதும் ஸ்பஷ்டமாகும். ‘அண்ணாவின் காலநிர்ணயம்’ என்கிற புஸ்தகத்தை வெளி

யிட்ட சோதிடர் ஸ்ரீரங்கம் பஞ்சாங்ககணனகர்த்தாவாதலால் தமது கொள்கையின்படி 4463க்கு ப்லவஸூ இல்லை, சுபக்ருத்ஸூ என்று எழுதினர். அதை எழுதினதோடுகூடவே நமது எதிரிக்கு ஒரு எச்சரிக்கையும் வெகு அழகாகச் செய்திருக்கிறார்—அதாவது—(பக்கம் 87ல்)

"அடியேனுடைய ஆராய்ச்சியில் கிடைத்தவிஷயம் இது. இதை அவலம்பித்துக்கொண்டு இனி பூர்வபக்ஷியானவர் எதாவது அவத்யம் சொல்ல விரும்பினாலும் அது பயன்பெறாது. ஸகலபூர்வாசார்யர்களுடையவும் காலக்குறிப்பில் இந்தப் பிறழ்வு எறியேயிருப்பதால் இது ஒரு விஷயமாக எடுத்துக் கொள்ளத்தக்கதேயன்று என்பதைக் காட்டிகின்றேன்."

என்று நமதுசோதிடர் எழுதியுள்ளார். வீணாக அவமானப்படவேண்டாவென்று ராவணனுக்குப்பலர் போதித்தும் பயன்பட்டதோ?

இனி, நம்எதிரி என்ன சொல்லப்போகிறாரென்றால், பஞ்சாங்ககாரர்களுள் வருஷவிஷயத்தில் ஒன்று ஏற்றக்குறைவாக அபிப்ராயபேதமிருப்பது வாஸ்தவந்தான். ஆனால் அதில் ஒன்றுதான் ப்ராமாணிகம். ஸ்ரீரங்கம் பஞ்சாங்கத்தில் குறித்திருக்கிறதுதான் யுக்தம்; கருங்குளம் பஞ்சாங்கத்திலுள்ளது அநாதரணீயம்; ஆகவே 4463க்கு ப்லவஸூ இல்லை—என்று வாதிக்கவருவர். இப்போது இப்படிப்பட்ட வாதம் இவரால் செய்யமுடியாதபடி இவர் நெருக்குண்டு கிடப்பதையே இனி இங்கு விவரிக்கின்றேன்.

படியடக்கத்தில் (பக்கம் 20ல்) "அவதார காலஸங்க்யையில் ஒரு லக்கம் புரண்டு விழுந்திருப்பதுதவிர வேறு ஆதாரமுண்டா என்று லக்கத்தின் புரட்சியை (அண்ணங்கராசாரியர்) வெகு லகுவாக நினைக்கிறார். ராஜாங்கமும் லோகமுமெல்லாம் லக்கத்தில்தான் நிற்கிறது. அது புரண்டால் ராஜாங்கமே புரண்டுவிடும் என்பதை இவர் தெரிந்துகொள்ள வில்லைபோலும்" என்றெழுதியிருக்கின்றார். இதனால் எதிரி லக்கத்தில் மிகவும் ஜாகரூகர், புரளாதவர் என்று காட்டப்பட்டிருக்கிறது. அப்படியேயிருக்கட்டும். இவரெழுதிய முதனூலாகிய வித்வன்மனோரஞ்சனத்தில் (பக்கம் 3ல்) "கலிதுடங்கி 4472-வதான ஸாதாரணஸூ ஐப்பசிமீ திருமூலத்தில் ஸ்ரீமணவாளமாமுனிகளின் திருவவதாரம்;...கலி 4545 வதான ருத்ரோத்காரிஸூ மாசிமீ க்ருஷ்ணத்வாதசி ச்ரவணத்தில் பரமபதித்தார்" என்றெழுதியிருக்கின்றார். படியடக்கத்தில் (பக்கம் 13ல்) 4471ல் மாமுனிகளின் அவதாரமென்று கண்ணாடி காட்டுகிறார். அதிலேயே (பக்கம் 19ல்) 4472ல் என்றும் எழுதுகிறார். இந்த லக்கப்புரட்சிக்கு ஒரு ராஜாங்கமும் புரளாதுபோலும். நான்தான் புரண்டு விட்டேனென்று பதில் கூறுவர் பாவம்!.

எதிரியின் இந்த லக்கப்புரட்சியின் உண்மையை நாம் நிரூபிப்போம். கீழே நாம் விவரித்தவாறு கருங்குளம் பஞ்சாங்கக்குறிப்பின் படியாகவேதான் பூர்வாசார்யர்களின் காலத்தில் ஸம்வத்ஸரகணனை இருந்துவந்ததென்பது இப்போது விளங்கிவிட்டது. எங்ஙனேயென்னில்; மணவாளமாமுனி

களின் திருவவதாரம் 4472ல் ஸாதாரண ஷூத்தில் என்று உள்ளது உள்ள படியே எதிரியும் எழுதிவிட்டார். ஷை கலி வருஷத்திற்கு ஸாதாரண வருஷமா? விரோதிக்ருத் ஷூமா? என்று எதிரியைக் கேட்போம். தவிரவும், மாமுனிகளின் பரமபதயாத்ராவருஷமாக எதிரியே எழுதியிருக்கிற 4445 கலி ஷூத்திற்கு ருதிரோத்காரி ஷூமா? ரக்தாக்ஷி ஷூமா? என்றும் கேட்போம். இவ்விரண்டுகேள்விக்கும் இவர் எந்த சோதிடர் திருவடியைச் சரணம் பற்றி விடையளிக்கப்போகிறாரோ?

யதீந்த்ரப்ரவணப்ரபாவாதிகளிலுள்ளதை எதிரியே எழுதியிருக்கிற படி 4472க்கு ஸாதாரணஷூமும் 4545க்கு ருதிரோத்காரிஷூமும் வரும் போது 4463க்கு ப்லவஷூவரத் தடையென்ன?வேறுஎந்தவருஷமும்வாராது.

4463 ப்லவ	4468 பராபவ
4464 சுபக்ருத்	4469 ப்லவங்க
4465 சோபக்ருத்	4470 கீலக
4466 க்ரோதி	4471 ஸௌம்ய
4467 விச்வாவஸு	4472 ஸாதாரண.

இங்ஙனமே மாமுனிகளின் பரமபதவருஷத்தையுந்தொட்டுக் குறித்து வந்தால் ப்லவஷூ மூன்றாய ஸங்க்யையில் வருமே யல்லது இரண்டாய ஸங்க்யையில் ஒருநாளும் வாராது.

இப்படியே தேசிகனவதாரவருஷத்தையுந்தொடங்கிக் குறித்துவந்தால் இந்தவுண்மைதான் வெளிவரும். 4371 சுக்லஷூ தேசிகனவதாரமென்று இதர ஸம்ப்ரதாயஸ்தர்களின் குருபரம்பரை கூறுகின்றது. 4370 விபவ ஷூத்தில் தேசிகனவதாரமென்று பிற்பட்டவர்கள் எழுதியிருக்கிறார்கள்: நமக்கு இரண்டும் துல்யம். 4370க்கு விபவஷூ 4371க்கு சுக்லஷூ என்கிற ரீதியில் 4463க்கு ப்லவஷூதான்வரும். சுபக்ருத்ஷூ வாராது. இப்படியே எந்த ஆசாரியருடைய வருஷத்தைக்கொண்டு பார்த்தாலும் கருங்குளம் பஞ்சாங்கத்தில் குறித்திருக்கும் ஸம்வத்ஸரநிர்த்தேசமே பூர்வாசார்யர்களின் காலத்தில் வழங்கிவந்ததென்பதை ஸர்வேச்வரனும் மறுக்ககில்லான்.

எந்த ஹேதுவினாலேயோ சில பஞ்சாங்ககாரர்கள் ஒருவருஷத்தைக் குறைத்துக் கலிவருஷத்தைக் குறிப்பிட்டுவருகிறார்கள். இதில் எந்தபக்ஷம் யுக்தம்என்பதை ஆராய நமக்குச் சிறிதும் அவசியமேயில்லை. தேசிகன் மணவாளமாமுனிகள்முதலிய ஸகல பூர்வாசார்யர்களுடையவும் வருஷக்குறிப்பைத் திருத்த வேண்டாமலே பொருந்தவிடுகின்ற பஞ்சாங்கமேயுக்தமென்று கொள்ள என்னதடை? கிம்பஹுனா? எதிரிக்கும் கருங்குளம் பஞ்சாங்கமே இப்போது சரணமாயிற்றே!. இல்லையென்னில், 4472க்கு ஸாதாரணஷூமென்றும் 4545க்கு ருதிரோத்காரிஷூமென்றும் தாமேயெழுதியிருப்பதை எந்தவழியில் ஸ்தாபிக்கிறாரோ, அதைச் சில தலையாட்டிப் பதுமைகளின் முன்னின்று சுவ்ஷகக்கூசல்போடுவதைவிட்டு நான்கு அக்ஷராஸ்யர்முன்னே நின்றுபேசட்டும்.

ஆக இவ்வளவாலும் என்னதேறிற்றென்றால்; 4463 ப்லவ ஞூத்தில் தான் அண்ணா அவதாரம். அப்போதுதான் திதி வார நக்ஷத்ரங்கள் யாவும் பொருந்துகின்றன வென்று நம் எதிரியே காலக்கண்ணாடியினால் நிரூபணஞ் செய்துவிட்டார். அதற்கு ப்லவஞூ மாத்திரம் கூடவில்லையென்று எதிரி ஒரு சாரார்கொள்கையை இன்றைக்குத் தழுவி யெழுதியிருந்தாலும் 4463க்கு ப்லவஞூமேதான் கூடுகின்றதென்று அவரே இசைந்து தீரவேண்டும்படி நாம் ருஜுவான நிரூபணம் செய்துவிட்டோமாதலால், இனி வாய்திறக்க வுண்டோ வழி?

இனி, இரண்டாவதுவிஷயம் - அண்ணா மணவாள மாமுனிகளை ஆச்ரயித்தவ ரென்பதை எதிரிதாமே ஸ்தாபித்திருக்கிறரென்பது.

படியடக்கம் (பக்கம் 18ல்) எதிரி எழுதுகிறார்;—

“மணவாள மாமுனிகள் பரமபதித்த பிறகு ஜீயர்நயினாருக்கு **அண்ணா** காலக்ஷேபம் ஸாதித்தாரென்று யதீந்த்ரப்ரவணப்ரபாவத்தில் எல்லாப்பதிப்பிலும் ஸ்பஷ்டமாக இருக்க, மணவாளமாமுனிகள் இருக்கும்போதே காலக்ஷேபம் ஸாதித்ததாகவும் சில வருஷம் கடந்த பின்பு மாமுனிகள் பரமபதித்ததாகவும் ஆசார்யசர்யாம்ருதத்தில் எழுதப்பட்டதற்கு ப்ரமாணமேதோ?”

என்று கேள்விகேட்டிருக்கிறார். நுனி மரத்தில் நின்று அடிமரத்தை வெட்டும் மஹா மேதாவிபோலே இப்படியும் ஒரு கேள்வி கேட்கத் தோன்றுமோ? ‘யதீந்த்ரப்ரவணப்ரபாவம் ஸர்வாத்மநா அப்ராமாணிகம்’ என்று எதிரி ஒரு மூலையில் எழுதிவைத்திட்டால் அப்போது இக்கேள்வி தாராளமாகக் கேட்கலாம். “உங்களுக்கு ப்ரமாணமான புஸ்தகத்தின்படிக்கும் நீங்கள் எழுதவில்லையே” என்ற அபிப்ராயத்தின்கீழ் அக்கேள்வியைப் பொருந்தவிடலாம். இவரோ யதீந்த்ரப்ரவணப்ரபாவத்தை இல்லைசெய்யவும் அப்ரமாண மாக்கவும் இன்னமும் துணியவில்லை. பலவிஷயங்களுக்குப் பிரமாணமாகவே அதைக் காட்டுகிறார். ‘அது அப்ரமாணமே’ என்று இப்போது இவர் சொல்லிவிட்டாலும் போதும். இந்தவாதத்தில் விச்ராந்தனாய் விடுவேன். அந்த ஸ்ரீகோசத்தின் எல்லாப்பதிப்புக்களிலும் மாமுனிகள் பரமபதித்த பின்பும் அண்ணா ஜீவித்தெழுந்தருளியிருந்ததாகவும் மாமுனிகளின் சிஷ்யர்களுக்குக் காலக்ஷேபம் ஸாதித்ததாகவும் ஸ்பஷ்டமாயிருப்பதாகத் தாமே உதாஹரித்துக்கொண்டு, “அண்ணாவுக்கு மாமுனிகளின் ஸம்பந்தமில்லாமையின் த்ருடீகரணம்” என்று உபக்ரமோ பஸம்ஹாரங்களுஞ் செய்துகொண்டு சுவடியெழுதுகிறவரை என்ன வென்னலாம்? ஸப்தபங்கீஸமயிகள் இக்காலத்தில் எங்கிருக்கின்றனரென்று பலர் தேடுவதுண்டு: இவரேயென்று அறுதியிடலாமே.

இதற்குமேல் நம் எதிரி சொல்லுவது - யதீந்த்ரப்ரவணப்ரபாவஸித்தரான ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா வேறு; அவரை நாம் அபலபிக்கவில்லை;

அவரைப்பற்றின ஸங்கதிகளை நாம் வெளியிட அவசியமில்லை என்று - முதல் நூலிலில்லாதவொரு விலக்ஷணவாதம். இதைப்பற்றி விமர்சிக்க நமக்கும் அவசியமில்லை யென்பதே இதற்கு பதில்.

இனி அண்ணாவின் பரமபதயாத்ராகாலவிசாரம். அண்ணா பரமபதித்த காலத்தை வெளியிடவந்த ப்ராசீநசரமச்லோகமாகிய * **ஶுபே ஶ்ரீமுக நாமகே ஃபால்குநே மாஸ்யஸிதே நவம்யாம் புதவாஸரே [illegible] தாரேய வாராந்நிதே** * என்னும் ச்லோகத்தில் கலிவருஷ நிர்த்தேசமே கிடையாது. அவதார ச்லோகங்களில் மாத்திரம் கலிவருஷ விந்யாஸம் செய்வதுண்டேயன்றி சரமச்லோகங்களில் அது செய்வது பெரும்பாலுங் கிடையாதென்பதை (எதிரியும் உதாஹரித்திருக்கின்ற) மணவாளமாமுனிகளின் சரமச்லோகங்கொண்டு மறியலாம். ஆதலால் இதில் கலிவருஷ விசாராவச்யகதை கிடையாது. 4463ல் திருவவதரித்து [92 ஸம்வத்ஸரங்கள் ஜீவித்திருந்து] ஸ்ரீமுகவருஷம் பங்குனி மாதம் புதன்கிழமை புஷ்யயுக்தநவமியில் பரமபதித்தாராக ச்லோகத்தால் ப்ரதிபந்நரான அண்ணாவின் ஷை பரமபதயாத்ராகாலமும் மாமுனிகளின் பரமபத யாத்திரைக்குப் பிறகு வருகிற ஸ்ரீமுகவருஷமேயன்றி வேறாகாது. 4494 கலிவருஷத்தில் அண்ணா பரமபதித்தாரென்று சொல்லி மாமுனிகளின் இளமையிலேயே அண்ணாவின் அவஸாநமாகச் சொல்லவருகிற எதிரிக்குக் காலயோகம் அணுமாத்திரமும் பொருந்தவில்லை யென்பது ஸ்பஷ்டம். எங்ஙனேயென்னில், எதிரி (பக்கம் 13ல்) காட்டியிருக்கிற கண்ணாடிப்படி 4494 பங்குனி சுக்லநவமியில் புநர்வஸு உள்ளதேயன்றிப் புஷ்யமில்லை. ஸாதாரணமாக ஸம்பாவிதமான நாழிகையேற்றத்தாழ்வைக் கொண்டு புஷ்யமும் அன்று கூடிவிடுகின்றதென்றே வைத்துக்கொண்டாலும் வித்வன்மனோபஞ்ஜனப்படி ஷை 4494க்கு ஸ்ரீமுகவருஷ வரவேவராதென்பது திண்ணம். ஏனென்றால், மாமுனிகளின் பரமபத வருஷமாகிய ருதிரோத்காரி வருஷத்திற்கு, கலிவருஷ 4545 என்று எதிரியே எழுதுகிறாரே. அதைப பிடித்துக் கணக்கிட்டுப் பாருங்கள்.

4545	ருதிரோத்காரி	4550	விபவ
4546	ரக்தாக்ஷி	4551	சுக்ல
4547	க்ரோதன	4552	ப்ரமோதூத
4548	அக்ஷய	4553	ப்ரஜோத்பத்தி
4549	ப்ரபவ	4554	ஆங்கீரஸ
		4555	ஸ்ரீமுக

எந்த பர்யாயத்திலும் 5-ஸங்க்யையில் ஸ்ரீமுகவருஷ வருமேயொழிய 4-ஸங்க்யையில் வாராது. வருமென்றால், 4545-க்கு ருத்ரோத்காரி வருஷமென்றும் 4472-க்கு ஸாதாரண வருஷமென்றும் எதிரியேயெழுதியிருப்பது பிசகுதானென்று ஒப்புக்கொள்ள வேண்டும். வேறுகதிமோக்ஷமில்லை. ஒரு லக்கம் புரண்டாலும் ராஜாங்கமே புரண்டுவிடுமென்று எதிரியே யெழுதியிருப்பதும் மறக்கலாகாது.

ஆகவே "4494ல் வரக்கூடிய **ஸ்ரீ**முகவுக்கு" என்று (படியடக்கம் பக்கம் 10ல்) எழுதியிருப்பது முழுமோசம். எல்லாம் பொருந்துகின்ற பரமபத யாத்ராகாலம் மாமுனிகள் பரமபதித்தபின்பு 10 வருடங்கள் கடந்தபின் வருகின்ற **ஸ்ரீ**முகவருஷமொன்றேயாகும். அதற்கு முந்திய **ஸ்ரீ**முகவருஷத்தில் ஸர்வாத்மநா அஸம்பாவிதம்—என்கிறவிதுவும் எதிரியின் சுவடியிலிருந்தே ஸ்பஷ்டவித்தவிஷயம் என்று விளக்கிக்காட்டிவிட்டோம். (படியடக்கம் பக்கம் 10ல்) * **அப்தே ஸ்ரீமுகநாமகே தீநமணௌ** * என்கிற சரமச்லோகம் ஒன்றே ப்ராமாணிகம் என்று எதிரி நிஷ்கர்ஷித்தெழுதியிருக்கிறார். இந்த நிஷ்கர்ஷத்தையேதான் அடியேனும் சிரஸா வஹிக்கிறேன். இங்ஙனம் இவர்தாமே ப்ராமாணிகமென்கிற சரமச்லோகப்படி 4494ஆ ஆகவேமாட்டாதென்பது திண்ணம்.

படியடக்கமுடிவில் "ஓர்முக்கிய அறிவிப்பு" என்ற மகுடத்தின்கீழ் எழுதியுள்ளதெல்லாம் பரம ஆபாஸம். மாமுனிகள் கலி 4472 ஸாதாரணஆல் அவதரித்து 4545 ருதிரோத்காரிஆல் பரமபதித்ததாக வித்வன் மனோபஞ்ஜனத்தில் எழுதின கையைக்கொண்டே இதில் 4471 ஸாதாரணஆல் அவதரித்து 4544 ருதிரோத்காரியில் பரமபதித்ததாக எழுதுகிறீரே, வாய்திறக்க வெட்கமாயில்லையா? **என்று** கேட்க ஒரு விவேகி இல்லையே!. ஒரு லக்கத்தில் ராஜாங்கமே புரண்டுவிடுமென்று எழுதுகிற சுவடிக்குள்ளேயே (பக்கம் 13ல்) ஸாதாரணவருஷத்திற்கு கலிஆ 4471 என்பது, (பக்கம் 19ல்) 4472 என்பது, (பக்கம் 20, 49ல்) 4471 என்பது, ஆக **வி**ப்படிக் குளறிக்கொட்டிவிட்டு 'ஸபையில் வரத்தயார்' என்றும் கைகூசாமல் எழுதுகிற இந்த விலக்ஷணவ்யக்தியை அவசியம் ஒருஸபையில் பார்க்கவேணுமென்றே ஆசை கிளர்ந்திருக்கிறது. இவ்வாசை நிறைவேறும் விஷயத்தில் அடியேன் பரமதௌர்ப்பாக்கிய சாலியே.

அஸ்மத்ஸ்வாமி அருளிச்செய்த ஆசார்யசர்யாம்ருதத்தின் முடிவில்* **ரஸநவாப்தி** * என்றொரு ச்லோகமிருக்கிறது. இது அந்த ஜகத்குருஸ்வாமி ஸாதித்ததே யன்றி அண்ணா திருக்குமாரர் ஸாதித்ததன்றென்பது அந்த ச்லோகத்தை வாசிக்கிற ரகுவம்ச வித்யார்த்திக்கும் தெரியும். அதற்குமேலே உதாஹரித்திருக்கிற * **அப்தே ஸ்ரீமுக நாமகே** * என்கிற சரமச்லோகமொன்றுதான் அண்ணரப்பா அருளிச்செய்தது. 'அதனை இதோ உதாஹரிக்கிறேன் பாருங்கள்' என்று சொல்லுகிற பீடிகையாக (காவ்யத்தில்) **ஸ்ரீ**ஜகத்குருஸ்வாமி அருளிச்செய்திருப்பதும், "கலி 4496ல் அண்ணா பரமபதித்தார்" என்கிற திருவுள்ளங்கொண்டு நிர்மிதமுமான * **ரஸநவாப்தீ**த்யாதியையும் அண்ணரப்பா**வி**ன் கவிதையாகவே ப்ரமித்து எதிரி ஆரவாரஞ் செய்திருக்கிற கோரம் அநுவதிக்கவும் தகாது. "அண்ணரப்பாவால் சொல்லப்பட்ட ச்லோகம் புரண்டுவிட்டதென்றால் அச்சரித்திரத்திற்கு ஒரு குறைவே" என்று (பக்கம் 52ல்) எதிரி எழுதியிருப்பது நிர்மூலப்ரலபிதம். எல்லாவகையானபுரட்சியும் எதிரிபக்கலிலேயே புஷ்கலமென்று கண்ணாடிபோல் காட்டியாயிற்று.

எமதுகோரிக்கையினல் இரண்டு ப்ரபலசோதிடர்கள் கணித்தெழுதி ஸ்ரீரங்கத்தில் வெளியிட்ட "அண்ணாவின் காலநிர்ணயம்" என்கிற புஸ்தகமும் நாமே வெளியிட்டுக்கொண்டதாம். எதிரியின் துர்வாதத்திற்கு இடமறும்படி அந்தச் சோதிடர்கள் எழுதியிருந்தாலும் பிரபவாதி விருஷவிஷயமாக அதில் எழுதியிருக்கிற விஷயம் அவர்களுடைய அபிமானப்படியே ஏகதேசிமதமாகையாலும், அந்தக்கொள்கை நமது ஸகலபூர்வக்ரந்தங்களோடும் முரண்படுகிறபடியை நாம் இதில் நன்கு நிரூபித்துக்காட்டி ஸர்வஸம்மதமாம்படி ஒதுக்கியிருக்கிறோமாகையாலும் அநிஷ்டஸம்வலிதமான அந்தக்ரந்தத்தை நாமே எழுதிக்கொண்டதாகச் சொல்லுவது இன்னபுஸ்தகத்தில் இன்னதுவிஷயமென்றுகூடத் தெரிந்துகொள்ளமாட்டாத ஜாட்யவைபவத்தையே வற்புறுத்தும்.

இன்னமும் இவ்விஷயத்தை இங்கு வெகுவிரிவாகவும் அனைவர்க்கும் நன்கு தெரியுமாறும் நிரூபித்துவிடுகிறேன். 'கலியுகம்பிறந்து இப்போது எத்தனை வருஷங்களாயின' என்று விமர்சித்தால் பஞ்சாங்கபேதம்காரணமாக ஒரு லக்கம் எற்றத்தாழ்வாக ஏற்படுகிறதென்று முன்னமே மூதலித்தேன். இன்னமும் ஆராய்ச்சிசெய்து தெளிவு பிறப்பிக்கின்றேன். நம்மாழ்வார் கலிபிறந்த நாற்பத்துமூன்றாநாளில் திருவவதரித்தாரென்று உபயஸம்ப்ரதாயஸ்த ஸகலக்ரந்தங்களும் ஏககண்டமாகக் கூறுகின்றன. அப்போது பிரபவாதிவருஷத்தில் எந்தவருஷம்நடந்து செல்லாநின்றதென்றால் **ப்ரமாதி** வருஷமென்று இதையும் எல்லாரும் ஏககண்டமாகவே நிர்ணயித்தெழுதியிருக்கிறார்கள். **"கலோ வர்ஷே ப்ரமாத்யாஹ்வயே** * என்றுச்லோகமும் பின்பழகிய பெருமாள்ஜீயர் ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவத்தில் உதாஹரித்தருளியுள்ளார். இப்படி அனேக ப்ரமாணங்களுண்டு. ஆகவே கலியின் முதல்வருஷம் **பிரமாதியே**யென்று உபயஸம்ப்ரதாயஸ்தர்களும் நிர்விவாதமாக இசையவேண்டும். இசைந்தேயிருக்கிறார்கள்.

கலி = ௵	கலி = ௵	கலி = ௵	கலி = ௵
1 பிரமாதி	16 ஜய	31 ஸௌம்ய	46 ரக்தாக்ஷி
2 விக்ரம	17 மன்மத	32 ஸாதாரண	47 க்ரோதந
3 விஷு	18 துர்முகி	33 விரோதிக்ருத்	48 அக்ஷய
4 சித்ரபாநு	19 ஹேவிலம்பி	34 பரீதாவி	49 ப்ரபவ
5 ஸ்வபாநு	20 விலம்பி	35 ப்ரமாதீச	50 விபவ
6 தாரண	21 விகாரி	36 ஆனந்த	51 சுக்ல
7 பார்த்திவ	22 சார்வரி	37 ராக்ஷஸ	52 ப்ரமோதூத
8 வ்யய	23 ப்லவ	38 நள	53 ப்ரஜோத்பத்தி
9 ஸர்வஜித்	24 சுபக்ருத்	39 பிங்கள	54 ஆங்கிரஸ
10 ஸர்வதாரி	25 சோபக்ருத்	40 காலயுக்தி	55 ஸ்ரீமுக
11 விரோதி	26 க்ரோதி	41 ஸித்தார்த்தி	56 பவ
12 விக்ருதி	27 விச்வாவஸு	42 ரௌத்ரி	57 யுவ
13 கர	28 பராபவ	43 துர்மதி	58 தாது
14 நந்தந	29 ப்லவங்க	44 துந்துபி	59 ஈச்வர
15 விஜய	30 கீலக	45 ருதிரோத்காரி	60 பஹுதாந்ய

இந்த வருஷக்கண்ணாடியை நன்றாய்க்கண்டுகொள்க. பிரபவாதிவருஷங்களில் இதுவரை எத்தனையோ பர்யாயங்கள் கடந்தாலும் (அதாவது, அறுபது அறுபதாகப் பல அறுபதுகள்கடந்தாலும்) மேலே கண்ணாடியில் நாம்காட்டியிருக்கிறபடி கலிவருஷமும் பிரபவாதிவருஷமும் எந்த பரியாயத்திலும் அந்தக்கணக்குக்குத்தான் சரியாகக்கூடும். அதாவது கலி௵ 343க்கு ப்ரபவாதி௵ என்ன? என்று ஒருவன் அறியவிரும்பி கணக்கிட்டுப்பார்த்து ஏதோ ஒருவருஷத்தை நிச்சயித்தால் அது உண்மையில் தப்பாகஇருந்தால், அப்படி அது தப்புதான் என்பதை ஒருக்ஷணத்தில் நாம்கண்டுகொள்ளலாம். எப்படி? மேலேகாட்டினகண்ணாடிதான் அதற்குப்பொருத்தமான உபாயம். கலி௵ 343க்கு விச்வாவஸு௵ என்று ஒருவன்சொன்னால் உடனே ஷை கண்ணாடியில்பாருங்கள். 3, 13, 23, 33, 43, 53, இந்த ஆறுலக்கங்களில் ஏதாவது ஒருலக்கத்திற்கு நேராகவாவது விச்வாவஸு௵ இருக்கிறதா? என்றுபாருங்கள். உண்டு இல்லையென்பதை ஒருக்ஷணத்தில்கண்டறியலாமன்றோ? இல்லையாயின் ‘அது தப்புதான்’ என்று உடனே தீர்மானமாகச் சொல்லிவிடலாம்.

இதேரீதியில் ஸகல ஆசார்யர்களுடையவும் வருஷக்குறிப்புகளை நாம் ஒரு நொடிப்பொழுதில் சோதித்துவிடலாம். (உதாஹரணம் கவனிக்க.) மணவாளமாமுனிகளின் திருவவதாரம் ஸாதாரணவருஷத்தில் என்று எல்லாருக்கும் ஸ்பஷ்டமாய்த்தெரியும். அந்த வருஷத்திற்கு கலி௵ என்ன? என்றுகேட்டால், கணக்கிட்டுப்பார்த்து ஒருவர் 4471 என்றும், மற்றொருவர் 4472 என்றும் விடையளித்தால் உடனே ஷை கண்ணாடியைப் பார்க்க, அதில் ஸாதாரணவருஷமானது ஒற்றைப்பட்ட கலியுகலக்கத்திற்கெதிரே இல்லாமல் இரட்டைப்பட்ட லக்கத்திற்கெதிரேதான் இருப்பதால் ஸாதாரணவருஷத்திற்கு கலி௵ 4471 அல்ல 4472தான்—என்று தீர்மானிக்கத் தடையே கிடையாது. ஆகவே எதிரி 4472 என்றும் 4471 என்றும் முன்னும்பின்னும் முரணாக எழுதிவெளியிட்டிருப்பதில் 4472 தான் உள்ளது என்பதும் இதனால் விசதமாயிற்று.

யுகாந்தரத்தில் அவதரித்த நான்குஆழ்வார்களைத் தவிர்த்து இந்தயுகத்தில் அவதரித்த மற்ற ஆழ்வார்களுக்கும் ஸ்ரீமந்நாதமுனிகள் தொடங்கி ஸகல ஆசார்யர்களுக்கும் கலிவருஷமும் பிரபவாதிவருஷமும் உபயஸம்பிரதாயத்திலும் அனேக புஸ்தகங்களில் பிராசீநர்களும் நவீநர்களும் குறித்திருக்கின்றனர். அதையும் அடியேன் இதோவரிசையாக எழுதிக்காட்டுகிறேன். [சரியா? தப்பா? என்பதை கீழேபக்கம் 11ல் நான் காட்டின ஸதுபாயக் கண்ணாடியைக்கொண்டு நிர்ணயித்துக்கொள்க.]

முன்னோர்களின் ஸகலக்ரந்தங்களிலு முள்ளபடி

ஆழ்வாராசாரியர்களின் வருஷக்குறிப்பு.

திருநாமங்கள்	கலி ௵ பிரபவாதி ௵	திருநாமங்கள்	கலி ௵ பிரபவாதி ௵
நம்மாழ்வார்	1. பிரமாதி	எம்பார்	4127 க்ரோதந
குலசேகராழ்வார்	28 பராபவ	அனந்தாழ்வான்	4155 விஜய
பெரியாழ்வார்	47 க்ரோதந	பிள்ளான்	4163 ப்லவ or 4169 ப்லவங்க
ஆண்டாள்	98 நள	கிடாம்பியாச்சான்	4159 ஏவிளம்பி
தொண்டரடிப் பொடிகள்	289 ப்ரபவ	பட்டர், சீராம ப்பிள்ளை	4224 சுபக்ருத் 4164 ௸
திருப்பாணாழ்வார்	343 துர்மதி	நஞ்சீயர்	4215 விஜய
கலியன்	398 நள	எங்களாழ்வான்	4208 வ்யய
ஸ்ரீமந்நாத முனிகள்	3685 சோபக்ருத்	அம்மாள்	4267 பார்த்திவ
உய்யக்கொண் டார்	3928 பராபவ	நம்பிள்ளை	4249 ப்ரபவ or 4309 ௸
மணக்கால்நம்பி	3933 விரோதிக்ருத்	வடக்குத்திருவீ திப்பிள்ளை	4269 ஸர்வஜித் 4329 ௸
ஆளவந்தார்	4018 தாது	பெரியவாச் சான்பிள்ளை	௸
பெரியநம்பி	4099 ஏவிளம்பி	கிடாம்பிஅப் புள்ளார்	4322 விக்ரம
திருமாலையா ண்டான்	4090 ஸர்வதாரி	பிள்ளைலோகா சாரியர்	4307 க்ரோதந 4367 ௸
திருக்கோட்டி யூர்நம்பி	4089 ஸர்வஜித்	அழகியமணவா ளப் பெருமா ள்நாயனார்	4309 ப்ரபவ 4369 ௸
திருவரங்கப் பெருமா ளரையர்	4059 பிங்கள	வேதாந்ததேசிகன்	4371 சுக்ல or 4370 விபவ
திருமலைநம்பி	4075 ஸ்ரீமுக	நயினாராசார்யர்	4418 நள
திருக்கச்சிநம்பி	4105 சோபகிருத்	திருவாய்மொ ழிப்பிள்ளை	4401 விகாரி
எம்பெருமானார்	4119 பிங்கள	மணவாளமா முனிகள்	4472 ஸாதாரண
கூரத்தாழ்வான்	4132 ப்ரமோதூத		
முதலியாண்டான்	4129 ப்ரபவ		

பூருவர்களின் க்ரந்தங்களிலும், பிரபந்தாநுஸந்தான தீபிகை, பழ நடை விளக்கம் முதலான நவீநக்ரந்தங்களிலும், தமிழ்வித்வான் வைத்தமாநிதி முடும்பை சடகோபராமாநுஜாசாரியர்ஸ்வாமியும் சே. க்ருஷ்ணமாசாரியர் ஸ்வாமியும் பிராசீனக்ரந்தங்களைக்கொண்டு பலகால் சோதித்தெழுதியதாக வெளியிட்டுள்ள பத்ரிகையிலும், 1913ஆண்டில் வெளிவந்திருக்கும் வேதாந்த தேசிக வைபவப்ரகாசிகையிலும் மற்றும் பலநூல்களிலும் உள்ள குறிப்புகளைத்தான் அடியேன் அப்படியே இங்குக் காட்டியிருக்கிறேன். புஸ்தக பேதேந பக்ஷபேதமாகக்கண்ட இடங்களில் அந்த இருவகைப்பக்ஷங்களையும் அப்படியே குறிப்பிட்டிருக்கிறேன். பிள்ளான், தேசிகன் இவ்விருவருடைய அவதார வருஷக்குறிப்பில் பக்ஷபேதந ஸ்வல்பவ்யத்யாஸமே காண்கிறது. பட்டர், சீராமப்பிள்ளை, நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பெரிய வாச்சான்பிள்ளை, பிள்ளை லோகாசாரியர் ஆகிய ஆறு திருநாமங்களின் அவதாரக்குறிப்பில் பக்ஷபேதேந அறுபது அறுபது வருஷங்கள் வ்யத்யாஸப்படுகின்றன. அந்த பக்ஷத்வயங்களில் எந்தப் பக்ஷம் யுக்தமோ அதை மஹான்கள் பரிஷ்கரித்து நிர்ணயித்துக்கொள்வது. அந்த விஷயங்கள் இப்போது அப்ரஸக்தம். ஷை பக்ஷபேதங்களிலும் எதிரிக்கு அநுகூலமான வருஷ நிர்த்தேசம் சிறிதுங்கிடையாது.

எதையும் தீர ஆராய்ந்தே நிஷ்கல்மஷமாக வெளியிட்டருள்பவரும் ப்ராமாணிகாக்ரேஸரரும் அபரபாஷ்யகாரருமான ஸ்ரீமதுபய வே. திருமலை அனந்தாண்பிள்ளை. புரிசை ஸ்ரீரங்காசாரியர்ஸ்வாமி உபய பாஷைகளிலும் வெளியிட்டருளியிருக்கிற [ஸ்வகுலகூடஸ்த] அனந்தாழ்வான் வைபவத்தில்- கலி 4119 பிங்கள வருஷத்தில் எம்பெருமானார் திருவவதாரமென்றும் 4155 விஜய வருஷத்தில் அனந்தாழ்வான் திருவவதாரமென்றும் ஸப்ரமாணமாக அருளிச் செய்திருக்கிறார். அந்த க்ரந்தமுமுட்பட ஸகல க்ரந்தங்களாலும் அடியேனுடைய நிரூபணமே மெய்ப்பிக்கப்படுகின்றதென்பதை பிராமாணிகர்கள் எவ்வளவேனும் பரிசீலித்தறியலாம். மேலே நாம் விவரித்தபடி பட்டர் முதலான ஆறு திருநாமங்களின் காலக்குறிப்பில் அறுபது வருஷங்கள் வ்யத்யாஸப்படவேண்டிய காரணத்தை எதிரி விமர்சித்து வெளியிடுவாரா?

இப்போது அண்ணா அவதார ஆண்டைப்பற்றி எடுத்துக்கொள்வோம். ப்லவஆண்டு ஆடிமீ க்ருஷ்ணசதுர்தசி புஷ்யநக்ஷத்ரம் வியாழக்கிழமை இவை கூடுகிற கலிவருஷம் எது? என்பதை இப்போது வெகு சுலபமாக நிர்ணயிக்கலாமே. எதிரி முதல்நூலில் தெரிவித்தபடி 4403ஆண்டு அவதார வருஷமல்ல என்பதை அவரே இப்போது (படிபடக்கம் பக்கம் 13ல்) காட்டிவிட்டார்— வியாழக்கிழமை யில்லை யென்பதுபற்றி. 4402 ம் அல்ல என்றும் காட்டிவிட்டார் சதுர்த்தசி யில்லை யென்பதுபற்றி.

இனி அடுத்தபரியாயத்திற் சென்று பார்க்கவேண்டியது அவசியமாயிற்று. நாமும் சோதிடர்களும் நிர்ணயித்திருக்கிறபடி 4463க்குத்தான் வியாழன் சதுர்தசிபுஷ்யங்கள் பொருந்துகின்றன வென்று எதிரியும் அதே

பக்கத்தில் விளக்கியிருக்கிறார். கடைசியாக என்ன வாதம் சேஷிக்கின்றதென்றால் அந்த 4463க்கு அண்ணாவைபவங்களிற் கூறியபடி ப்லவஸூ இல்லை, சுபக்ருத் ஸூதான், ஆகையால் அது அவதார வருஷமல்ல என்று எதிரி கூறுவதைச் சோதிக்கவேண்டியதொன்றே சேஷிக்கின்றது. இந்த வாதத்திலுள்ள பிசகையும் வஞ்சனையையும் விளங்கக் காட்டுவதற்காகவே கீழே அடியேன் பல காலக் கண்ணாடிகள் காட்டியிருக்கின்றேன். மற்ற எல்லா ஆசார்யர்களுடையவும் வருஷங்களைச் சோதித்த விதமாகவே இதையும் சோதித்து ஒரு க்ஷணத்தில் உண்மை யுணர ஒரு தடையுமில்லையே. அக்கண்ணாடியில் சுபக்ருத்ஸூ இரட்டை லக்கத்தில் வருவதாலும் ப்லவ வருஷமே ஒற்றை லக்கத்தில் வருவதாலும் எதிரி வாதம் சிதறி யொழிந்ததென்று செவ்வனே செப்புமின்.

கலிவருஷத்திற்கும் பிரபவாதி வருஷத்திற்கும் (நாம் காட்டியிருக்கிற கண்ணாடிப்படி யன்றியே) ஒரு லக்கம் மாறுபாடாக வரும்படியாய் சில பஞ்சாங்கங்கள் காட்டுவதற்கான காரணத்தையும் இங்கு நிரூபித்து விடுகிறேன் காண்மின். கலியின் முதல்வருஷத்தில் திருவவதரித்த நம்மாழ்வாருடைய வருஷத்தை **ப்ரமாதி** வருஷ மென்று பலபுத்தகங்கள் ச்லோக பூர்வகமாகவும் கூறியிருக்கச் செய்தேயும் ஒரு புஸ்தகம் அந்தப்ரமாதி வருஷஸ்தானத்தில் பஹுதாந்யவருஷத்தை எழுதிவைத்தது. அதைப்பார்த்து அதற்கிணங்கவே வருஷத்தைப் பெருக்கிக்கொண்டுபோய்க் கணக்கிட்டவர்கள் ஏதோவொரு விதமாய் மயங்கியிருக்கவேண்டும்.கருங்குளம் பஞ்சாங்கக்காரர் மற்ற எல்லாப் பஞ்சாங்கக் காரர்கட்கும் பிற்பட்டவராதலால் சிலமஹான்களின் உத்போதநத்தையும் பெற்று இவ்விஷயத்தை விமர்சிக்க ஆரம்பித்து உள்ளபடியே கணக்கிட்டுத் தாம் பிரசுரிக்கத்தொடங்கினர். முன்பஞ்சாங்கக்காரர்கள் விக்ரமவருஷத்தைக் கலி முதல்வருஷமாகக்கொண்டு கணக்கிட்டிருக்கிறார்கள் போலும். அதற்கு ஆதாரம் அறிகின்றிலோம்.

"பஹுதாந்ய வருஷத்தைத்தான் கலியுகாதி வருஷமாகக் கொண்டு கணக்கிடவேணும் §; பிரமாதிவருஷத்தைப் பிடிக்கலாகாது" என்று மூன்றுவதான ஒருவழியில் நம்எதிரி மெல்வதற்கும் இடமில்லாதபடி மணவாளமாமுனிகளின் அவதார வருஷத்தையும் பரமபதவருஷத்தையும் கருங்குளம் பஞ்சாங்கீதியிலேயே தாமே குறிப்பிட்டுவிட்டு இப்போது திருமாலிருஞ்சோலையழகர் விழி விழிக்கிற ரீத்யாதிகள் முன்னமே ஸுவிசதம்.

எதிரி (பக்கம் 11ல்) "ஆசார்யர்களின் காலவிஷயத்தில் காலவிபர்யயங்கள்இருப்பதாக இவர்சொல்லிவிடுவதால் இவர்களின் அண்ணாவின்காலத்

§ நம்மாழ்வாரவதாரம் பஹுதாந்ய வருஷத்திலென்று குறித்திருக்கிற ஒரு புஸ்தகத்தில் பெரியோர்கள் பலவகை ஆராய்ச்சிகளைக்காட்டி ப்ரமாதி வருஷமேதான் இங்கு உத்திஷ்டம் என்று டிப்பணி எழுதிவைத்திருப்பது நோக்கத்தக்கது. அது ஸ்ரீ. வைத்தமாநிதி அப்பங்கார்ஸ்வாமியின் டிப்பணி,

தை நிர்த்தாரணம்செய்ததாக ஆய்விடுமென்று எண்ணுகிறாரா? தப்பைக் கொண்டு தப்பைஸாதிப்பதென்றால் உலகத்தில் தப்புகளே கிடையாதென்ற தாய்விடுமல்லவா?'' என்று எழுதுகிறார். நிரர்த்தக சுஷ்க சப்தராசிகளைத் தெருக்கூசல்களிலே வாரியிறைக்கிறாரே, அப்படியே எட்டிலுமெழுதி விட்டார். ஆசார்யர்களின் காலவிஷயத்தில் விபர்யயங்களிருப்பதாக அடியேனெழுதியிருக்கிறேனும். நாமெழுதாததை எதிரி வேணுமென்று ஏறிட்டுஎழுதியிருப்பதாக அடியேன் எண்ணவில்லை; அடியேன் விளக்க நூலில் எழுதியிருந்தவற்றுக்கு இவர் அர்த்தம் க்ரஹித்த அழகு இது-என்றே எண்ணுகிறேன். 'இது ஸ்வோக்தி, இது பரோக்திகளின் அநுவாதம்' என்பதைக்கூட அறியகில்லாதே ஆரவாரிப்பதுமுண்டோ? அது ஸ்வோக்தியாகவேயிருந்தாலும், தப்பைக்கொண்டு தப்பை ஸாதிப்பதென்கிற பேச்சுக்கு இங்கு இடமேது? * 𑌯𑌤𑍍𑌰𑍋𑌭𑌯𑍋𑌸𑍍𑌸𑌮𑍋 𑌦𑍋𑌷𑌃 𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑍋𑌽𑌪𑌿 𑌵𑌾 𑌸𑌮𑌃 𑌨 𑌤𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌯𑌤𑌰𑍋 𑌦𑍂𑌷𑍍𑌯𑌃 * என்பது மஹா சாஸ்த்ரஜ்ஞர்களின் நியமநம்.இதற்கு இலக்காகுமாறு அடியேன் எழுதியிருந்ததை உணராதவற்கு உரைப்பதெல்லாம் ஊமையரோடு செவிடர்வார்த்தை.

எதிரி (பக்கம் 35ல்) "சரித்திரத்திற்கும் காலத்திற்கும் முரண்பாடு உண்டானால் சரித்திரத்திற்கு ப்ராபல்யம்கொடுக்கிற இவர்களின் புத்தியின் கூர்மையே கூர்மை! இவர்கள்சொல்லுகிற காலத்தில் இவர்கள்சொல்லுகிற வ்யக்தி இருந்தாலன்றோ அவரைப்பற்றிய சரித்திரம் நிலைநிற்கும்; வ்யக்தியே இல்லாவிட்டால் சரித்திரம் யாரைப்பற்றிநிற்கும்?'' என்கிறார். ஆராய்ச்சிமுறைமை இன்னதென்பதே இவர்க்குத் தெரியாது. 'லக்கம் புரண்டு விழுந்திருக்கின்றது' என்பதா காலஆராய்ச்சி. அந்தோ! இதுகேளீர்; தேசிகனுக்கும் க்ருஷ்ணமிச்ரனுக்கும் நேரே வாதம் நிகழ்ந்ததாகப் பிறர் எழுதிவைத்திருந்தார்கள். அது ஸூதராம் அஸம்பாவிதமென்று அடியேன் பாதுகாஸஹஸ்ராவதார தத்துவத்தில் (பக்கம் 12, 13களில்) நிரூபித்தேன். எப்படி நிரூபித்தேன். பிறர் மறுவாய்திறக்க வழியில்லாதபடியும், மெய்யே என்று தலைசாய்க்கும்படியும் நிரூபித்தேன். க்ருஷ்ணமிச்ரனுடையதான ப்ரபோத சந்த்ரோதயநாடகம் தேசிகனுக்கு வெகு முற்காலத்திலேயே படந பாடநப்ரசாரத்திலிருந்ததென்பதை, தனிச்லோகியில் * 𑌸𑍍𑌵𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌵𑍍𑌯𑍁𑌤𑍍𑌪𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌯𑍋𑌗 வியாக்கியானத்தில் * 𑌸𑌹𑌮𑍂𑌰𑌯𑍇 𑌜𑌾𑌰𑌸𑍍𑌸𑍍𑌵𑌤𑍀𑌰𑍍𑌸𑌹𑌜𑌾𑌤𑌨𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌥𑌸𑍍𑌯 𑌪𑌾𑌵𑍀𑌦𑌹𑌜𑌤𑍍𑌮𑌹𑍋𑌰𑌿𑌦𑍃𑌷𑍍𑌵𑌹𑌾 * என்கிற ப்ரபோதசந்த்ரோதயச்லோகம் (தேசிகனுக்குமுற்பட்ட) பெரியவாச்சான்பிள்ளையினால் உதாஹரிக்கப்பட்டிருப்பதை யெடுத்துக்காட்டி, அவ்வளவோடும்நில்லாமல்,

* 𑌦𑍇𑌶𑌿𑌕𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑌿𑌶𑍍𑌰𑌯𑍋𑌃 𑌕𑌾𑌲𑌵𑌿𑌪𑍍𑌰𑌕𑌰𑍍𑌷𑌸𑍍𑌯 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑍇𑌨𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌾𑌦𑌿𑌨𑌾𑌸𑍍𑌵𑍀𑌕𑌾𑌰𑌾𑌤𑍍 । 𑌤𑌥𑌾𑌹𑌿; 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌵𑌰𑍍𑌮𑌨𑌸𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌤𑌰𑌭𑌾𑌵𑍀 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌿𑌜𑌯𑌃 𑌸𑍋𑌽𑌪𑌿

𑌯𑌸𑍍𑌯 𑌕𑌾𑌵𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌬𑍋𑌧𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍋𑌦𑌯𑌃 𑌪𑍍𑌰𑌣𑍀𑌯𑌤𑍇𑌤𑌿 𑌤𑌤
𑌏𑌵 𑌸𑍍𑌪𑌷𑍍𑌟𑌮𑍍। 𑌸 𑌚 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌵𑌰𑍍𑌮𑌾 𑌏𑌕𑌾𑌦𑌶𑌶𑌤𑌕𑍇 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌬𑍍𑌦𑍀
𑌯𑍇 𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌤𑌃 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌂𑌶𑍀𑌯𑍋 𑌰𑌾𑌜𑍇𑌤𑌿 𑌐𑌤𑌿𑌹𑌾
𑌸𑌿𑌕𑌾𑌃. 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌸𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌬𑍍𑌦𑍀𑌯 𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑌶𑌤
𑌕𑌸𑍍𑌯 𑌉𑌤𑍍𑌤𑌰𑌾𑌰𑍍𑌧𑍇 (A. D. 1268) 𑌸𑌂𑌵𑍃𑌤𑍍𑌤𑌾 𑌇𑌤𑌿 𑌤𑌦𑍀𑌯𑌚𑌰𑌿
𑌤𑍍𑌰𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍇𑌭𑍍𑌯𑍋𑌽𑌵𑌗𑌮𑍍𑌯𑌤𑍇॥ 𑌏𑌵𑌞𑍍𑌚 𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑌿𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌬𑌹𑍁
𑌨𑌵𑍀𑌨𑌾 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌦𑍇𑌶𑌿𑌕𑌾 𑌇𑌤𑌿 𑌸𑍁𑌨𑌿𑌰𑍍𑌣𑌯𑌮𑍍 *

என்று ராஜாங்கசாஸந நிரூபணபூர்வகமாக நிலைநாட்டினேன். இதன்பலன் என்னவென்றால், இந்த ஆராய்ச்சியை அடியேன் வெளியிடுவதற்கு முன்னே ஸங்கல்பஸூர்யோதயபீடிகையில் தேசிகனுக்கும் க்ருஷ்ணமிச்ரனுக்கும் நேரே விவாதம்நடந்ததாகவும் அப்போதுதான் ப்ரபோதசந்த்ரோதயநாடகத்தை அவன்எழுதிக்கொண்டுவந்துகாட்டினதாகவும் கல்பித்தகதையை எழுதிவெளியிட்டிருந்த திருவயிந்திரபுரம் சேட்லூர் ஸ்ரீமாந் நரஸிம்ஹாசாரியர், இந்த ஆராய்ச்சியை அடியேன் வெளியிட்டபிறகு(சென்ற ஆங்கீரஸ வருஷத்தில் (அவரே) **தேசிகசரித்ரவிமர்ச** மென்றொரு புஸ்தகம் வெளியிட்டு, அதில் (பக்கம் 137ல்)**க்ருஷ்ணமிச்ரநிரஸநம்** என்ற மகுடத்தின் கீழ்,

"ஸ்வாமி க்ருஷ்ணமிச்ரனை ஜயித்ததும் அவன்தானெழுதிய ப்ரபோத சந்த்ரோதய நாடகத்தைக் காட்டினதாக வைபவப்ரகாசிகாதிகளில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ப்ரபோதசந்த்ரோதயநாடகத்தை எழுதிய க்ருஷ்ணமிச்ரன் (கி. பி.) பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் பதிமூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இருந்தவனென்றும், அந்த நாடகம் கலி 4301. கி. பி. 1200) ளுத்தில் எழுதப்பட்டது என்றும் **விமர்சகர்களினாலே** நிஷ்கர்ஷிக்கப்பட்டிருப்பதினால் **அந்தக்கவி ஸ்வாமியுடன் நேரில்வாதம் செய்திருக்கமுடியாது."**

என்று எழுதி நாடெங்கும் பரவவிடும்படியாயிற்று. "அண்ணங்கராசாரியர் நிரூபணம் செய்துவிட்டா ரென்பதற்காகவே இப்படிகூட நிர்லஜ்ஜமாய்த் தாமெழுதியிருந்த கதையைத் தாமே மறுத்து எழுதிவிடலாமா?" என்றும் அந்த சேட்லூர்ஸ்வாமியின்மேல் வேறொரு ஸஜாதீயர் புஸ்தகம் வெளியிட்டிருக்கிறார். அவரோ எதற்கும் வாய் கை திறப்பதில்லை.

ஒருவருடைய காலத்தை நிரூபணம்செய்வதென்றால் இப்படியன்றோ 𑌸𑌵𑍍𑌯𑌾𑌜𑌾(?)சாஸநங்களைக்காட்டி, பிறரின் வாயைக் கையைக் கட்டி நிரூபிக்கவேண்டும். இங்ஙனே ஒரு சரக்குமில்லாமல் பொறாமையொன்றையே பெரியசாஸநமாகக்கொண்டு இழிந்தவர்களுக்கு எங்ஙனே வெற்றி கிடைக்கும்?

மேலேவிவரித்தவிதமாக அடியேன் க்ருஷ்ணமிச்ரன் விஷயமாகப் பிரசுரஞ்செய்திருந்ததைக் கண்ட கும்பகோணம் கோமளாம்பா அச்சுக்கூடத் தொழிலாளர்முதலான சிலர் அதன்மேல் விஷயஞ்சொல்ல முடியாமலும் வருத்தம் தாங்கமாட்டாமலும், பிரதியாக ஏதேனுமொன்றுசெய்து தரிக்க வேண்டியும் அவர்களே இந்த அபத்தச்சுவடிகளைக் கிளப்பித் தமது அச்சுக் கூடத்தில் பதிப்பித்து இதனுல் ஒருவாறு த்ருப்தியடைகின்றுர்களென்றும் சிலர் தெரிவிக்கின்றுர்கள். உண்மையை ஆராவமுதனே அறியவேணும். நடாதூரம்மாள் கலி 4267 பார்த்திவ வருஷத்தில் அவதரித்து நூறுண்டு ஜீவித்திருந்து பரமபதித்தாரென்றும், தேசிகன் 4370ல் அவதரித்தாரென்றும் ஸ்பஷ்டமாக எழுதியுள்ள பிறர்கள் அம்மாள் பரமபதித்தபின் மூன்று வருஷங்கடந்த பின்னரே தேசிகன் திருவவதரித்தாரென்பதை நிர்விவாதமாக்கிவைத்து, அந்த அம்மாளுடைய காலக்ஷேபகோஷ்டியில் தேசிகன் இளமையில் எழுந்தருளினுரென்றும் எழுதிவைத்திருக்கிற ஸம்விசேஷங்களைப்பார்த்தால், பிறருடைய க்ரந்தங்களிலே அவத்யங்கூறவும் அவர்களுக்கு எண்ணமுண்டாகுமோ? ஒருகாலும் அவர்கள் இதிலே தலையிட்டுப் பங்கமடையார் என்றும் சிலர் தெரிவிக்கிருர்கள். ... ...

அண்ணுவுக்கு ஞானமே கிடையாதென்றும், ஜ்ஞாதா என்கிற காரணத்தினுல் அவர் வாதத்திற்கு வாதகுருவால் அனுப்பப்படவில்லை யென்றும் எதிரி புநঃ புநঃ எழுதுகிருர். தயாஸ்த. மஹாநஸ கைங்கரியமேதான் அவர்க்குத் தெரியுமென்றும் வ்யக்தமாகச் சொல்லட்டும். * ஶ்ராவணேऽவதீர்ணம் ... யீதூஹாஹ வெஷாநஶேஷாநு என்னப்பட்ட ஒரு ஆழ்வார் ஆனியில் அவதரித்தாப்போலே அப்படிப்பட்ட ஒரு ஆசாரியர் ஆடியிலவதரித்தாரென்று போற்றுகிறோம்.

*அநலஸ்தவஸஸ்தாயஂாநு அலஸ்தாஜவ ஹஂரிஶঃ।
ஸ்வஶா ஶஶ வஸஂஷிஙாஸ்ஷாவாயஂவரிஶ்ஹாஸ॥ * என்று

அண்ணு தாமே அநுஸந்தித்ததாக வடகலை குருபரம்பரையில் எழுதப்பட்டிருக்கிறதாம். அது கொண்டுதான் அண்ணுவுக்கு ஒன்றுந் தெரியாதென்று சொல்லுகிருராம். * மூர்க்கனேன் வந்துநின்றேன் மூர்க்கனேன் மூர்க்கனேனே * என்றும் இங்ஙனே பலவும் அநுஸந்தித்த ஆழ்வார்களையும் ஆசார்யர்களையும் மூர்க்கர்கள் பாபிகள் என்று கிரந்தமெழுத என்றைக்கு நாள் பார்த்திருக்கிருரோ? அது கிடக்க. அவ்யுத்பந்நசிகாமணியொருவன் நிருமித்த அந்தச்லோகத்தை இந்த வித்வத்சிகாமணியும் உதாஹரித்து ப்ரஸங்கித்துவிட்டார்; இதற்கு எப்படி அந்வயம்? என்ன அர்த்தம்? என்று இவர் சொல்லிவிடுவரேல் நாடோறும் முச்சந்தியும் இவரையே தொழுவோம். அந்தோ! நிரக்ஷரகுக்ஷிகளைநோக்கி நமக்கு ஈதென்ன வீண் ப்ரதிஜ்ஞை!.

‘வேதாந்த ஸூரிபத ஸம்ஸ்ரித’ தனியன் விசாரம்.

மேற்குறித்தவொரு தனியனைப்பற்றி எதிரி வித்வன்மனோரஞ்சனத்திலேயே ப்ரஸங்கித்திருந்தார். அதைப்பற்றி அடியேன் விளக்கநூலில் ஒன்றும் எழுதிற்றிலேன். அஸ்மத்ஸ்வாமி அருளிச்செய்த **ஆசார்யசர்யாம்ருத**த்திலாவது அதற்குமுந்திய வைபவநூலிலாவது அந்தத்தனியன் ப்ரஸ்தாவமில்லாமையால், * யதார்த்தவாதீ பஹுஜநத்வேஷீ * என்கிறநியாயத்தைத் திருவுள்ளம்பற்றிப் பெரியார்கள்தாம் வெளியிடாதுவிட்ட விஷயத்திலே நாம் சில எழுதுவானேன்? என்றுகொண்டு முன்னூலில் விட்டிட்டேன். இப்போது படியடக்கத்தில் எதிரி இதைப்பற்றி ப்ரபலமாக ப்ரஸங்கிக்கிறார். இன்று விடை கூறுகின்றேன்.

ஒரு ஆசாரியர்க்குப் பல தனியன்களுண்டாவது ப்ரஸித்தம். குருபரம்பரையில் பெரியபெருமாள் பிராட்டி ஸேனைமுதலியார் முதலானூர்க்கு இப்போது நாம் அநுஸந்தித்துவரும் தனியன்கள் பட்டர் அருளிச்செய்தவை என்பது ஸ்பஷ்டமான விஷயம். ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் இடையிடையேயுள்ளச்லோகங்களைத்தான் அவர்களுக்குத் தனியன்களாக அநுஸந்தித்து வருகிறோம். பட்டர்க்கு முன்னிருந்த ஆழ்வான் + நாதமுனிகள்முதலானோர் எந்தத் தனியன்களை அநுஸந்தித்துவந்தார்கள்? என்று விசாரம் வரின், ‘அவர்களநுஸந்தித்துவந்த தனியன்கள் இவையல்ல, வேறுதனியன்களே’ என்று யாவரும் இசைந்தேதீரவேண்டும். இப்படியே வடவாசார்ய ஸம்ப்ரதாயத்திலும் தேசிகனுடைய யதிராஜஸப்ததியிலுள்ள ச்லோகங்களையே அவர்கட்குத் தனியன்களாக அநுஸந்தித்துவருவது ஸுப்ரஸித்தம். “தேசிகனுக்குமுந்திய கிடாம்பியப்புள்ளார் அம்மாள் பிள்ளான்முதலானோர் அநுஸந்தித்த தனியன்கள் இவையல்ல, வேறு சிலவே’ என்றுதான் அவர்களுஞ் சொல்லித்தீரவேண்டும். ஆதலால் ஒரு ஆசிரியர்க்கு ஒருகாலத்திலே ஒரு தனியனும் மற்றொருகாலத்திலே மற்றொருதனியனும் வழங்குவதுண்டென்பது ஒருவராலும் அபலபிக்கமுடியாத விஷயமாகும். இந்தரீதியிலே அண்ணவுக்கு மணவாளமாமுனிகள் காலத்திலேஏற்பட்ட தனியன் ஒன்றும், பிற்காலத்திலே ஏற்பட்ட தனியன்ஒன்றும் இருப்பது ஸாதாரணமான விஷயம்.

இதரஸம்ப்ரதாயஸ்தர்கள் தேசிகனுடைய தனியனைச் சில **வட்டங்**களிலே **ஸ்ரீமாந்வேங்கடநாதார்ய:** என்றும் சில**வட்ட**ங்களிலே **ராமாநுஜதயாபாத்ரம்** என்றும் அநுஸந்தித்து வருதல்போலவும், நம்முடைய ஸம்ப்ரதாயத்திலும் பிள்ளைலோகாசாரியர் தனியன் * **லோகாசார்யாய குரவே** * என்று சில ப்ரகரணங்களிலும் * **ஶ்ருதப்ரகாஶிகா யஸ்மை ஸம்ப்ரகாஶ்ய விஶதீக்ருதா । நீதா ஸம்ப்ரகாஶ்ய**

யெ-ஹ்ண ஜொகாவாயஸ் தஸாஸ்மயெ * என்று சில ப்ரகரணங்களிலும் அநுஸந்திக்கப்பட்டு வருதல் போலவும் அண்ணு தனியன்களும் இரண்டு அநுஸந்திக்கப்பட்டு வருகின்றன. புரிசை அனந்தாண்பிள்ளையார் திருமாளிகை குருபரம்பரை ஏற்கனவே பலஆண்டுகளுக்குமுன் அச்சிட்டு வெளிவந்திருப்பதை யெடுத்து ஸேவித்தால் இவ்வுண்மைகள் தெளிவாகும் [இனி அடுத்தபடியாக நம் எதிரி நம்மைவிட்டு ஸ்வாசார்ய தூஷணத்திலே தான் கைவளர வேண்டியிருக்கு மென்கிற ஒரு ஸூக்ஷ்மார்த்தத்தை அடியேன் இங்குச் சோதிடமாகவும் திடமாகவும் எழுதிவைக்கிறேன்; இதன் வாய்மையை அநுபவத்தில் காண்பீர்களாக.]

இந்த * **வேதாந்தஸூரிபத ஸம்ஸ்தித** தேத்யாதி தனியனுக்கு நம் எதிரி அர்த்தமெழுதி ஆக்ஷேபங்கள் செய்திருப்பதெல்லாம் இவருடைய நிரக்ஷரகுக்ஷித்வத்தை இந்நூலிலே நாம் கல்வெட்டாக்கியிருக்கின்றமைக்கு முக்கியாதாரமான சிறந்த சாஸனமேயாகும். இதனை விவரிக்கின்றேன், அறிவுடையீர்! ஆராய்மின். அண்ணு தேசிகனுடைய ஸம்ப்ரதாயத்திலிருந்த தவறுதலான அர்த்தங்களை **அதிகரித்துவிட்டு** அந்தத்தவறுகளை அகற்றிக் கொள்ள மணவாளமாமுனிகளை வந்துபணிந்தாரென்று இந்தத்தனியன் கூறுவதாக எதிரி பலகாலும் எழுதுகின்ருர். இது அபார்த்தம். அண்ணு தேசிகஸம்ப்ரதாயத்திலிருந்த தவறுதலான அர்த்தம் யாதொன்றையும் அதிகரிக்கவில்லை; அதைப்பிறகு திருத்திக்கொள்ள நேர்ந்ததுமில்லை. எதிரி சொல்லுகின்ற அர்த்தத்தை அந்தத்தனியன் தாங்கவுமில்லை. அண்ணு தேசிகஸம்ப்ரதாயத்தில் ஸ்ரீபாஷ்யம் அதிகரித்திருந்தார். [அதில் தவறுதலான அர்த்தம் யாதொன்றுமில்லையென்பதை பக்கம் 29முதல் உபபாதித்திருக்கிறேன்.] ஸ்ரீபாஷ்யம்போல மற்ற பகவத்விஷய ரஹஸ்யார்த்தங்களையும் அந்த ஸம்ப்ரதாயத்திலேயே ஸேவிக்க விரும்பமுடியாதபடி அந்த ஸம்ப்ரதாயத்திலே அவ்விஷயங்களில் ஸ்காலித்யமிருப்பதாகக் கண்டாராதலால் ஸ்ரீலோகாசார்ய பரம்பரையினரான தாம் அந்தலோகாசார்யருடைய ஸத்ஸம்ப்ரதாயம்ஓங்குமிடமான மாமுனிகள் பக்கலிலே வந்துபணிந்து, அவரால் பின்னையும்ஒளிமல்குவிக்கப்பட்ட புத்தியையுடையராகி ஸ்ரீபாஷ்ய ப்ரவசநம் (அண்ணு)செய்தருளினுர்-என்கிற இவ்வளவைத்தான் அந்தத்தனியன் கூறுகின்றது. **வேதாந்தஸூரிபத ஸம்ஸ்தித ஸம்ப்ரதாய ஸ்காலித்யத்ருக் வரவரம் முநிம் ஆச்ரிதோ ய:**=என்கிற ஆநுபூர்வியை ஒவ்வொரு அக்ஷராஸ்யரும் மேலெழுந்தவாரியாகப் பார்த்தாலும் போதுமே. **"ஸ்ரீராமமந்த்ர நிஷண்ணம் அஹிம் நிரீக்ஷ்ய ஸ்ரீக்ருஷ்ணமந்த்ரமவாப குமாரசர்மா"** என்று ஒருச்லோகம் மேற்குறித்தச்லோகநடையில் சிறிதும் வேறுபடாதது. குமாரனென்கிற வொருவன் ஸ்ரீராமனகத்திலிருந்த பாம்பைப்பார்த்துவிட்டு ஸ்ரீக்ருஷ்ணனகத்திற்கு வந்து சேர்ந்தானென்று இதன் பொருள்.

இப்படி ஒருவன் சொன்னுல், "குமாரன் ஸ்ரீராமன் வீட்டுப் பாம்பினுல் கடியுண்டுவருந்தி சிகித்ஸைக்காக ஸ்ரீக்ருஷ்ணன் வீட்டுக்கு வந்து சேர்ந்தா

னென்று இதற்கு அர்த்தம்” என்று ஒருமூடன் கூடச் சொல்லமாட்டானே. பாம்பின்வாயில் விழாதுவந்து சேர்ந்தானென்கிற பொருள்தவிர வேறொரு பொருள் பொருந்துமாவென்பதை யாரும் பார்க்கலாம். அதுபோலவே அண்ணா அந்த ஸம்ப்ரதாயத்திலிருந்த விபர்யாஸங்களுக்கு இலக்காகாமல் இங்கே வந்து சேர்ந்தார் என்கிற அர்த்தம் தவிர வேறு அர்த்தமுண்டோ?

எதிரி நினைக்கிறபடி அர்த்தமிருக்கவேணுமாகில் * வேதாந்தஸூரி ஸூத ஶுஶ்ரூஷித ஸம்ப்ரதாய ஸ்காலித்ய தப்தஹ்ருதய: * என்றோ, *வேதாந்தஸூரிதநயாயிததாயதோஷாத்ஸூரிவிசேஷ ஶரணாயிதது வரம் உபநீதஜந்து * என்றோ வேறு எத்தனையோவிதமாக ச்லோகம் எளிதாகவே அமைக்கப்பட்டிருக்கும். அப்படிப்பட்ட ப்ரஸக்தியே வஸ்துத: இல்லாமையினால்தான் அடியேன் கீழ்விவரித்த அர்த்தமே யாகும் படி தனியன் அமைந்திருக்கின்றது.

உத்தரார்த்தத்தில் சிக்ஷிதபதம்பிழைதிருத்தப்பெற்றாரென்றபொருளைத் தருகின்றதென்றலும் தவறு. தப்புவழியிலிருந்தவனைத் தவறுதவிர்த்து வேறு வழிப்படுத்துவதே சிக்ஷாபதார்த்த மென்று எதிரியின் நினைவுபோலும். அந்தோ! இதுவும் ஒருபரிதாபமே!. காளிதாஸர் மாலவிகாக்னிமித்ர நாடகத்தில் - * ஶிக்ஷா க்ரியா கஸ்ய விசேஷயுக்தா * என்றுப்ரயோகித்திருப்பதும், தேசிகனும் யதிராஜஸப்ததியில் “வயஸ்ஸ்தவ்யம் வயஸ்யேவ ஷட்” என்றச்லோகத்திலே “சூக்ஷ்வாதம் ஶிஶிக்ஷே” என்றருளிச் செய்திருப்பதும் இங்ஙனே ஸம்ஸ்க்ருதத்தில் பல்லாயிரமிடங்களில் ‘சிக்ஷா’ ப்ரயோகமிருப்பது வாசித்தவர்களுக்கன்றோ தெரியும். மணவாளமாமுனிகள்தாமும் முமுக்ஷுப்படி வியாக்கியானத்திலே உதாஹரித்தருளின தேசிக திவ்யஸூக்தியாகிய * ஸத்புத்திஸ் ஸாதுஸேவீ * என்கிற (ந்யாஸவிம்சதி) சிஷ்யலக்ஷணச்லோகத்திலே * க்ருதவிதவிஹிதம் தத்வதஶ்ஶிக்ஷணீய: * என்றிருப்பதையும் நோக்குக. ‘ஆசாரியன் சிஷ்யனுக்கு வித்யோபதேசம் பண்ணக்கடவன்’ என்றுமாத்திரம் அங்குச்சொல்லுகிறதேயன்றி வேறில்லை. தவிரவும், அந்த தேசிகனே * உடையவர் திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீபாதத்திலே ரஹஸ்யார்த்தங்கள் சிக்ஷித்தார் * என்று(ரஹஸ்யத்ரயஸார) குருபரம்பராஸாரத்திலே அருளிச் செய்திருப்பதை முன்னமே எடுத்துக் காட்டியிருக்கிறேன். உடையவர் வேறொரு ஆசார்யரிடத்தில் முதலில் கேட்டிருந்த ரஹஸ்யார்த்தங்களில் தவறுகள் இருந்து அதை நம்பிகளின் ஸ்ரீபாதத்திலே திருத்திக்கொண்டாரென்று யாரேனும் இதற்குப் பொருள்கூறுவாருண்டோ?

கிம்பஹுநா? ஒருபதத்தின் உண்மையான பொருளைத் தெரிந்து கொள்ள * ஶக்திக்ரஹம் வ்யாகரணோபமாநகோசாப்தவாக்யாத் வ்யவஹாரதச்ச * இத்யாதி சாஸ்த்ரப்படியே வியாகரணமும் கோச

மும் நமக்குச்சிறந்த கைவிளக்கு. வியாகரணத்தைப்பார்த்தாலோ * **ஶிக்ஷ-வித்யோபாதாநே** * என்றுதான் தாதுபாடமுள்ளது. * **ப்ரவீணே நிபுணாபிஜ்ஞ விஜ்ஞ நிஷ்ணாத ஶிக்ஷிதா:** * என்று அமரமுமுள்ளது. இனி விஸ்தரம் வேண்டா. இவ்வளவு ப்ரமாணங்களாலும் எதிரியின் துர்வாதம் தூர விலகும். சிக்ஷணமாவது திருத்துதல் - என்றே கொண்டாலும் * பயனன்ருகிலும் பாங்கலராகிலும் செயல்நன்ருகத் **திருத்திப்** பணி கொள்வான் * இத்யாதிகட்டளையிலே ஆசாரியன் சிஷ்யனுக்கு உபதேசிக்கிற ஒவ்வொரு அக்ஷரமும் சிக்ஷணமேயாகும். * தீர்ந்தவடியவர்தம்மைத் **திருத்திப்பணி** கொள்ளலல்ல, ஆர்ந்தபுகழச்சுதன் * என்று ஆழ்வாருமருளிச் செய்கிருர். ஒரு மதத்திலிருந்து கெட்டு வந்தவர்களை எம்பெருமான் அந்த மதத்தவறுகளைப் போக்கிப் பணிகொள்கிருனென்ரு இதற்குப் பொருள்? * திருந்து வேதமும் வேள்வியும் * இத்யாதி.

உத்தரம் ஶ்ருதஸிமஶ்ருஹாரணேந.

எதிரி தமது அபத்தக்களஞ்சியத்தின் முதலிலே, துராக்ரஹநிராக்ருதியென்ருெரு புஸ்தகம் அடியேன் வெளியிட்டிருப்பதாகவும், அதில் தேசிகனைப்பற்றி வாசாமகோசரமான தூஷணங்களை யெழுதியிருப்பதாகவுங் கூறி இரண்டுவாக்கியங்களை உதாஹரித்துக்காட்டியுள்ளார். இப்போது அடியேன் வெளியிடுகிற இந்த வாதிபீகரவிஜய க்ரந்தம் எனது நூல்களில் தொண்ணூற்று மூன்ருவது. இதற்குமுன் அடியேன் வெளியிட்டிருக்கிற நூல்களெல்லாம் பலபல ஸூசீபத்ரங்களில் ஏறி உலகம் பரந்தவை. அடியேனுடைய உபந்யாஸங்களை ஸங்க்ரஹித்து வித்யார்த்திகள் தமது பெயரால் வெளியிட்டிருக்கும் நூல்களும் பத்தெட்டு உண்டு. இவ்விருவகுப்பிலும் சேராததும், காலஞ்சென்ற திவான்பஹதூர். தட்டை ரங்காசாரியர்ஸ்வாமி [சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜ் பதவியில்வாழ்ந்த] டி. ஸதாசிவய்யரை தூஷித்து ஏதோ எழுதியிருந்ததற்கு பதிலாக அந்த ஸதாசிவய்யரால் நியமிக்கப்பட்ட வொருவர் வெளியிட்டதுமான அந்த துராக்ரஹ நிராக்ருதிச் சுவடியை அடியேன் வெளியிட்டதாக எழுதிக் கண்மூடி ஜனங்களை இவர் வஞ்சித்தாலும் அதை யெடுத்துப்பார்க்குமவர்கள் ‘எதிரியின் வஞ்சகமெல்லாம் இப்படித்தானிருக்கும்போலும்’ என்று ஒரு க்ஷணத்திலுணர்ந்து நிஷ்டீவனமே செய்வார்கள். இப்படி அஸத்தான வொருவிஷயத்தையெழுதி, தமது துர்வாதங்களுக்கு தேசிகபக்தர்களையும் துணைகூட்டிக்கொள்ளப் பாரிக்கிறவிவர் உண்மையில் அடியேனுடைய பெயர்புனைந்தே வெளிவந்துள்ள பல நூல்களிலிருந்து இஷ்டமான வாக்கியங்களை அளவின்றி உதாஹரித்துக் காட்டி அவர்களுடைய அபிமானத்தை விசேஷமாக அடையலாமே.

மேற்குறித்த வாக்கியங்களை எதிரிநூல் வெளியிட்டிருப்பதானது உண்மையில் எதிரியின்காரியமன்று; ஸத்தியமாகச் சொல்லுவேன். அந்தச் சுவடியை அச்சிட்டிருப்பது கும்பகோணம் கோமளாம்பா அச்சுக்கூடம். அங்குத் தொழில்செய்பவர்சிலர் ஷை வாக்கியங்களைக் காட்டி வீண்போராட்டங்கள் புரிந்து சில அஸம்பத்த ப்ரலாபங்களைச் செய்து கடைசியாகக் **கும்பகோண ப்ராச்சோர்ச்சாடந மந்த்ரமஹோததியின்** முதல்தரங்கத்தில் அமுக்குண்டு இன்னமும் தலைதூக்கமுடியாமே தளர்ந்து, பாலகாண்டத்திலே

மறைந்து ஆரண்யகாண்டத்திலே * 𑌅𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌂 𑌹𑌿 𑌤𑌤𑍍𑌤𑍇𑌜𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌾 𑌜𑌨𑌕𑌾𑌤𑍍𑌮𑌜𑌾 * என்று அற்புதமாகச் சொல்லிவைத்தும் தலைவிதியாலே மாயவுருக்கொண்டு வந்துமுடிந்தான்படியிலே நிற்பார் செய்கின்ற சூதுகள் இவை - என்பதை விளக்கநூலின் முடிவுரையிலேயே ஆப்தஸம்வாதமுகேந அறிவித்திருக்கின்றேன். யாருடைய எந்தச் சூதும் * சுடரொளிபரந்தன சூழ்திசையெல்லாம் துன்னியதாரகை மின்னொளி சுருங்கியென்றகணக்கிலே முப்பதுநாழிகைக்குள்ளே மாய்ந்தொழிய வேண்டு மத்தனையல்லது முப்பத்தோராவது நாழிகைக்குத் தலைகாட்டிநிற்கமாட்டா தென்பது திண்ணம். எதிர்த்தலையின் மிடுக்கறிந்தும் அதிகாய ப்ரஹஸ்த மேகநாத கும்பகர்ணாதிகள் 𑌦𑍀𑌪𑌶𑌲𑌭𑌨𑍍𑌯𑌾𑌯𑍇𑌨 மேன்மேலும் விழுந்துமடிந்த கதைதான் ரஸிகர்களின் ஞாபகத்தில் நிலைநின்றிருக்கும்.

இவ்வளவோடே இந்த ஸாரஸங்க்ரஹத்தைத் தலைக்கட்டுகின்றேன். எதிரியின் சூதுமாயமயக்கங்களை வெகுவிரிவாக விவரிக்கின்ற விஷயங்களும், அண்ணா தனியன்கள்விஷயமாக எதிரி ப்ரஸங்கித்திருந்த துர்வாதங்களுக்குத் தினவடங்க ஸமாதானங்களும், இருஸம்ப்ரதாயங்களின் அனேக ரஹஸ்யார்த்த நுட்பங்களும், பிரதிவாதிபயங்கர வம்சீயர்களின் தீர்த்தமரியாதைச் சிறப்புவிஷயங்களும், மணவாளமாமுனிகளின் திவ்யஸூக்தி ஸத்குணவைபவங்களும் முதலான அத்யாவச்யகாநேக விஷயங்கள் உலகநன்மையைநோக்கியே இந்த வாதிபீகரவிஜய க்ரந்தத்தில் பிரதிபக்ஷி துர்வாதகண்டனமென்பதைச் சிறிய வியாஜமாகக்கொண்டு ஸாரமாக விளக்கப்பட்டிருக்கின்றன. ஸத்ஸம்ப்ரதாய ஸாராம்ருத பிபாஸுக்கள் பருகிக்களித்து * உண்டுகளித்தேற்கு உம்பரென்குறையென்றுகொண்டு * கோத்துக்குழைத்துக் குணலையாடித்திரியலாம்.

அண்ணா தனியன் இதர ஸம்ப்ரதாயஸ்தர்களும் எதிரியும் சொல்லுகிறபடியன்றியே ஸத்ஸம்ப்ரதாயப்படியேதான் இருக்கவமையும் என்பதற்குப் பொருத்தம்:—(மேலே 41முதலியபக்கங்களின்சுருக்கம்)

பிறர்சொல்லுகிற நூதநமான அண்ணாதனியனில் முதல்பாதத்தை (ஸமாஸமாகவுள்ள படியே) நயினாராசார்யருக்குத்தான் விசேஷணமாக அந்வயிக்கவேண்டும். இப்போது அவரை இங்ஙனம் விசேஷிக்கவேண்டிய ப்ரஸக்தியே கிடையாதென்பதை மேலே 39முதலிய பக்கங்களில் விவரித்துக் காட்டியிருக்கிறேன். ஆதலால் பிறர் சொல்லுகிறபடி இரண்டாவதுபாதம் இருக்கத்தகுதியேயில்லை. முதல்பாதத்தை அநுஸ்வாராந்தமாக்கி அண்ணாவுக்கே விசேஷணமாக்கி விடலாமென்றால், க்ரமமான தனியனில் இப்படியேதான் அந்வயமாகையாலே இதுபொருத்தம் என்று சிலர் நினைக்கக்கூடுமானாலும், அண்ணா மாமுனிகளின்கோஷ்டியில் அந்வயிப்பதற்கு முன்னே இந்த விசேஷணம் அண்ணாவுக்கு அப்ரஸக்தமேயாகும். என்? உண்மையில் தேசிககுமாரரை மாத்திரமே ஸேவித்து தேசிகனை ஸேவித்தறியாத அண்ணாவுக்கு அந்தவிசேஷ

ணத்தை அந்த சிஷ்யர்கள் இழிவதற்கு ஸ்மரணமே உண்டாக ப்ர ஸக்தியில்லை. * காந்தோபயந்த்ருயமிநாம் கருணைகவார்த்தௌ என்கிறவிசேஷணம் வந்துவிட்டால் அப்போது மாத்திரம் முதல் பாதம் அண்ணவுக்குப் பொருத்தமாய் அந்வயித்துவிடுமோ? என்னில்; அப்போதுதான் அந்வயிக்கும். ஏனென்னில்; தம்மிடம் வந்துபணிந்த அண்ணா நயனாராசார்யரிடம் அதிகரித்தவராயிருந்தாலும், ரஹஸ்யத்ரய ஸாராதி க்ரந்தப்ரணயந முகத்தாலே நெறி வேறுபாட்டை விளைத்தவர் வேதாந்த தேசிகனே என்கிற கருத்து ஸ்ரீமத்வரவரமுநிசிஷ்யர்களுக்குண்டாகையாலும், அவரது திருக்குமாரரிடத்திலிருந்து வந்தவரைப் பார்க்கும்போது 'வேதாந்தாசார்யஸம்ப்ரதாயத்திலிருந்து வந்தவராக்கம் இவர்?' என்று ஒன்றுனை அவரையிட்டே ஸ்வரம்வேறுபட வேண்டியதாயிருப்பதாலும் இத்தலையிலுள்ள சிஷ்யவர்க்கங்கள் வேதாந்த தேசிகஸம்பந்தம் காரணமாக ஒருகால் இகழக்கூடுமென்று மாமுனிகள் திருவுள்ளம் பற்றியதனால், அங்கே அவர்க்கு நேர்ந்திருந்த ஸ்ரீபாஷ்யாந்வயத்தைமாத்திரம் கொண்டு அங்ஙனம் நினையாதபடிக்கு உறுப்பாக ஓர் ஸதுபாயம் செய்யவேண்டுமென்று (மாமுனிகள்) கருத்துக்கொண்டு அந்த ஸம்பந்தத்தையிட்டே தனியன் அருளிச்செய்யலானார். (இப்போது இந்த விசேஷணத்திற்கு ப்ரஸக்தி நன்கு நிரூபிக்கப்பட்டதாயிற்று.) இப்படிவிசேஷணமிட்டது மாமுனிகளின் நீர்மைக்கு மாத்திரமே பொருந்தும். விபீஷணாழ்வானை சக்ரவர்த்தித்திருமகனார் பரிக்ரஹித்தபின்பு முன்பு அவன்மீது வசைகூறின முதலிகளும் * ஸர்வஜ்ஞாத்தாயம் ஸாக்ஷம் வேத்தி விபீஷண: * என்று சொன்னமை ப்ரஸித்தமிறே. ஸ்வாமியே உகந்தபோது நமக்கென்ன விஸம்வாதம்? என்பதுதானே அங்கு முதலிகளின் கருத்து. அந்தக்கருத்தை உண்டாக்குவதற்காகத்தானே பெருமாள் அத்தனைபாடுபட்டது. அதுபோலவே யிங்கும் கொள்க. இது,—விஷயம் மனத்தில் பதிவதற்காகக்காட்டின ஏகதேசத்ருஷ்டாந்தமேயல்லது வேறில்லை. ராம ராவண விபீஷண வாநராதிஸ்தானங்களிலேஇங்கு யாவர்? என்கிறவிசாரங்கள் பண்ணி வீணான அவத்யங்களைக்கிளப்பினால் நரகமேபலிக்கும். * * ஹ்ராஸாதிகாநுவா இதி வஹ்வவஸ்காநுவா ஸவஸ்ரவஸ்ராயாநுஸ வாவி ஜாதாநு। ஸூவாயஸ்வயெஸ்ா நிரஸாஞவஸ்ரீ: காருண்யெரெஸெ நகரோதுவாநு॥ என்று: ஹாஸ்மாய் ஹ்ராயிஸ்த்து இந்த ஸாரஸங்கிரஹத்தைத் தலைக்கட்டினேனானேன்.........

உவிஜ்ஜ்ஞாநாயாவசிஞாவிரஹ்யெொ ஸ।

ஸ்ரீஜஹ்ருஸ்ஸவாஜாஜ்ஞவாம்ஸ ஸ்நம் ஸவாவந:॥

ஸாரஸங்க்ரஹம் முற்றிற்று.

ஸ்ரீ:.

பேரருளாளன்பெருந்தேவித்தாயார் திருவடிகளேசரணம்.



ஆழ்வாரெம்பெருமானார்ஜீயர்திருவடிகளேசரணம்.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய

வாதிபீகரவிஜயம்.

[*]

ஶாஸ்த்ரதுக்தஜலஜீவஸ்த்ரககோடீவாதநவாதுவாணிதஸ்யோரயஃ ஶ்ரு-
த்யுபவீகாவஹரேஷுவஸதிநேவஸஹ்ரு திவாதிபயங்கரஸிம்ஹ: ॥

ஜகத்த்ரிதயஸாரபூதம் ஜகந்நாதபதாம்புஜம் ।
ஶ்ரீஜகந்நாதாசார்யபாதாப்ஜம் வந்தே மாமாவைபவபூர்ணதம் ॥

வெண்பா.

படியடக்க மென்பதோர் பாமரநூல் மாயும்
படியோடக்க வீது படரும்—முடிதுலுக்கி
நாவலவர் நன்மகிழ, நம்வாதி நாணமுறப்
பூவலரு மாபோற் பொலிந்து.

அவதாரிகை.

[அடியேனுடைய போதுபோக்கு.]

1. * இன்புறுமிவ்விளையாட்டுடையானை எம்பெருமான் இந்த லீலாவிபூதியைப் படைத்துப் பலபல ப்ராணிவர்க்கங்களையுண்டாக்கி ஒவ்வொருவர்க்கும் ஓரொருவிதமான போதுபோக்கையும் பரிகல்பித்து வைத்திருக்கிறானென்பது யாவருமறிந்ததே. உவ்வாவவ

மான உலகவியற்கையினுள், பேரருளாளனை எம்பெருமான் அடியேனை அநுக்ரஹித்திருக்கும்விதம் * சோலப்புகில் வாயமுதம் பரக்குமென்ற கணக்கிலேயாம். திருமழிசைப்பிரான் "தெரித் தெழுதி வாசித்துங்கேட்டும் வணங்கிவழிபட்டும், பூசித்தும் போக் கினேன்போது" என்று திருவுள்ளம்பூரித்து அருளிச்செய்த பாசு ரத்தின்படியே அடியேனுக்குப் போதுபோக்கு ஆம்படி ஸங்கல்பித் திருக்கின்ற தேவபிரானது திருவருளை நினைந்து நைந்துள்கரைந் துருகி வாய்வெருவாதிருக்க அடியேனால் எங்ஙனே முடியும்?

[ஈக்களைஓட்டவேணுமே தேன்பருக.]

2. * எனக்குத் தேனேபாலேகன்னலே யமுதே என்றும் * தேனும்பாலும்நெய்யுங்கன்னலுமமுதுமொத்தே என்றும் பேசலாம் படியான இனிய விஷயந்தன்னிலேயே மனமொழிமெய்களை முப் போதுஞ்செலுத்திப் பேரின்பவெள்ளத்திலேயே ஆழ்ந்துகிடக்கு மடியேனுக்கு, இடையிடையே அநாவச்யகமான போதுபோக்கை யும் சிறிது ஸங்கல்பியாநின்ற எம்பெருமானது திருவுள்ளம் அறிய வொண்ணாதாயிராநின்றது. தேனையே பருகித் தெகுடாடியிருக்க வேண்டுமிருப்பிலே மக்ஷிகாநிரஸநம் ப்ராப்தமானால் அதுவும் அவர்ஜநீயமேயாகிறது. அது போலவே, உபயவேதவேதாந்த ஸம்ப்ரதாயஸாரார்த்த ப்ரவசனங்களாலேயே * இல்லை யெனக்கெதிரில்லையெனக்கெதிரில்லையெனக்கெதிரேஎன்றுகொண்டு * கார்கலந்தமேனியான் கைகலந்தவாழியான் பார்கலந்தவல்வயிற் றான் பாம்பணையான் சீர்கலந்த சொல்நினைந்தே போதுபோக்கும் பாக்கியம் பெற்ற நமக்கு * ஸ்வஸ்மின் ஸ்வஸ்தஸ்வார்த்திஸ்வநி ர்வாணனு: | ஸ்ரேயஸ்கோடிஶாவிஷ்டி வீணையெசு வ்யாக்ஷேப்தாஸௌ * என்று ஸர்வபுரம்ஸ்வாமி ஸாதித்த கட்டளை யிலே, ஸ்வார்த்திஸ்வார்த்த நிர்ஜ்ஞாநாய்மான ப்ரவ்ருத்திகளும் கைங்கரியமேயாய்த் தலைக்கட்டக் குறையில்லையென்று ஒருவாறு தேறுதலுண்டாகின்றது.

[அடியேனது உண்மையான அநுதாபம்.]

3. மிகப்பெரியனவும் உலகுக்கு நீடூழி உபகாரகங்களுமான அரியநூல்கள்பலவற்றையும் எம்பெருமான் அடியேன்முகமாக வெளியிடுவித்து வருகின்றானென்பது, கற்றோர்கள்தமக்கும் கல்வி தன்னிலாசையுள்ளோர்தமக்கும் நன்குதெரிந்ததே. அத்தகைய அருமருந்தன்ன அரும்பொருள்நூல்கள் அடியேன்முகமாகவே

வெளிவரவுரியவை இன்னமும்பலபல அவசியமாகவுள்ளன. அடியேனது ஸ்வல்பமான அவகாசத்தை அப்பெருநூல்கள்விஷயத்தில் எவ்வளவு செலவிட்டாலும் போதாது. அடியேனது ஊக்கமும் அது தன்னிலேயே மிகமிகக் குடிகொண்டிருக்கும். அதற்கு இடையூறாக வன்குறும்பர்கட்டுரைகட்கு மறுப்புரைக்கும்வழியிலே செலவாகின்ற அவகாஶம் உண்மையில் ஸுஶோசநீயமே.

[அடியேனது நூல்களின் வெற்றி.]

4. ஆனாலும், சாஸ்த்ரஸம்ப்ரதாயாதிகளின் உண்மைக்கு மாறாக யாரேனும் ஏதாவது அபத்தச்சுவடியைப் பரவவிட்டால் அதுகண்டு ஆறியிருக்ககில்லாத இயல்பையும் அடியேனுக்கு எம்பெருமான் இயற்கையிலேயே அளித்தருளினனாதலால், சடங்கர் வாயடங்கிடச்செய்யும் நூல்களை இயன்றவளவு வெளியிட்டுக் கொண்டே வருகின்றேன். வேதவிசாரங்களிலும் வேதாந்தவிசாரங்களிலும் மற்றும் பற்பலவிதத்து ஆராய்ச்சிகளிலும் வாதப்ரதிவாத-ஸம்ஜ்ஞ ப்ரஜ்ஞ நாமதேயங்களான ஸஞ்சிகைகள் அனேகம் அவசியமாகவே அடியேனால் வெளியிடநேர்ந்து, அவை யாவும் *காருள்ளளவும்கடல் நீருள்ளளவும் வேதமுள்ளளவும் வேதகீதனுள்ளளவும் நிலவும்படியாகவே வெற்றிபெற்று விளங்குகின்றனவென்பதை நிர்மத்ஸரவிவேகிகள் நிலைகண்டுள்ளார்கள். இஃது அடியேனுடைய ப்ரஜ்ஞாவழிகளை ஆராய்வார்க்கு அறிவரிதன்று.

[ப்ரணவாதிகாரதத்வப்ரஸ்தாவம்.]

5. ஆனால், ப்ரணவாதிகாரதத்வமென்கிற அடியேனுடைய வொருநூலுக்கு மறுப்பென்று பெயர்கொண்ட எதிர்நூல் வெளிவந்தும் அஃதொன்றுக்குமாத்திரம் இன்னமும் விடையளிப்பு வெளியிடப்படவில்லையே! இதுவென்? என்று சிலரோ பலரோ சிந்திக்கக்கூடும். இதைப்பற்றி யிங்குச் சிறிது தெரிவிக்க விரும்புகின்றேன். ப்ரணவாதிகாரதத்துவத்திற்கு எதிர்நூல் வெளிவந்தவுடனேயே அதிலுள்ள அபத்தங்களையும் வஞ்சகங்களையும் உலகறிய வெளியிட அடியேன் ஸித்தனாகவேயிருந்தேன். அப்போது ஒரு [தென்னாசாரிய] ஐயங்கார், அக்காரியம் தம்மால்தான் ஆகக்கூடியதென்றும், மற்றையோர்க்கு என்ன தெரியுமென்றும் செருக்குற்றுப் பேசினதுமல்லாமல் கண்டனக்ரந்தமென்று ஒன்றையெழுதி § அச்சிட்டு வெளியிட்டும் விட்டார். அதுதான்

§ 1933 ஆம் வருஷத்தில் ஸ்ரீரங்கத்தில் அச்சிடுவித்த (தத்வகுணதர்சகண்டன மென்கிற) தத்வஸம்போதிநீ.

மிகச்சிறந்த கண்டனக்கிரந்தமென்று அவரையடுத்த பலரும் புகழவுந்தொடங்கிவிட்டார்கள். 'எப்படியாவது ஸம்ப்ரதாயரக்ஷணஞ் செய்யவேண்டியதுதானே, இதனை யார் செய்தாலென்ன? அவருடைய கண்டனத்தினாலேயே ஸம்ப்ரதாயரக்ஷணம் குறையற்று விடுமாகில் நமக்கு இவ்விஷயத்தில் விச்ராந்தியாக இருக்கட்டுமே' என்று அடியேன் நினைத்து இதில் வாளா இருந்துவருகின்றேன்.

[ப்ரணவாதிகாரதத்வப்ரதிஷ்டா.]

6. அவருடைய கண்டனக்ரந்தத்தின்மேல் மறுகண்டனம் வெளியாகி, அதன்மேலும் இவருடைய கண்டனம் வெளியாகி, இதன்மேலும் மீண்டும் கண்டனக்ரந்தம் ஏற்பட்டு, இங்ஙனே சில க்ரந்தபரம்பரைகள் இதுவரையில் வெளிவந்திருப்பது விச்வப்ரஸித்தம். 'ஸப்ரணவாஷ்டாக்ஷரம் ஸர்வாதிகாரம்' என்கிற ஸத்ஸம்ப்ரதாயஸரணியை ஸம்ரக்ஷிக்கப் புகுந்த ஐயங்கார் * ஸதாமு வாஸநா உதிதோ விதி: * என்னலாம்படியான நிலைமையை ஒருகாலும் எய்தமாட்டாரென்றே அபிமானிகள் பலரும் அறைகின்றார்கள். அடியேனும் அங்ஙனமேதான் கருதியிருக்கின்றேன். இக்கருத்து பழுதுபட்டதாக நிர்த்தாரணமாய்விடுமேல் அப்போது அடியேனுடைய "ப்ரணவாயிகார தத்வ ப்ரதிஷ்டா" என்கிற க்ரந்தம் வெளிவந்து வித்வான்களை மகிழ்விக்குமென்று விவேகிகள் உணர்வாராக. ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷகத்வப்பெருமையிலே கூறுகொள்ள ஆசைகொண்டு இழிந்தவர்களுக்கு எம்பெருமான் கைகொடுப்பது எவ்வளவு? என்று தெரிந்துகொள்ளவே அடியேன் ஆவலுடையேன். இது நிற்க.

[ப்ரக்ருதபாதகப்ராயச்சித்தம்.]

7. அக்ஷராஸ்யர்களும் நாநாவிதவித்யைகளில் மிகவும் ஸமிஜ்ஞர்களுமான பண்டிதர்களோடே எவ்வளவு போராடினாலும் விலக்ஷணமான ஒரு ஆத்மாநந்தமுண்டு. இதுவரையில் அடியேனுடைய வாதப்ரதிவாதக்ரந்தங்களுக்கெல்லாம் விஷயபூதர்கள், கூடியமட்டில் வித்வான்களாகவே அமைந்தவாறு உலகமறியும் அப்படிப்பட்ட அறிஞர்களோடே வாதப்ரதிவாதகிரந்தங்கள் பலவுமெழுதிக் களிப்புற்றிருக்கு மடியேனுக்கு இப்போது சில நிரக்ஷரகுக்ஷிகளை எதிரியாகக்கொண்டு நூலெழுத நேர்ந்தது * ஹ்ரீரேஷா ஹி ஜாதருபா * என்னுமாபோலே வஸ்துதஃ வெகு வெட்கமாகவே யிருக்கின்றது. இருந்தாலும் என்செய்வது?

பாமரவுலகினர்க்குக் கண்துடைக்கவேண்டுதல் கடமையானமை யின் இஃதெழுதியே தீரவேண்டிற்று. ※"வம்பார்வினைச் சொல்லவோ எம்மைவைத்தது இவ்வான்புனத்தே" என்ற ஆழ்வாரருளிச் செயலை நெஞ்சிற்கொண்டிருப்போமுக்கு இஃது இறையும் தகுதி யன்றுதான். ஸமதிகவாதகமாக நேர்கின்றவிதற்கு ப்ராயச் சித்தமாக ஸ்ரீகுணரத்நகோஶத்திற்கும் ஸ்ரீவரவரமுநிசதகத்திற் கும் ஒரு மணிப்ரவாள வியாக்கியானம் இன்றே எழுதப்புகுந்தே னாதலால் ※ நிக்ஷ்ரத: க்ஷ்ர தொடவூி ஸம்வ்ருத்: என்றுகொண்டு போரப்பொலிவேன்.

[அண்ணாவைபவவிளக்கச்சிறப்பு.]

8. இனி, ப்ரக்ருதக்ரந்தத்தின் ப்ரமேயம் பகர்வேன். ஜகதா சார்யரான மணவாளமாமுனிகள் திருவடிகளிலே பண்டு பற்பல ஆசிரியர்கள் பணிந்து உய்ந்தார்களென்றும், அவர்களுள் எண்மர் பிரதானர்களாகப் பரிகணிதர்களென்றும், அவ்வெண்மருள் பிரதி வாதிபயங்கரம் அண்ணாவுமொருவர் என்றும் ஸத்ஸம்ப்ரதாயநிஷ்டர் களனைவரும் தொன்றுதொட்டு நிராபாயமாகப் பலபலக்ரந்த மூலமாகவும் வாக்பரம்பரையாகவும் ஸுப்ரஸித்தமாக்கி வைத்தி ருக்கும்விஷயத்தில், ஸ்தோத்ரரத்ந— ※ அமர்யாத ※ ச்லோக வ்யாக்யாநாவஸரவிஷயஸதரானவொருவர் ஒரு கல்மஷத்தை எறி டப்புகுந்து அகாண்டதாண்டவங்கள் செய்து, "மணவாளமா முனிகளின் இளமைப்பிராயத்திலேயே பரமபதித்தவரான அண்ணா வுக்கு மணவாளமாமுனிகளோடே யாதொரு ஸம்பந்தமுமில்லை" யென்று வித்வந்மநோரஞ்ஜன மென்பதோர் விபரீதலக்ஷணச் சுவடியைச் சென்ற ஆண்டில் வெளியிட்டார். ஒரு ஸம்ப்ரதாயத்தி லும் ஒரு க்ரந்தத்தையும் செவ்வனே பாராமல் தாந்தோன்றிப்படி யாக எழுதின அச்சுவடிக்கு விடையளிக்க அவசியமேயில்லையாயினும் அந்தவிடையளிப்புவியாஜத்தினால் பலபலவிஷயங்களை வெளியிட வேணுமென்பதையே முக்கியநோக்காகக் கொண்டு அடியேன் அண்ணாவைபவவிளக்க நூலெழுதி அப்போதே வெளியிட்டேன். அதனைக் கடாக்ஷித்தருளின மஹான்கள் பலரும் வியந்து விடுத்திருக் கும் திருமுகங்கள் அனேகம்.

[பிரதிபக்ஷியின் மாயமயக்கு.]

9. அந்த நூலை மறுத்துரைக்கின்ற பாவனையாக இப்போது கிளம்பியுள்ளது படியடக்க மென்பதாம். இதனையும் இதன்முன்

சுவடியையும் இயற்றி வெளியிட்டவர் "வித்வான் - சோழவரம். தட்டை. ராமாநுஜாசாரியர்'' ஆம். இவர் வடகலைஸம்பிரதாயஸ்த ரென்பதை அடியேன் விளக்கநூலிலேயே முடிவுரையில் விளக்கியிருக்கின்றேன். இப்படிப்பட்டவிவர் தென்கலைஸம்ப்ரதாயஸ்தர் போல அபிநயித்து, நான்முகப்பில் தென்கலைத்திருமண்காப்பையும் பதிப்பித்து,ஸ்ரீமல்லோககுரவே நம:, ஸ்ரீமத்வரவரமுநயே நம:என்று தென்னுசார்யவந்தனமும் செய்திருக்கின்ற மாயம் சுகஸாரணர் படியிலேயிராநின்றது. அண்ணுவுக்கும் மணவாளமாமுனிகளுக்கும் சிஷ்யாசார்யஸம்பந்தம் கிடையாதென்கிற அபலாபவாதம் வடகலை ஸம்ப்ரதாயஸ்தர்களில் பெரும்பாலுமுண்டாதலால் அந்த வாதத்தைத் தென்கலையாரே வெளியிடுவதுபோல் பிரசாரம்செய்ய ஒரு சூதான வழியில் நுழைந்து, மேற்சொன்ன இரண்டு புத்தகங்களும் பூர்வபக்ஷியால் வெளியிடப்பட்டுள்ளனபோலும். இவ்வளவு சூதும் பேதும்பொருந்திய சுவடிகட்கு மறுப்புரைக்கச் சிறிதும்அவசியமில்லையென்று பன்முறையுமெழுதினுலும் புநருக்தியாகாது. அச்சுவடிகளிற்காணப்படும் பெயர்கொண்ட கர்த்தா வடகலையேயன்றித் தென்கலையன்றென்பதில் யாரும் ஐயுறமாட்டார்கள். 'எந்த ஸம்பிரதாயஸ்தரானுலென்ன? விஷயந்தானே பிரதானம்: அதன்மேற் செல்வதைவிட்டு இந்தப் பரப்பெல்லாம் ஏதுக்கு?' என்று சிலர் நினைக்கலாம். முந்துற வ்யக்திவேஷத்தை நிர்த்தாரணஞ்செய்துவிடுதல், மேல் விஷயசோதனத்திற்கு மிகவும் பாங்கு என்று கொண்டே இந்த நிரூபணம்.

[எதிரிசுவடியின் கள்ளங்கவடுகள்.]

10. இதில் இரண்டுவகையான சூதுகள் ஸம்பாவிதம். மேலே விளக்கக்காட்டிய சூது ஒன்று. மற்ருென்ருவது-உண்மையில் தென்கலைஸம்ப்ரதாயஸ்தரானவொருவரே தன்பெயரால் வெளியிட வெள்கியோ கூசியோ அஞ்சியோ ஒரு புறம்போக்கன் பெயரையிட்டு வெளியிட்டாராகவேண்டும். அனேகமாய் இவ்விதமான சூதே இங்கு இடங்கொண்டிருக்கலாம். இப்படியாகில், பிரகிருத துர்வாதங்கள் செய்கிறவர் தமது அந்த வாதத்தைத் தம் பெயரால் தாராளமாக வெளியிடக்கூசுகின்றமையும், வேற்றுமுகமாக வெளியிடப்புகுந்தவிடத்தும், தென்கலையார்களுள் யஃகூஷ்ந என்னும்படியான ஒரு அவஹவஷெஸ ன்கூட அந்த அபத்தச்சுவடிக்குக் கர்த்தாவாக வெளிவர இசையப்பெருததின்மேல் அங்கார்த்தியானவொரு இதரனைத் தேடிப் பிடிக்க நேர்ந்தமையும்

ஸ்பஷ்டமாகின்றதனால் இரண்டுபடியாலும் விவாதச்சுவடிகளின் ருஜுமார்க்கதாரித்ரியமே ஸ்தாபிதமாகும்.

[எதிரி ருஜுவாக ஸபைக்கு வருவாரா?]

11. இங்ஙனம் நாம் விவரித்த இருவகைச்சூதுமின்றியே செவ்வையான நன்னெறியிலேயே அச்சுவடிகள் வெளிவந்திருக்குமாயின், "நானே சோழவரம் தட்டை ராமாநுஜாசாரியர், நான் வித்வானே; இதோ என் திருமண்காப்பையும் காண்மின்" என்று ஏதேனுமொரு மஹாஸபையிலே வெளிவந்துநின்று, * ஊர்த்வபுண்ட்ரோர்த்வபுண்ட்ரவிசிஷ்டசிஹ்னிதஸாநுலக்ஷணை: * என்னப் பெற்ற திருமண்காப்பு ஸந்நிவேசத்தோடே ஸேவைஸாதிக்கப் பெற்றால் அப்போதே அவரை அடிபணிந்துநிற்கத் தடையே கிடையாது.

[எதிரியின்கள்ளத்தைக் காட்டவேண்டிய கடப்பாடு.]

12. ஆரியர்காள்! இந்தச் சூதுவிஷயமாக அடியேன் முன் புஸ்தகத்திலேயே விசதமாக வரையவேண்டியிருக்க, அதில் சுருக்கமாகவே விட்டிட்டு இன்று இதில் விவரிக்கக் காரணமென்கொல்? என்று கேட்பீர்; கேண்மின்: விஷயத்தின்மேல் விஷயம் விளம்ப வேண்டுவதே அடியேற்கு முக்கியம். வ்யக்தி ஆராயினுமாகுக; அதைப்பற்றி விமர்சிக்கவேண்டிய அவசியம் இல்லைதான். பிரகிருதவிஷயமோ வென்றால் ஸம்ப்ரதாயஸம்பந்தியானது. வாஸ்தவத்தில் வடகலைஸம்ப்ரதாயஸ்தரே ப்ரதிபக்ஷியாயிருந்தால் அவர்க்குச் சொல்லவேண்டிய பதில் வேறாகவே அமையும்; தென்கலைஸம்ப்ரதாயஸ்தர் பிரதிபக்ஷியாயிருந்தால் அவர்க்குச் சொல்லவேண்டிய பதில் அதனிலும் வேறாகவே அமையும். ஏனெனில்; ஒரு அதீந்திரியவிஷயத்தை நிர்ணயிக்குமிடத்து * ஶாஸ்த்ரயோநித்வாத் * என்று வியாஸர் பணித்தாப்போலே க்ரந்தப்ரமாணத்தைப் புரஸ்கரித்தே வ்யவஸ்தை நடைபெறவேண்டும். இப்போது நாம் விவக்ஷிக்கின்ற விஷயம் ஶ்ருதிஸ்ம்ருதீதிஹாஸபுராணபஞ்சராத்ராதிகளைக்கொண்டு நிர்ணயிக்கத்தக்கதன்றே. ஸாம்ப்ரதாயிகஸம்ஹிதாக்ரந்தாதிகளைக்கொண்டுதானே நிர்ணயித்தாக வேண்டும். இதுதன்னிலேவருமிடத்து, ஒரு ஸம்ப்ரதாயஸ்தர் ஆதரிக்கும் நூல்களை மற்றொரு ஸம்ப்ரதாயஸ்தர் பிரமாணமாகக் கொள்ளாது இகழ்வது இயல்பாயிருத்தலால், அவரவர்கள் பிரமாணமாகக்

கொண்ட நூல்களைச் சான்றாகக் காட்டியே அவரவர்களைத் தெளிவு பெறுத்த ப்ராப்தம்.

[எதிரியின் ஸத்ஸம்ப்ரதாயபாஹ்யத்வம்.]

13. அண்ணா அருளிச்செய்துள்ள பலக்ரந்தங்களிலிருந்து, மணவாளமாமுனிகளோடே அவர்க்குண்டான ஸம்பந்தம் ஸுவ்யக்தமாக விளங்குகின்றதென்று அடியேன் மூன்க்ரந்தத்தில் விரிவாக மூதலித்திருப்பது ஒருபுறமிருக்கட்டும். அண்ணாவைபவவிளக்கமென்கிற அந்த க்ரந்தத்தை அடியேன் ப்ரதிவாதிபயங்கரஸம்பந்தமடியாக எழுதினேனில்லை; 'தென்னாசார்யஸம்ப்ரதாயஸ்தர்களிலொருவன்' என்கிற பொதுநிலைமையில்நின்றே எழுதியிருக்கின்றேன். பூர்வபக்ஷியின் துர்வாதத்தை உண்மையான ஒவ்வொரு தென்கலைஸம்பிரதாயஸ்தரும் எவ்வண்ணமாகக் கண்டிக்க வேண்டியதாகுமோ அவ்வண்ணமாகவே அடியேன் கண்டனம் செய்திருக்கிறேனென்பதை யாரும் மறுக்கமுடியாது. இது பொய்யாகில் ப்ரதிஷ்டிதரான ஒரு தென்னாசார்யஸம்ப்ரதாயஸ்த பண்டிதரைக் கொண்டு ப்ரதிபக்ஷியானவர் தமது வாதம் தென்னாசார்யஸம்ப்ரதாய ஸம்ப்ரதிபந்நமேயென்பதை வெளியிடுவித்துவிடுவாரானால் போதுமானது. ஸர்வதா அஸம்பாவிதமான இவ்விஷயம் எங்ஙனே ஸித்திக்கும் ?

[விசித்திரமான உலகவஞ்சனை.]

14. இப்படி ஸம்ப்ரதாயவிருத்தமானவொரு துர்வாதத்தை அஸூயாதிஹேதுக்களாலே தான் கிளப்பிப் பிரசாரஞ்செய்துவருமொருவர், "இப்படியும் தாந்தோன்றியாகவொரு குத்ஸிதவாதத்தை நீர் செய்யலாமோ?" என்று பிராமாணிகர்களான பெரியோர் கேட்டால், 'இது நானா செய்கிறேன்; சோழவரம் ராமாநுஜாசாரியென்கிற யாரோவொரு இதரஸம்ப்ரதாயப்ராஹ்மணனன்றோ புத்தகம் பதிப்பித்திருக்கிறான்' என்று அவர்கட்குச்சொல்லிவிடுவதும், அந்த ராமாநுஜாசாரியரை அந்த ஸம்ப்ரதாயஸ்தர்கள் யாரேனுங் கண்டு 'நம்முடைய ஸம்பிரதாயக்ரந்தங்களுக்கும் விபரீதமாக நீர் எழுதலாமோ' என்று கேட்டால்; 'இது நானா எழுதினேன்? என் நெற்றியிலுள்ள திருமண் இப்புத்தகத்திலிருக்கிறது? பாருங்கள்; யாரோவொரு தென்கலையான் எழுதின புஸ்தகமாயிற்றே இது!' என்று சொல்லுவிப்பதுமாய் இப்படி உலகவஞ்சனையே போதுபோக்காகவுள்ளவிதம் உலகமறியவே நிற்பாரது சுவடியைப் பொருள்

படுத்தி ஒரக்ஷரமும் எழுதத்தேவையில்லைதான். *-தயாவி ஹேர யதூஞாதா கிம் கரவாணி ஹோ:! *.

[எதிரி நூலிலுள்ள அடைவுகேடு.]

15. இதற்கு முந்திய விளக்க நூலில் அடியேன் ஸமாதான மெழுதும்போது ஒவ்வொரு விஷயத்திற்கும் லக்கங்கொடுத்து [ஸிம்ஹாஸநாதிபதிஸங்கையிலே] எழுபத்திநான்கு விஷயங்களாக வகுத்து, முடிவில் முக்கியமாக ஒரு பிரார்த்தனைசெய்திருக்கிறேன்—(அதாவது) இந்த நூலுக்கு யாரேனும்மறுப்பெழுதத்தொடங்கினால் காடுபாய்ந்துகண்டதையுமெழுதாமல் ஒருவரம்பிலே நின்று எழுது கின்றமை விளங்குமாறு நேர்நேரே பதில்எழுதவேணும்;நாம் கொடுத்திருக்கிற லக்கப்படியே அவர்களும் லக்கங்கொடுத்து க்ரமம்க்ரமமாக விடையளிக்கவேணும்--என்று[இரண்டுச்லோகங்களெழுதி] வேண்டிக்கொண்டிருக்கிறேன். அப்படியிருந்தும் பிரதிபக்ஷி அந்த முறையைச் சிறிதும்குறிக்கொள்ளாமல் விஷயநிரூபணங்களில் ஒரு நியதியுமில்லாமல் தன்னெஞ்சில்தோற்றிற்றையெல்லாம் எழுதி ஒரு திலகாஷ்டமஹிஷபந்தகரந்தியை வெளியிடுவித்திருக்குமழகு அற்புதம். நமது ஒவ்வொரு லக்கத்திற்கும் நேர்நோக பதில் எழுதிவருவதில் இவர்க்கு என்ன சிரமமாகும்? அப்போது பிராமாணிகர்களின் மனத்திற்கும் பரமத்ருப்தியுண்டாகுமன்றோ. உண்மையாக ஒரு விஷயமுமின்றியே ஆகாசதாண்டவஞ்செய்பவர்களுக்கு இத்தகைய ருஜுமார்க்கம் எங்ஙனே பொருந்தும்?

[எதிரியின் ஸாஹஸமும் என்னிலைமையியம்புதலும்.]

16. அன்றியும், ஏதேனுமொரு பாஷையிலாவது ஒரு கல்வியிலாவது பயிற்சியுடையாரன்றோ க்ரந்தமெழுதும் பணியை மேற்கொள்ள உரியாராவார்; ஒரு படிப்புமில்லாதவர்கள் க்ரந்தமெழுதத் தொடங்கிவிடுவது மிக்க ஸாஹஸமன்றோ. எதற்கும் ப்ரதிசொல்லித்தீரவேண்டிய முறைமையிலே பிரதிபக்ஷியானவர் "இவர்தான் ஒரு படிப்புமில்லாதவர்" என்று அடியேனைப்பற்றிக் கிடுகிடென்று எழுதிவிடுவார். அடியேன் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. அழகிய மணவாள ராமாநுஜஜீயர்ஸ்வாமி திருவடித்தாமரைகளில் பலகாலம் பணிந்து குனிந்து த்ராவிடசாஸ்த்ரங்களையும், ஸ்ரீமதுபயவே. ஸ்ரீகாஞ்சீஜகத்குருஸ்வாமி பாதாரவிந்தபரிஸரத்தில் பலவருஷங்கள் பணிந்து ஸம்ஸ்க்ருதசாஸ்த்ரங்களையும் பயின்று உபயபாஷைகளிலும் பலபலநூல்களியற்றி அநேக மஹாமஹோபாத்யாயர்க

னுடையவும் பண்டிதசிகாமணிகளுடையவும் எண்ணிறந்த ப்ரசஸ்தி பத்ரிகைகளையும் பெற்றிருத்தலை * மன்னுடைமன்றத்து இத்யாதியான நன்னூல் சூத்திரப்படியே ஈண்டு அடியேனே வெளியிட்டுக்கொள்வதும் தகும்தகும்.

[எதிரியின் நிரக்ஷரகுக்ஷித்வ ஸாக்ஷியப்ரகடனம்.]

17. பிரதிபக்ஷியானவர், அடியேன் பாதுகாஸஹஸ்ராவதார தத்துவநூலில்(பக்கம் 14ல்)எழுதியிருந்த * ஹ்ய: ப்ரஹ்லாதேவரி க்லுப்தே *என்றவொருவாக்கியத்தைத் தமது சுவடியில் (பக்கம்21ல்) அநுவதித்து அதற்குத்தமிழுரையெழுதுகையில்,[ஹ்ய: ப்ரஹ்லாதே] "இன்று காலையில்" என்று அர்த்தமெழுதியிருக்குமழகை அனைவரும் காணலாம். * ஹ்யோ(அ)தீதே(அ)நாகதே(அ)ஹ்நி ஶ்வ: * என்ற அமரம் சிறுகுழந்தைக்கும் தெரியும். * ஹ்ய:—நேற்று. அத்ய—இன்றைக்கு * என்று பிரதமபாடம் வாசியாதாருமில்லை. இப்படியிருக்க, "லவணமென்றால் எனக்கா தெரியாது, எருமைச்சாணியல்லவா?" என்றவனுக்குத் தமையனோ தம்பியோ திருவவதரித்து [ஹ்ய:-இன்றைக்கு] என்று எழுதி வாய்வீசுமிவர் அடியேனுக்கு எத்தனைகாதமளவுக்கப்பால் நிற்கவேண்டியவரென்பதை விவேகிகள் நன்குணர்வாராக.

18. உலகத்தில் அவரவர்கள் பலகாலம் பரிச்ரமப்பட்டு ஸம்பாதிக்கும் யோக்யதைகள் பலவிதமாயிருக்கும். ஏதேனுமொருவழியில் ஸ்வல்பயோக்யதையையாவது ஸம்பாதிக்கப்பெற்றவர்கள் க்ரந்தமெழுதப்புகுந்தால் ஒருவாறு பாதகமில்லை யென்னலாம். திருவரங்கக்கலம்பகத்தில் "வீணாரவாரம் மூதண்டமுற விளைவிப்பன்" என்றவாறாக ஒன்றோடொன்று அந்வயமற்ற நிரர்த்தகசப்தராசிகளை அண்டகடாஹம்பிளக்கக் குளறிக்கொட்டுவதொன்றேயன்றி வேறொன்றுங் கனவிலுங்கண்டறியாதாரும் எழுதத்தொடங்கிவிடுவது காலக்கொடுமையே. நம் பிரதிபக்ஷிக்கு ஏதோ சில ச்லோகங்களும் பாசுரங்களும் ஆசார்ய ஸூக்திகளும் தெருத்திண்ணைக்கூசல்களில் காதில்விழுந்து, அதுவும் செவ்வனேயன்றித் தப்புந்தவறுமாய் விழுந்ததுகொண்டு புஸ்தகமெழுதவும் முயற்சியுண்டாயிற்றென்கிற விஷயம் எதிரியின் படியடக்கத்தில் பெரும்பாலும் புலப்படும்.

19. "பாஷ்யகாரர் இதுகொண்டு ஸூத்ரவாக்யங்கள் ஒருங்கவிடுவர்" என்பது ஆசார்யஹ்ருதய திவ்யஸூக்தி. இதை இவர்

(பக்கம் 25ல்) உதாஹரிக்குமிடத்து "ஒழுங்குவிடுவர்" என்றெழுதியிருக்குமழகைக் காணவேணும். பெரியபெரிய ஸ்ரீகோசங்களில் விஷயஞ்சொல்லவேணுமென்று நமது நண்பர்க்குப் பேராசையுண்டு. அந்தோ! என்செய்யலாம்! * ஸம்ருஷ்டாஸ்ரவஸீணாஹஜிஹ்வாஸ்ராயாவஸஹீரவ: । ஸவக்ரம்ஹீணவஸிஷ்ருஸ்ம் ஸஹஹஞ ஹஞ ஸஞதழ * என்ற ச்லோகரத்நத்தைக் கிளரொளியிளமைகெடுவதன் முன்னம் கேட்கப்பெற்றிலரேபாவம்! ஆசார்யஹ்ருதயத்திற்கும் இவர்க்கும் எவ்வளவுதூரம்!, காதில்விழுந்த ஸ்ரீஸூக்தியை ஸ்ரீகோசம்தேடிவாங்கி ஸேவித்தாகிலும் எழுதலாகாதா? (பக்கம் 15ல்) "வானோமறிகடலோதீயோ மாருதமோ" என்று ஆழ்வார்பாசுரமொன்றை உதாஹரித்திருக்கிறார். அந்தோ! விலவறச்சிரித்திட்டேனே. அருமருந்தான திவ்யஸூக்திகள் இப்படியும் உருச்சிதைய நேர்ந்ததே!. என்னதௌர்ப்பாக்யம்!.

[எதிரியின் க்ராம்யோக்திகளும் அநுசிதபாஷணங்களும்.]

20. 'விவாதவிஷயம் எதுவோ, அதில் ப்ரஸங்கிப்பதைவிட்டு இந்த ப்ரகடனங்களெல்லாம் எதுக்கு?' என்று சில தடஸ்தர்களும் நினைக்கக்கூடும். அடுத்தபடியாகவே விவாதவிஷயத்தில் பிரதிபக்ஷியின் ப்ரபலமான பாமரவஞ்சனைகளைப் பன்னிப்பன்னியெழுதவே போகிறேன். அவருடைய நிரக்ஷரகுக்ஷித்வத்தை இங்கு அடியேன் ஸஸாக்ஷிகமாக நிரூபிப்பதன் ஆவச்யகதையை விளக்குகின்றேன் கேண்மின்:—பிரதிபக்ஷி தம்சுவடியில் உபாலம்பமாகவும் பரிஹாஸமாகவும் வொடிகஸகடிஹாஷாஹ்ருணாயியிலே பலபலவாக்யங்களெழுதுகிறார். (பக்கம் 17ல்)

"இவர்களின் மூலபுருஷரான அண்ணாவுக்குத்தான் இவர்கள் கடிதமெழுதித் தெரிந்துகொள்ளவேணும் போலும். டெலிபோனிலாவது தெரிந்துகொள்க." என்றும், (பக்கம் 20ல்)

"ஸ்பெஷல்ட்ரெயினில்போய் அண்ணாவைக்கேட்டே தெரிந்துகொள்ளவேண்டும். நம்மால் ஒன்றும்செய்யமுடியாது." என்றும்

இப்படிப்பட்ட க்ராம்யமான உக்திகளை இவர் அபாரமாக எழுதிவைத்திருக்கிறாரே, அதைப்பற்றி அடியேன் யாதொன்றும் சொல்லவரவில்லை: அத்தகைய பேச்சுக்கள் தவிர வேறொன்றும் ஸஹ்ருதயஹ்ருதயஹாரியாக இவர் பேசக்கற்றிலராதலால் தமக்குக் கைவந்த பாஷைகளை வாரியிறைக்கிறாரென்றே கொள்வோம். அடியேனைப்பற்றி இவரெழுதுகையில் (பக்கம் 23ல்) ஸ்ரீபாஷ்ய

வாஸனையே அடியேனுக்குத் தெரியாதென்றும், (பக்கம் 29ல்) "இம்மாதிரி மணவாளமாமுனிகளைப்பற்றி ஏற்றமாகச் சிலவாக்யங்களைச் சொல்லி தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களை மயக்க யத்தனித்தாலும் மயங்குவாராருமில்லை" என்றும், (பக்கம் 31ல்) "நாம் என்னசொன்னோமென்பதைக்கூட தெரிந்து கொள்ளாமல் இவருக்குத்தோன்றினவற்றை எழுதிவைத்தால் நாம் என்ன செய்வது" என்றும், (பக்கம் 35ல்) "இவர்களின் புத்தியின் கூர்மையேகூர்மை" என்றும் (பக்கம் 21ல்) "தென்னாசார்யர்களுள் அக்ரேஸரர்போல் பாவித்துக் கோண்டிருக்குமிவர்" என்றும் இங்ஙனே இழிவான பல பல அமிதப்ரஸங்க வார்த்தைகளை வரைந்திருக்கின்றார். வாதப்ரதிவாதமென்று வந்துவிட்டால் இப்படித்தான் எழுதநேர்ந்துவிடும் என்று நாம் ஸமாஹிதராகலாமென்று பார்த்தாலும், * யத்வி நகாவி ஹாநிঃ வாகீயாம் வதி நாவஸரே ஶ்ராக்ஷாத் । ஸநவிததத்வேதி வரு ஹாஹாஹாஹேதி உருயதே வேதঃ * என்றகணக்கிலே விரோதிகளுங்கூட ஸஹதராம் அநுசிதமென்னத்தக்க வார்த்தைகளன்றோ இவை.

[எதிரியின் விரலுக்குத்தகாதவீக்கம்.]

21. ஸ்ரீபாஷ்யவாஸனையே உனக்குத் தெரியாதென்று வாதநூல்களில் தாராளமாக எழுதலாம்: 'ஸ்ரீபாஷ்யம் நடையாடுகிற நாட்டிலுங்கூடப் புகுந்தறியாதவன்' என்றும் எழுதலாம். இங்ஙனே பரஸ்பரம் பலர் எழுதிக்கொள்வதுமுண்டு. ஆனால், இப்படி எழுதகிற்கும் அதிகாரிகள் யாவரென்றால், உண்மையில் ஸ்ரீபாஷ்ய பரிசயம் சிறிதேனுமுள்ளவர்களாயிருந்தால் அன்னவர் எழுதலாம். ஆளவந்தார், எம்பெருமானார், பட்டர்போல்வார் தமது திவ்ய க்ரந்தங்களில் பிரதிபக்ஷிகளை நோக்கி எழுதும்போது அவர்கள் தலை தொங்குமாறு வெகுஅற்புதமாக இழித்து எழுதியிருப்பதுண்டு. உண்மையில் ஒப்புயர்வற்ற ஸர்வதோமுகமான பாண்டித்யம் படைத்தவர்கள் அப்படியெழுதுவது தகும். பிரதிபக்ஷிகளும் மோதிரக்கையால் குட்டுப்படுமாபோலவும் * விகுசகுசாபாததாடநம்போலவும் அவ்விழிவுரைகளை ஸத்காரமாகவே நினைக்கவும் விரகுண்டு. அரிச்சுவடியும் பயின்றறியாதார் அந்தநடையை அடியொற்ற விரும்புதல் எவ்வளவுஸாஹஸம்!. அடியேன் ஸ்ரீபாஷ்யம் பலகால் ச்ருதப்ரகாசிகையோடும் அதிகரித்து, ப்ரவசநமும்செய்து, திருநாராயணபுரம் உபயவேதாந்த ப்ரவர்த்தகஸபாஸாம்வத்ஸரிக பரீக்ஷையில் சென்ற ஆங்கீரஸவருஷத்தில் ஸ்ரீபாஷ்யபரீக்ஷாதிகாரி

யாகவும் நியமிக்கப்பெற்று, ¶ ஸ்ரீபாஷ்யஸாராம்ருதம் என்ற ஸம்ஸ்க்ருதக்ரந்தமும் எழுதியிருக்கின்றேன். ஸ்ரீபாஷ்யஸாரமாக ஸ்ரீதேசிகன் அருளிச்செய்துள்ள அதிகரணஸாராவளிக்கு அவதாரிகையெழுதும் வியாஜத்தினால் ஸ்ரீபாஷ்ய ஸித்தாந்தஸாரத்தை விரித்துரைத்து நீண்ட அவதரணிகையெழுதி வேதாந்ததீபிகையில் பிரசுரஞ்செய்துமிருக்கிறேன். இப்படிப்பட்ட அடியேன் வஸ்துதः ஸ்ரீபாஷ்யவாஸனையையே அறியாதவனாக இருக்கலாம்: இதனை ஸ்ரீபாஷ்யம்வல்லவர்கள் எழுதினால் அந்தோ அடியேனுக்குப் பரம போக்யமேயாகும். 'ஸ்ரீபாஷ்யமென்றால் காலணாவுக்கு எத்தனை பலம்?' என்று கேட்கக்கூடிய நம் பிரதிபக்ஷி அவலீலையாக எழுதிவிட்டால் அதைக்கண்டு வாளா இருக்குமவனோ அடியேன்?

[நம் ப்ரதிஜ்ஞை நிறைவேற அவகாசங்கிடைக்குமா.]

22. ஸ்ரீபாஷ்யத்திலோ மற்றும் எந்த வேதாந்தக்ரந்தத்திலோ வித்வான்கள் பரீக்ஷிக்கப்புகுந்தால் முன்னின்று விடையளிக்க அடியேன் ஒவ்வொருக்ஷணத்திலும் ஸித்தனாயிருக்கின்றேன்: இதற்கு இசைய்த்தேனாகில் கைகொட்டிச்சிரிக்கட்டும். இவர் தமது யோக்யதையை இன்னதென்று இயம்ப ஒருவித்வானெதிரே தலைகாட்டமுடியுமா? "வரிஷ்டாவேஷவ்ருநளவிதூம் வஜ்ஜயேசு" என்பதற்கு மாறாகத் தன்னிலைமைக்கு இறையும் ஏலாத இழிவுரைகளை எழுதியிருக்கின்ற இவருடைய நிரக்ஷர குக்ஷித்வத்தை ஏன் பன்னியுரைக்கத் தேவையில்லை. அடியேனுக்கு ஒன்றும்தெரியாது என்பதை இவர் தம் சுவடியிலேயெழுதி அச்சிட்டு வீட்டினுள்ளே அழகுபார்த்துக்கொண்டிருக்கலாமேயன்றி ஒரு ஸதஸ்ஸிலே வந்து ஓரக்ஷரமாவது மூதலிக்க எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் இவராலாகாதென்பது திண்ணம். இவருடைய அக்ஷராப்யாஸ வைதுஷ்யத்தை அடியேன் என்றும் எங்கணும் மூதலிக்க முன்னிற்பேன். அப்படிப்பட்ட ஸந்தர்ப்பம் வாய்க்குமாறு இவர் ஒருகாலும் வெளிவரமாட்டாராதலால் ※ஜீர்ணமெஜ்ஜவ்ஹாஷிதம் ※ என்றாகாமே ஈண்டு ஸ்வல்பமாக வெளியிடுதல்ப்ராப்தமே, யுக்தமே, உசிததமமே.

¶ "சதுச்சாஸ்த்ரஸாரஸுதா" என்று அடியேன் வெளியிட்டுவரும் ஸஞ்சிகைகளில் இது வேதாந்தசாஸ்த்ரஸாரஸுதையாக அமைந்தது; தேவநாகரிலிபியில் அச்சாகிவருகிறது. விரைவில் வெளிவரும்.

[தென்னாசார்ய அக்ரேஸரர் யார்?]

23. எதிரி (பக்கம் 29ல்)—"இம்மாதிரி மணவாளமாமுனிகளைப்பற்றி ஏற்றமாகச் சில வாக்யங்களைச்சொல்லி தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களை மயக்கநினைத்தாலும் மயங்குவாராருமில்லை" என்றெழுதியுள்ளாரே, இதற்கு என்ன அர்த்தமென்று சிறிது விசாரிப்போம். மாமுனிகளுக்கு இல்லாத ஏற்றங்களை ஏறிட்டு அடியேன் எழுதியிருப்பதாக இவர் சொல்லுகிறாரா? அன்றி, மாமுனிகளுக்குஉள்ள ஏற்றங்களிலே அடியேனுக்கு ஹார்த³மான ப்ரதிபத்தியில்லாமல் லோகவஞ்சனைக்காகப் போலியான ப்ரதிபத்தி மாத்திரம் அபிநயிக்கப்படுவதாகச் சொல்லுகிறாரா? என்னகருத்துடன் இவர் அந்த வாக்யங்களை வரைந்திருக்கின்றாரென்பது தெரியவேண்டும். (பக்கம் 21ல்) "தென்னாசார்யர்களுள் அக்ரேஸரர்போல் பாவித்துக்கொண்டிருக்குமிவர்" என்று இவரே யெழுதியிருப்பதையுஞ் சேர்த்து நோக்குங்கால் இவருடைய பொறாமையொன்றே புலப்படும். தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தரில் அக்ரேஸரத்வம் அடியேனுக்கு ஸர்வஜநாதீதமாகவே இருக்குமாகில் அப்படியேயிருக்கட்டும்; உண்மையான அக்ரேஸரத்வமுடைய வ்யக்தி யாவர்? என்று வினவாமற்போவேனே? தென்னாசார்ய அக்ரேஸரத்வமாவது என்ன? என்று விசாரம்வரில், தென்னாசார்ய ஸ்ரீஸூக்திகளை வரியடைவேகற்றும் கற்பித்தும் பலமுகமாக ஸம்ரக்ஷித்தும் போருவதுதான் அது-என்று அடியேனுடைய க்ரஹணம். உண்மையில் இதுதான் தென்னாசார்யஅக்ரேஸரத்வமென்று எதிரியும் இசைவரேல், இப்படிப்பட்ட அக்ரேஸரத்வத்தில் அடியேனொருவன்தவிர வேறு ஒருவ்யக்திக்கும் அந்வயலவலேசமுமில்லை யென்பதை நூற்றுக்கணக்கான-ஆயிரக்கணக்கான தென்னாசார்ய சிகாமணிகளின் வாயில்நின்றேவரவழைக்கத் தடையேகிடையாது. இதற்காகப் புதிய முயற்சியும் அடியேனுக்குத் தேவையில்லை; ஏற்கனவே பலவித்வான்கள் இதனைப் பரவவைத்தேயுள்ளார்கள்.

[நமதுநண்பர்தாம் அன்னாசார்யஅக்ரேஸரர்.]

24. ஆனால், 'இதுவன்று தென்னாசார்ய அக்ரேஸரத்வம்; உச்சிப்போதளவும் காதில் பூணூலை நாலவிட்டு அடையவளைந்தானுடையோடு தெருவேறத்திரிவதும், ச்ரௌதஸ்மார்த்த கர்மாநுஷ்டாநவர்ஜநமும், பூர்வாசார்ய ஸத்க்ரந்த விதூஷகத்வமும், உபய வேதவேதாந்த பாஹ்யத்வமும் முதலானவைதான் தென்னாசார்ய அக்ரேஸரத்வம், என்று நம் ப்ரதிபக்ஷி பரிஷ்கரித்துவிடுவரேல் அப்

போது 'இந்த அக்ரேஸரத்வத்தில் அடியேனுக்கு அணுமாத்ரமும் அந்வயமில்லைதான்' என்று தோற்றுக் கைகூப்பியே நாம் நிற்கவேண்டிற்றாகும். இந்தரீதியில் எதிரி அத்விதீயராய் வெற்றிபெறஉரியவரே. ஆனாலும் இவர்விவக்ஷிக்கிற அக்ரேஸரத்வத்தை ஒருஸதஸ்ஸிலே கேட்கவே நமக்கு விருப்பம்.

[எதிரியின் விபரீதக்ரஹணவிவரணங்கள்.]

25. எதிரி (பக்கம் 31ல்) "நாம்என்னசொன்னோமென்பதைக் கூட தெரிந்துகொள்ளாமல்" என்றெழுதுகிறார். இவர் ஏதோ பெரியசாஸ்த்ரார்த்தங்கள் வெளியிட்டுவிட்டாராம்; அதைக்ரஹிக்கவும் அடியேனுக்கு சக்தியில்லையாம். அந்தோ! இது தன்னிலைமையைத் தானே வெளியிட்டுக்கொண்டபடி. அடியேனெழுதியிருந்ததை ஈஷத்தும் க்ரஹியாமல் இவர்தாம் விபரீதமாக விடையளித்திருப்பவர் என்பதை அல்பஜ்ஞனும் அறியுமாறு காட்டுகிறேன். அண்ணாவைபவவிளக்கத்தில், அண்ணாமணவாளமாமுனிகளிடத்தில் ஆச்ரயித்துஉய்ந்தவர்என்பதற்கு ஸவிவாதமான பல சான்றுகளை அடியேன் நிரூபித்துவருமடைவிலே (பக்கம் 30, பாரா 57.) திருவாய்மொழி ஈடுமுப்பத்தாறாயிரப்படியிலுள்ள சில ஸ்ரீஸூக்திகளுக்கு * ப்ரதிவாதிபயங்கரம் அண்ணாநிர்வாஹம்* என்று ஆத்தான் ஜீயரரும்பதவுரையில் உபபாதநம்செய்யப்பட்டிருப்பதையெடுத்துரைத்து * உயர்வறவுயர்நலம் பாசுரத்தினீட்டில் ஹாஸ ஹாவமென்றுள்ளதை விவரிக்கப்புகுந்த இரண்டு அரும்பதவுரைகாரர்களும் * ஹாஸ வஹாவ: ஹாஸஹாவ: என்று ஸது ஹாஹாவத்தைச் சொல்லுகிறதென்று ப்ரதிவாதிபயங்கரமண்ணாநிர்வாஹம் * என்றெழுதியிருப்பதையும் உதாஹரித்து "அண்ணாவுக்கு மணவாளமாமுனிகளின் ஸம்பந்தமில்லையாயின் அண்ணாவின் இந்த நிர்வாஹம் வெளிவரப்ரஸக்தியேயில்லை" என்றும், "ஈட்டு ஸ்ரீஸூக்திக்கு அண்ணாநிர்வாஹமிருப்பது மணவாளமாமுனிகளின் ஸம்பந்தவழியாலன்றி மற்றொருவகையாலும் பொருந்தமாட்டாது" என்றுமெழுதி முடித்திருக்கிறேன். இது இன்னவிஷயமென்றே நம்எதிரிக்குப் புலப்படவில்லை. இங்கு அடியேனுடைய நிரூபணம் என்னவென்றால், உபதேசரத்னமாலையில் "சீரார்வடக்குத்திருவீதிப்பிள்ளை" என்றுதொடங்கி யருளிச்செய்த இரண்டுபாசுரங்களின்படியே ஓராண்வழியாகவே வந்துகொண்டிருந்த நம்பிள்ளையீடு மணவாளமாமுனிகள்காலத்தில்தான் விரிவான ப்ரசாரத்தையடைந்தது. தேசிகனுக்குப்பிற்பட்டவரும் மணவாளமாமுனி

களின் யௌவநத்திலே பரமபதித்தவரும் பன்னீராயிரப்படி உரைகாரருமான வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயர்க்குக்கூட நம்பிள்ளையீடு அணுமாத்திரமுங்கிடைக்கவில்லையென்பது நன்கு நிரூபிக்கப்பட்டுளது இங்ஙனே அனேகவிஷயங்களிருக்கின்றன. மணவாளமாமுனிகளின் இளமையில் ஈட்டுக்கு ப்ரசாரமேயில்லாமையாலும், தேசிகனும் அவரது திருக்குமாரரும் பெரியவாச்சான்பிள்ளையின் இருபத்தினாலாயிரப்படியையே ஸேவித்தவர்களாதலாலும், அண்ணாமணவாளமாமுனிகளிடத்தில் அந்வயம் பெறாதவராகவே பரமபதித்திருந்தால் ஈட்டு ஸ்ரீஸூக்திகளுக்கு அண்ணாநிர்வாஹமாக அர்த்தங்கள் வெளிவர ப்ரஸக்தியேயில்லை;—அப்படி வெளிவந்திருப்பதால் அண்ணாவுக்கும் மாமுனிகளுக்கும் ஸம்பந்தம் இசைந்தேயாகவேண்டும். என்பது அடியேனெழுதியிருப்பதன் தாற்பரியம். உண்மையில் இதுவொரு முக்கியமான விஷயம்.

26. இதற்கு நம் பிரதிபக்ஷி மறுப்புரைக்கவேணுமானால், 'மாமுனிகளுக்கு நெடுநாள் முன்னமே ஈட்டுக்கு ஸர்வத:ப்ரசாரமுண்டு' என்றோ, 'அண்ணாநிர்வாஹமென்று அரும்பதவுரைகாரர்கள் எழுதியிருப்பது அவிச்வஸநீயம்' என்றோ மற்றும் வேறுவகையாகவோ தம்முடைய ஸ்வச்சந்தப்ரலாபப்ரக்ரியையிலே எழுதியிருக்கலாம். அண்ணா அருளிச்செய்ததாக அடியேன் காட்டியிருந்தக்ரந்தங்களுக்கு ஸ்வச்சந்தமாக இவர் அவிசத்திகள் எழுதியிருப்பதுபோலவே இந்த விஷயத்திற்கும் ஏதோவொன்றையெழுதியிருக்கலாம். ஆனால் இவர் என்னமறுப்பு எழுதியிருக்கின்றாரென்றால், (பக்கம் 32ல்)

> "தேசிகனுடைய த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளிபோல் அரும்பதத்தில் அண்ணாவின் நிர்வாஹம் ஆதரிக்கத்தட்டில்லை; இத்தால் அவர் தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர் என்று சொல்ல முடியாது"—என்றெழுதியுள்ளார்.

அடியேனுடைய அபிப்ராயத்தை இவர் என்ன அழகாக க்ரஹித்து விடையளிக்கிறாரென்று விவேகிகளே இவர்க்குக் கருப்பூரங்கொளுத்திப் போட வேண்டும். தேசிகனுடைய த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளிக்கு இங்கு த்ருஷ்டாந்தீகரணப்ரஸக்தி லவலேசமாவது உண்டா? 'அண்ணாநிர்வாஹத்தை என் ஆதரிக்கிறீர்கள்?' என்று யாரேனும் கேட்டதுண்டோ? ஒன்றுகிடக்கவொன்று ஓதிவைக்கிறவர் யாரென்பதை நிபுணர் நோக்குக.

[தீர்த்தபஹுமாநச்சிறப்புவிஷயம்.]

27. இன்னமும் பாருங்கள்;— அண்ணாவைபவவிளக்கத்தில் (பக்கம் 36=பாரா 71, 72.) இவ்வுலகில் எத்தனையோ ஆசார்ய புருஷர்களிருந்தாலும் கோயில் திருமலை பெருமாள்கோயிலென்ற மஹாதிவ்ய தேசங்களிலெங்கும் ஸந்நிதி தீர்த்தகாரர்களாயிருத்தலாகிற பஹுமாநம் பெற்றுநிற்கும் ஆசார்யபுருஷர் ப்ரதிவாதிபயங்கர வம்சஸ்தர்களே யல்லது வேறு எவருமில்லை யென்பது ப்ரத்யக்ஷமே. ஒவ்வொரு திவ்யதேசத்தில்தான் சிலசில ஆசார்ய புருஷர்க்குப் பரிசுகள் இருக்கும். அங்ஙனல்லாமல் ப்ரஸித்த திவ்ய தேசங்களிலெங்கும் ஒருங்கே மரியாதைச் சிறப்புப் பெற்றுவருபவர் அண்ணா திருவம்சஸ்தர்களே யென்பதை எத்தனை தடவை இயம்பினும் மிகையாகாது. இதில் மற்றையோர் பொறாமைப்பட்டு முடிந்து பிழைக்கலாமத்தனையல்லது எற்றைக்கு மேழேழ்பிறவிக்கும் கோர மாதவஞ் செய்தாலும் இத்தகைய வீறுபாடு இன்னொருவர்க்குக் கனவிலுங்காணக் கிடைக்காதென்பது * ஸத்த்வம் ஸத்த்வாநுரூபம் உத்க்ருஷ்டம் ஜாயதே. * என்று எழுதியிருந்தேன். இதை அடியேன் எதற்காக எழுதினேனென்றால், ப்ரதிவாதிபயங்கரவம்சஸ்தர்கள்மீது பலபேர்களுக்கு அபாரமான பொறாமையுண்டு; அஸாதாரஸாதாரணமான ஏற்றம் இவர்களுக்கிருப்பதாலும், மற்றை ஒரு ஆசார்யபுருஷர்க்கும் இப்படி வ்யாப்தமான சிறப்பு இல்லாமையாலும் பொறாமைப்பட்டு அதற்குப் போக்குவீடாக ஏதோ தூஷணைச்சுவடிகளைப் பிறர் எழுதுகிறார்கள் - என்று எதிரியின் ப்ரவ்ருத்திக்கு நிதாநமுரைத்ததேயொழிய, 'மணவாளமாமுனிகள் அண்ணாவுக்குக் கோயில் திருமலை பெருமாள்கோயில்களில் சிறப்புகளை ஏற்பாடு பண்ணிவைத்தார், ஆகையாலே மாமுனிகளிடத்தில் அண்ணா ஆச்ரயித்தவர்' என்று அந்த ஸம்பந்த ஸ்தாபநார்த்தமாக எழுதினேனில்லை. இதை இப்போது அடியேன் விவரிக்க வேண்டாதபடி அதிலேயே (பாரா - 74) * அஸாத்வஸத்த்வம் மஹாந்தம் த்ருஷ்ட்வா நிராம்ஸ்யம் குர்வந்தே * என்பதற்கேற்ப இத்தகைய பெருமையைப் பெறமாட்டாத வருத்தத்தினால்......அந்த வருத்தத்திற்கும் பொறாமைக்கும் போக்குவீடாக ஏதேனும் செய்தல்லது தரிக்கமாட்டாத தன்மையினால் ஒரு மாறுகோலம்பூண்டு பாமரர்க்கும் ரஞ்ஜநமல்லாததை வித்வந்மநோரஞ்ஜநமென்றிட்டு அஸம்பத்த ப்ரலாபங்களை வெளியிடுவித்ததானது * என்று ஸ்பஷ்டமாகவே எழுதியிருக்கின்றேன்.

28. இதற்கு நம் எதிரி மறுப்புரைக்கவேணுமானல், 'ப்ரதிவாதிபயங்கரத்தார்கட்கு அந்த மூன்று திவ்யதேசங்களிலும் மரியாதைகிடையாது' என்றோ, 'மற்றும் பல ஆசார்யபுருஷர்களுக்கும் அப்படிப்பட்ட மரியாதை உண்டு' என்றோ, 'இது பொருமைக்கு ஹேதுவான ஏற்றமன்று' என்றோ எழுதியிருந்தால் தகும். அந்த வழியைவிட்டு இவர் (பக்கம் 32ல்) அடியேனுடைய உக்தியையே தவருக உதாஹரித்துக் காடுபாய்ந்து தூஷித்திருக்கின்ருர். அதாவது—"கோயில் திருமலை பெருமாள்கோயில்களில் ப்ரதிவாதிபயங்கரத்தார்க்கு எவருக்குமில்லாத ஓர் அதிசயம் உண்டாம். அதாவது தீர்த்தமர்யாதையாம். இதற்குக் காரணம் மணவாளமாமுனிகள் ஸம்பந்தமாம்" என்று அநுவதித்திருக்கிருர். விளக்கநூலில் (பாரா 73) "எமது குலத்தவர்க்கு அஸாதாரணமாக இப்பெருமை வாய்ந்தது மணவாளமாமுனிகளின் திருவருளுக்கு அண்ணு முக்கியஇலக்காகப்பெற்றதனுல்தான் என்று அடியோம் பரம்பரையாக அநுஸந்தித்து வாராநின்றோம்" என்று அடியேனெழுதியிருப்பதற்கு விபரீதார்த்தக்ரஹணமயமிதுபோலும். தீர்த்தமரியாதை அண்ணுவுக்குக் கிடைத்ததென்று எழுதினேனே? "இந்தவுபதேசரத்தினமாலை தன்னைச், சிந்தை தன்னில் நாளும் சிந்திப்பார்—எந்தை யெதிராசரின்னருளுக் கென்றுமிலக்காகிச், சதிராக வாழ்ந்திடுவர் தாம்" என்று மணவாளமாமுனிகள் அருளிச்செய்கிருர். இதனுல் எம்பெருமானுருடைய க்ருபை அக்காலத்திலிருந்தவர்களிடத்திற்போல் பிற்காலத்தவர்களிடத்திலும் பலிக்கக் குறையில்லை யென்பது விளங்கும். என்றைக்கோ இருந்த எம்பெருமானுருடைய க்ருபை இப்போது எங்ஙனே பலிக்கும்? என்று இதில் குசோத்யம் பண்ண வொண்ணுதிறே. இதுபோலவே, மணவாளமாமுனிகளின் திருவருள் அண்ணுவழியாகப் பிரதிவாதிபயங்கரம் ஸ்ரீரங்காசாரியர் என்ற வொருவரிடத்தில் காஞ்சியில் இருநூறுவருடங்களுக்கப்பால் பலித்ததாகச் சொல்லுவதில் என்னகுறை? "ஸ்ரீராமபிரானுடைய க்ருபையினுல் எனக்குப் பிள்ளைபிறந்தது" என்று ஒருவர்சொன்னுல், 'த்ரேதாயுகத்தில் விண்ணுலகெய்திய இராமன் எப்படி உனக்கு க்ருபைசெய்யக்கூடும்?' என்று கேட்பவருண்டோ? "அடியோம் பரம்பரையாக அநுஸந்தித்து வாராநின்றோம்" என்று அடியேன் எழுதியிருக்கும் வாசகத்தையும் ஊன்றிநோக்கவேணும். எம்பெருமானுரே மணவாளமாமுனிகளாகத் திருவவதரித்ததனுல் *ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம்* என்னுமாபோலே அந்த மாமுனிகளின் திருவாணையே வீறுபெற்றுவரும்படியான

திவ்யதேசங்களில் அஸ்மத்ஸந்ததியாருக்கு அத்விதியமான ஒரு சிறப்பு ஏற்பட்டிருப்பது அந்த மாமுனிகள் அஸ்மத்கூடஸ்தர்பால் அமையவைத்த க்ருபாபலம் என்று நாங்களநுஸந்திக்கிறோமென்றால் இதில் என்ன தகுதியின்மை? அநுஸந்தானத்திலுமா பொறுமை.

க்ரந்தசைலி அறியாமை.

29. எதிரி கிரஹித்திருக்கும் அபிப்ராயங்கொண்டு அடியேன் எழுதியிருப்பேனாகில் “கோயில் திருமலை பெருமாள்கோயில்களில் அண்ணாவுக்கு மாமுனிகள் தீர்த்தமரியாதை ஏற்படுத்தியதாக சாஸநமிருப்பதால் இது கொண்டும் மாமுனிகளின் ஸம்பந்தம் அண்ணாவுக்குண்டென்பது திண்ணமாம்” என்று இரண்டுவரியில் முடித்திருப்பேன். இதை 58 ஆம் பாராவுக்கு அடுத்தபடியாகவேதான் அடியேன் எழுதியிருக்கவும் வேண்டும். ஶாஸ்த்ரிகஸௌஹ்ருதி இன்னதென்றேதெரியாமலும் வாசகத்தின்சுவை ஈதென்றறியாமலும் ஆரவாரிக்குமழகு இது.

[எமது தீர்த்தமரியாதைச் சிறப்பின் அத்விதீயத்வம்.]

30. எப்படியாயினும், பெரிய திவ்யதேசங்களிலெங்கும் ப்ரதிவாதிபயங்கரத்தார்க்கு அஸாதாரணமான தீர்த்தமர்யாதையுண்டென்பதை நம்நண்பர் (பக்கம் 33ல்) சிலாசாஸனமாக்கிவைத்திருக்கின்றார். தமது பொறுமைக்கு ஹேது புஷ்கலமென்று காட்டிவிட்டார். கோயிலில் ஸ்ரீரங்கநாராயணஜீயர்க்கும் ஆழ்வானுண்டான் ஸந்ததியார்களுக்குமே தனியருளப்பாடும் ஸமதீர்த்தமும் இருப்பதாக எழுதுகின்றார். கோயில்முதலிய மூன்றுதிருப்பதிகளிலும் ப்ரதிவாதிபயங்கரர்கட்கு முதல்தீர்த்தமர்யாதை யில்லையேயென்று ஏசுவார்போன்று எழுதுகின்றார். இதற்குரைக்கேன் கேண்மின்; சிறப்பு என்பது பலவிதம். * ஸுஶ்ராவ்யம் வசுவல்லீ * ஸஹ்ஹிதம் வசுவல்லீ * இத்யாதியாக வையாகரணர்திகள் சொல்லுமாபோலே சிறப்புக்களும் காரணபேதேந விவிதமாயிருக்கும். “ஆழ்வார்கள் பதின்மரும் பாடப்பெற்ற ஏற்றம் ஸ்ரீரங்கமொன்றுக்குத்தானுண்டு” என்று ஒருவர்சொன்னால், ‘திருவாய்மொழியில் நம்மாழ்வார் ஸ்ரீரங்கத்தைப் பத்தேபத்துப்பாசுரங்களினால்மாத்திரம் பாடியிருக்கிறாரேதவிர வேறொரு திணுக்கைகூட ஸாதிக்கவில்லையே; அந்தப்பத்துப்பாசுரமும் ஏழாம்பத்தில் (அறுநூற்றுப்பத்துப்பாசுரங்களுக்கப்பால்) இருக்கின்றதேயன்றி, தொடக்கத்தில் இல்லையே!’ என்று மற்றொருவர் உள்ளதையே சொன்னாலும் அந்தச்சிறப்புக்கதொருகுறையும் வாராதுகிடீர். 1. அதிகமான

பாசுரங்களால் பாடப்பெறுதல்என்பது ஒருவகைச்சிறப்பு. 2. முந்துறப்பாடப்பெறுதல் என்பது ஒருவகைச்சிறப்பு. 3. அதிக வ்யக்திகளால்பாடப்பெறுதல் என்பது ஒருவகைச்சிறப்பு. அதுபோலவே ஆசார்யபுருஷர்களுக்குள்ள ஸந்நிதிமரியாதைகளிலும், 1. அதிகமான வரிசைவருமானங்களைப் பெறுவதென்பது ஒரு ஏற்றம். 2. அக்ரதீர்த்தமரியாதை பெறுவதென்பது ஒரு ஏற்றம். 3. பலபல திருப்பதிகளில் மரியாதைபெறுவதென்பது ஒரு ஏற்றம். இவை பரஸ்பரம் அபவாதகங்களல்ல. ஆழ்வாரருளிச்செயல்களில் திருவரங்கம் பெரியகோயிலுக்கு எவ்விதமான சிறப்புஉள்ளதோ அவ்விதமான சிறப்பே ப்ரதிவாதிபயங்கர வம்சஸ்தர்களான எமக்குத் திவ்யதேசங்களில் விளங்கிவருகின்றதென்று பொலிகின்றோம். இந்தச்சிறப்பு எமக்கு என்றைக்குக்கிடைத்தாலென்ன? என்ன உபாதியால்கிடைத்தாலென்ன? இவ்வகையான ஏற்றம் இந்த நிலவுலகில் ப்ரதிவாதிபயங்கரவம்சஸ்தர்க்கன்றி மற்றொருஸ்ரீவைஷ்ணவர்க்கும் நாஸ்தி என்றால் இவர் கரணைக்கிழங்காகத் தம்மைத் தேய்த்துக்கொள்ளலாமேயன்றி வேறுஎன்ன செய்யமுடியுமையோ பாவம்!. இவ்விஷயத்தில் இப்போது இவ்வளவோடு நிற்போம். நாம்எழுதினதின் அபிப்ராயத்தை வாங்கிக்கொள்ளாமலே எதிரி ஆகாசதாண்டவம் செய்கிறாரென்பதற்குமாத்திரம் இதுவுமொரு சான்றாகக் காட்டப்பட்ட தத்தனை.

[அநாதரணீய க்ரந்தங்களையும் உதாஹரிப்பதன் நோக்கம்.]

31. இங்ஙனமே மற்றொன்றுங் காண்மின்;—அண்ணாவுக்கும் மணவாளமாமுனிகளுக்கும் காலஸாம்யமேயில்லையென்றும், மாமுனிகள், மாமுனிகளென்கிற திருமாமம் பெறுவதற்கு நெடுநாள் முன்னமே அண்ணா பரமபதித்துவிட்டாரென்றும் எதிரி முன்னூலில் எழுதியிருந்தார். இதை யதீந்த்ரப்ரவணப்ரபாவம் முதலிய தென்னாசார்ய ஸம்ப்ரதாயக்ரந்த ப்ரமாணங்களைக்கொண்டு அடியேன் மறுத்ததோடு நில்லாமல் (விளக்கநூலில் பாரா 24, 25ல்) வடகலை ஸம்ப்ரதாயத்தில் வழங்கிவருகின்ற மூவாயிரப்படி குருபரம்பராப்ரபாவநூலைக்கொண்டும் மறுத்தொழித்தேன். அதனைக் கண்ட நமது நண்பர் இப்போது (பக்கம் 21ல்) "இவ்விஷயத்திற்கு மாத்திரம் இவர் வடவாசார்ய குருபரம்பரையை ப்ரமாணமாகக் காட்டி வடவாசார்ய க்ரந்தமான மூவாயிரப்படி குருபரம்பரையை ஆதரிப்பவர்போல் பாவிக்கிறாரே, இவர்பாவனாப்ரகாரத்தை மேலே காட்டுகிறோம்'' என்றெழுதி, ஏற்கனவே பாது

காஸஹஸ்ராவதார தத்துவ நூலில் அடியேன் அந்த குருபரம்பரா ப்ரபாவத்தைப்பற்றி எழுதியிருந்த வாக்கியத்தையும் எடுத்துக் காட்டி, † ப்ரதமபாடப்படிப்பும் தமக்கில்லாமையையும் விளங்கக் காட்டி ஏசியிருக்கின்றார்; இஃது எந்தக் குருடன் கண்ணில் மண்ணைத் தூவுகிறபடியோ? எதிரியின் பெயரின் உண்மைப்படியே அவர் வடகலைஸம்ப்ரதாயஸ்தராதலாலும், அவருக்கு அந்த மூவாயிரப்படி குருபரம்பரை ஆதரணீயமேயாதலாலும் 'நீர் செய்கிறவாதம் நுமது ஸம்ப்ரதாயக்ரந்தத்திற்கே விருத்தம்' என்றுமாத்திரம் அடியேன் காட்டவேண்டி அந்த மூவாயிரப்படியை உதாஹரித்திருக்கிறேனா? அல்லது அடியேன் அதை வாஸ்தவப்ரமாணமென்று ஆதரித்து உதாஹரித்திருக்கிறேனா? என்பதை அக்ஷராஸ்யர்களன்றோ அறிய வல்லார். தென்கலைஸம்ப்ரதாயஸ்தர்கள் ஆதரிக்கும் க்ரந்தங்களை விட்டிட்டு இதரஸம்ப்ரதாயக்ரந்தத்தை மாத்திரமே அவலம்பமாகக்கொண்டு அடியேன் ஸமீஹிதஸமர்த்தநம் செய்திருந்தால் இவர் இகழலாம். ஸ்வஸம்ப்ரதாயத்தில் எத்தனைபுத்தகங்களுண்டோ அத்தனையையுங்காட்டி நிருபணஞ் செய்ததோடுகூட இதர ஸம்ப்ரதாயக்ரந்தஸம்வாதத்தையும் காட்டி இசைவித்தல் ஆளவந்தார் முதலிய முன்னோர்களருளிய திவ்யக்ரந்தங்களின் முறைமையேயாகும். ஒரு விசிஷ்டாத்வைதியோடே வாதம்பண்ணப்புகுந்த அத்வைதி 'ப்ரஹ்மம் ஜகத்காரணமன்று' என்று வாதித்தால், அப்போது அந்த வாதத்தை ஸ்ரீவைஷ்ணவர் தாம் கௌரவிக்கும் க்ரந்தங்களைக்கொண்டு கண்டிப்பதோடுகூட "சங்கரபாஷ்யத்திலும் இங்ஙனமேதான் கூறப்பட்டுளது" என்றும் உபபாதித்தால் ஹாஹா! குத்ருஷ்டிக்ரந்தத்தையா ப்ரமாணமாகக் காட்டுகிறது! என்றிகழும் யதாஜாதன்படியன்றோ எதிரியின் ஹேளநம்.

[த்ருஷ்டாந்த விசேஷத்தால் அதை த்ருடீகரித்தல்.]

32. தேசிகனுடைய ரஹஸ்யத்ரயஸாரக்ரந்தம் லோகாசார்ய ஸம்ப்ரதாய விப்ரதிபமென்பது ப்ரஸித்தம். அதிலுள்ள சிலசில அர்த்தங்களை மணவாளமாமுனிகளும் * நெற்செய்யப் புல்தேயுங் கணக்கிலே மறுத்திருக்கின்றார். அப்படிப்பட்ட ரஹஸ்யத்ரயஸாரத்திலுள்ள பலவாக்கியங்களை லோகாசார்யருடைய ரஹஸ்யத்தின் வியாக்கியானத்திலேயே மணவாளமாமுனிகள் பன்முறையும் உதாஹரித்திருக்கக்காண்கிறோம். இதனால் ரஹஸ்யத்ரயஸாரத்தை மாமுனிகள் திருமுடிமேற்கொண்டாரென்றுகூற இடமுண்டோ? ஒரு ஸம்ப்ரதாயஸ்தர்க்கும் உடன்பாடல்லாத நூதநவிஷயத்தை

† இவ்விஷயம் கீழே பக்கம் 10-ல் விசதம்.

எதிரிசொல்லுகிருரென்பதை நன்கு விசதீகரிக்க அடியேன் உபய
ஸம்ப்ரதாயக்ரந்த ஸம்வாதத்தையும் காட்டினபடியேயன்றி, அதை
உதாஹரித்தவளவால் அதில் கௌரவபுத்தியும் விளைந்திட்டதாகக்
கூறி முரண்பாடுகாட்ட வந்தது க்ரந்தசைலியறியாமை.

[எதிரியின் வைதண்டிகத்வ ப்ரகாசநம்.]

33. ஒரு ஸம்ப்ரதாயத்திலும் ஒருஸம்ப்ரதாயக்ரந்தத்திலும்
ஆதரமின்றி * முராரேஸ் த்ருதீய: பந்தா: * என்றிருப்பவர் நம் எதிரி
யேயென்பதை இனி மூதலிக்கிறேன். கோயிலண்ணன்முதலானார்
க்கு அண்ணா ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபம் ஸாதித்தாரா இல்லையா? என்
கிறவிஷயம் வெகுதூரத்திலிருக்கட்டும். அதில், ப்ராசீநக்ரந்தங்களி
லுள்ள உண்மைக்குமாருக இவர் சொல்லுகிறபடிதான் பரமார்த்த
மென்றே நாமும் இசைந்ததாக வைத்துக்கொள்ளட்டும். பிள்ளை
லோகாசார்யர் தேசிகனிடத்திலே சிலஸ்வரூபக்ரந்தங்கள் அதிகரித்த
தாகவும், தேசிகன்தாம் பிள்ளைலோகாசார்யரிடத்தில் அதிகரித்த
தாகவும் இப்படிச்சுவடியேறிநிற்கும் பலபல விஷயங்களில் உண்மை
யாகவுள்ளதைத் தெரிந்துகொண்டிருக்கின்ற ஸர்வஜ்ஞனே இவ்
வுண்மையையும் தெரிந்துகொள்ளட்டும். * வாயஹுஹெஸிகாதீ
நாம ஸ்ரீலாஷ்யாயஹூஉாயிநெ * என்று அண்ணாவுக்கு நீங்கள்
மங்களம் அநுஸந்திக்கலாகாதென்று தடையாணை பிறப்பிக்க நம்
எதிரியால் எப்பிறவியிலும் இயலாது. கந்தாடை சிஷ்யர்களாயும்
நூற்றுக்கணக்கான மஹான்களுக்குக் காலக்ஷேபம்ஸாதித்துப் புகழ்
பெற்றவர்களாயும் ப்ராசீநர்களாயும் விளங்கின வைத்தமாநிதி
முடும்பை அப்பங்கார்ஸ்வாமிமுதலானார் பதிப்பித்துள்ள யதீந்த்ர
ப்ரவணப்ரபாவநூல்களில் உள்ள விஷயங்கள் *பேர்க்கவும்பேராவே.
ஆனல் அதைப்பற்றின விசாரத்தை ஒதுக்கிவைத்துக்கொண்டு,
மணவாளமாமுனிகள் திருநாடலங்கரித்த பிறகும் அண்ணா ஜீவித்
தெழுந்தருளியிருந்தது உண்மையா? உண்மைக்கு எதிரா? என்கிற
ஒருவிஷயத்தைமாத்திரம் முந்துற விமர்சிப்போம்.

[எதிரி மருளமருள் விழிக்கவேண்டுதல்.]

34. பிரகிருதத்தில் எதிரி தமதுநூலில் முகப்பில் அண்ணா
வின் சரித்திரத்தை மூன்று விதமாகப் பகுத்து வடகலைகுருபரம்
பரையிலெழுதியுள்ள விதமாக ஒன்றும், தென்னுசார்யர்களின்
யதீந்த்ரப்ரவணப்ரபாவத்தில் உள்ளவிதமாக ஒன்றும், ப்ரதிவாதி
பயங்கரத்தார் புஸ்தகங்களிலுள்ளவிதமாக ஒன்றும் ஆக மூன்று
வலகைகளை அநுவாதஞ்செய்துகாட்டியிருக்கின்றூர். "இவற்றுள்

எந்தவகைகயைத் தாம் உண்மையெனக்கொள்கின்றார்?'' "பலபதிப்புக்களுள் ஏதாவது ஒரு யதீந்த்ரப்ரவணப்ரபாவத்தையாவது இவர் ப்ராமாணிகமாகக் கொள்வதுண்டா இல்லையா?'' என்கிற இவ்விரண்டு வினாக்களுக்குமாத்திரமே இவர் விடையிறுத்தாற் போதும். ப்ரதிவாதிபயங்காத்தார் வெளியிட்டிருக்கிற அண்ணாவைபவநூல்கள் அப்பால்கிடக்கட்டும். அவற்றைப் பிறகுகொள்வோம். முப்பதுவருஷங்களுக்குமுன் அண்ணாவைபவ பரமாக யாதொரு நூலும் ப்ரதிவாதிபயங்கரர்களால் வெளிவந்திருக்கவில்லை. கி. பி. 1900 ஆம் வருஷத்தில் இந்த சர்ச்சையை நாம் எடுத்துக்கொண்டதாக வைத்துக்கொண்டு வாதம்நிகழ்த்துவோம். என்ன சொல்லுகிறீர்?—என்று நாம்கேட்டால் மருளமருள விழிப்பது தவிர வேறொன்றும் செய்யப்போகாது. முற்காட்டிய நூல்களில் பரஸ்பரவிரோதம் இருப்பதாக இவர் எழுதுகின்றார். ஒவ்வொரு சரித்திரத்திலும் புஸ்தகபேதேந எத்தனையோ வேறுபாடுகள் இருக்கவேயிருக்கின்றன. ஸ்ரீராமக்ருஷ்ணாதிகளின் சரித்திரங்களில் நூற்றுக்கணக்கான வேறுபாடுகள் இல்லையா? பிராட்டியை இராவணன் கூந்தலைப் பற்றியீர்த்துத் துடையில் உட்காரவைத்துக் கொண்டுபோனதாக வான்மீகி கூறுகின்றார். நிலத்தோடேபெயர்த்தெடுத்துக்கொண்டுபோனதாகக் கம்பர் இயம்புகின்றார். இப்படிப் பட்டபேதங்கள் பல்லாயிரம். புராணகதைகள் கிடக்கட்டும். உடையவர்சரித்திரத்தை யெடுத்துக்கொள்வோம். திவ்யஸூரி சரிதம், யதிராஜவைபவம், ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம், ராமாநுஜார்யதிவ்யசரிதை எல்லாவற்றிலும் ஏகரூபமாகவா சரித்திரமுள்ளது. எத்தனைமுரண்பாடுகள் இல்லை?. உள்ளவற்றுள் உசிதமாகத்தோன்றுகிற ஒருவகையைக் கொள்ளலாமேயல்லது புதிதாக ஒருவகைசொல்லப் புறப்படுதல் பேதைமையன்றோ?

[பரஸ்பரவிரோதப்ரதர்சநம் இஷ்டஸாதகமாகாது.]

35. ராமாயண சரித்திரங்களில் பலபேதங்களிருப்பினும், 'இராமன் தசரதன்மகன்; ஸீதாபதி, ராவணத்வம்ஸீ' என்கிற ப்ரதாநப்ரமேயங்களை யாரேனும் வேறுபடுத்துவாருண்டோ? ஏதோ விஷயங்களில் முரண்பாடுகள் இருக்கின்றனவென்பதைக்கொண்டு 'ஸீதையின்காலத்தில் ராமனேயில்லை; ராமன்காலத்தில் வாலியேயில்லை; வாலிகாலத்தில் ராவணனேயில்லை' என்று யாரேனும் சொல்லுவாருளரோ? இங்ஙனமே, உடையவர்சரித்திரத்தில் பலமுரண்பாடுகள் உள்ளனவென்பதையேகொண்டு ப்ரஸித்தங்களான ப்ரதாநப்ரமேயங்களிலும் வேறுபாடு செய்யவொண்ணுமோ? அண்ணா

மணவாளமாமுனிகளின் க்ரந்தப்ரவசநஸமயத்திலேயும் எழுந்தருளியிருந்தாரென்ற விஷயத்தில் எந்த க்ரந்தத்தோடு எந்தக்ரந்தத்திற்குமுரண்பாடு இருக்கின்றது? இவர்காட்டுகின்ற ஸகல க்ரந்தங்களாலும் இவ்விஷயம் கல்வெட்டாகத்தேறுகின்றதேயன்றி ஒன்றினாலும் அபவதிக்கப்படவில்லை. இஃதொன்றுக்குளென்னபதில்?

[விளக்கநூலால் எதிரி திருந்தினமை.]

36. எதிரி (பக்கம் 21ல்) “மணவாளமாமுனிகளை ஆச்ரயித்ததாகச்சொல்லப்படுகிறஅண்ணா நயினாராசார்யர் திருவடிகளில் ஆச்ரயித்தவரேதான் என்று யதீந்த்ரப்ரவணப்ரபாவத்தில் கிடையாது.” என்றெழுதியிருப்பதைப் பார்க்குமிடத்து, மாமுனிகளின் சிஷ்யவர்க்கத்தில் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணா என்றவொருவர் இருந்தாரென்பதைத் தாமும் இசைகின்றதாகவும், ஆனால் அவர் நயினாராசார்யரிடத்தில் அந்வயித்திருந்து வந்தாரென்ற விஷயத்தில் மாத்திரம் புதுமை கூறுவதாகவும் விளங்குகின்றது. ஆனால் இந்தவாதம் இவருடைய முதனூலில் இல்லாது இப்போது தலைகாட்டி யிருத்தலால் நமது அண்ணாவைபவவிளக்கம் இவரைப்படுத்தியிருக்கும்பாடு இங்குநன்கு தெரியலாயிற்று. மாமுனிகள்திருவடிகளில் ஆச்ரயித்த ஒவ்வொரு சிஷ்யர்களுடையவும் பூர்வவ்ருத்தங்களையுங்கூட எடுத்துரைக்க யதீந்த்ரப்ரவண ப்ரபாவத்திற்கு என்ன கடமையோ? வானமாமலைஜீயர் முதலான மற்ற திக்கஜங்களின் பூர்வவ்ருத்தங்களை அது உரைத் திருப்பதுண்டோ? ஸ்ரீவைஷ்ணவஸமயாசார நிஷ்கர்ஷம் முதலிய பொதுக்ரந்தங்களில் அண்ணாவின் பூர்வவ்ருத்தமும் எழுதப்பட்டிருப்பதால் வ்யக்திபேதவாதத்தை இவர் அரண்யத்திலே சென்று கதறலாம்.

அண்ணாதனியன் விசாரம்.

37. அண்ணாதனியன் ※ வேதாந்ததேசிககடாக்ஷவிவ்ருத்தபோதம் காந்தோபயந்த்ருயமிந: கருணைகபாத்ரம் ※ என்பதாக அல்லாமல் ※ வேதாந்ததேசிககடாக்ஷவிவ்ருத்தபோதவித்வஜ்ஜநேட்யவரதார்யக்ருபைகபாத்ரம் ※ என்பதாகவேதான் இருக்கத் தகுதியுடையதென்றும் இவ்விதமாகத்தான் அண்ணாஸாதித்த ஸப்ததிரத்நமாலிகையின் தலையில் பிரசுரஞ்செய்யப்பட்டிருக்கிறதென்றும் சிலவாதங்கள் செய்கிறார் நம்எதிரி; இதற்குத் தினவடங்கவிடையளிப்போம். ‘வித்வஜ்ஜநேட்ய’ இத்யாதி

யைக்கொண்ட ச்லோகம் தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தில் ஒருதிரு மாளிகையிலும் வழங்குவதன்று. தென்கலை ஸம்ப்ரதாயத்தில் அண்ணா தனியன் பிரதிவாதிபயங்கரத்தார்கட்குமாத்திரமே ப்ராப்தமன்று. ஸகல [அல்லது, அனேக] தென்கலையார்களுக்கும் ஸ்ரீபாஷ்யத்தனியன்பரம்பரையில் இது ப்ராப்தம் என்பதை மறுக்கமுடியாது. ஏன்? பலஆசார்யபுருஷர்கள் தம்தம் திருமாளிகைக்கான தனியன் புஸ்தகங்கள் அச்சிட்டேயிருக்கின்றார்கள். அவற்றில் அண்ணா தனியனும் கொட்டை கொட்டையான எழுத்தில் அச்சிடப்பட்டேயுள்ளது. கிம்பஹுனா? கந்தாடையார் திருமாளிகைத் தனியன் புஸ்தகத்திலேயே "வேதாந்த தேசிககடாக்ஷ விவ்ருத்த போதம் காந்தோபயந்த்ரு யமிநః கருணைகபாத்ரம் - வத்ஸாந்வவாய மநவத்யகுணைருபேதம் பக்த்யாபஜாமி பரவாதிபயங்கரார்யம்" என்று அச்சிட்டிருப்பதை எந்த க்ஷணத்திலும் ஒருமஹாஸபையில் எடுத்துக்காட்ட ஸித்தனாகவேயிருக்கின்றேன். * காந்தோபயந்த்ருயமிநః கருணைகபாத்ரம் * என்கிற பாதத்தை மாறுபடுத்தி இதரஸம்ப்ரதாயஸ்தர்கள் அச்சிட்டிருப்பதுண்டு. அந்த கல்பிதம் அநுசிதமென்பதை இப்போது நம்எதிரி அவலம்பித்திருக்கிற கும்பகோணம் கோமளாம்பா அச்சுக்கூடத்தவர்களே பிரகாசிப்பித்திருக்கின்றார்கள். (எங்ஙனேயென்னில்,) தேசிகன் விஷயமான ஸ்துதிகளையெல்லாம் அவர்கள் ஒன்றுசேர்த்து (ஹூ 1927ல்) அச்சிட்டிருக்குமடைவில்எதிரி சொல்லுகிறஸப்ததிரத்நமாலிகையையுஞ் சேர்த்து அச்சிட்டிருக்கிறார்கள். அதன் தலைமேல் அண்ணாதனியன் என்ன இருக்கிறதென்பதைக் கண்கெடா முன்னமே காண்க.

[ஸப்ததிரத்நமாலிகையின் தத்துவம்.]

38. ப்ரஸங்காத் இங்கு மற்றொரு உண்மையும் உரைப்போம். அண்ணா 'ப்ராசார்யஸப்ததிரத்நமாலை' என்றொரு ஸ்தோத்ரம் ஸாதித்ததுண்டு. அது வன்று ¶ இப்போது இதரர்களால் வெளியிடப்பட்டுள்ளது. ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரஸ்வாமி ஸாதித்த 'தேசிகபஞ்சாசத்' என்னும் ஸ்துதியிலுள்ள * ஹா உ வஉஉா வமதவிஷ்ணு விஉயகேஷு * இத்யாதிச்லோகங்கள் பலவும் மற்

¶ ஸ்ரீவைஷ்ணவதாஸப்ரகாசிதமான அண்ணாவைபவமென்று எதிரியும் உதாஹரித்துள்ள நூலிலேயே இவ்விஷயம் ஸ்பஷ்டமாக எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். எதிரி அதனைக்கண்டுவைத்தும் காணாதவர்போல், அதிலுள்ள சிலச்லோகங்களைப்பற்றிக்கொண்டு சுஷ்கவாதங்களை விரித்திருப்பதெல்லாம் கடலோசையோடு அவிசிஷ்டம்.

59796

றும் சிலர் செய்த தேசிகஸ்தோத்ரங்களிலுள்ள ச்லோகங்கள் பல வும் இந்த ஸப்ததிரத்நமாலிகையில் காணப்படுவதொன்றே இவ் வுண்மையை அநாயாஸமாக ஸ்தாபித்துத்தரும். அண்ணு ஸப்ததி ரத்நமாலிகையென்று ஒரு தேசிகஸ்தோத்ரமருளிச் செய்திருக்கிறு ரென்கிற ப்ரஸித்தியை அறிந்திருந்த வடவாசார்யஸம்ப்ரதாயஸ் தர்கள் அக்காலத்தில் அச்சிடப்படாமலிருந்த [illegible] ங்களிலிருந்து பலச்லோகங்களையும் ஸ்வகபோலகல் பிதங்களான சிலச்லோகங்களையும் சேர்த்து ஒருஎழுபதாக்கி அண்ணுவினுடையதாகப் பதிப்பித்துவிட்டார்கள். அதன் தலை மேல் அண்ணு தனியனையும் ஓரடிமாற்றி அச்சிடுவித்தார்கள்: வஸ் துதஃ அண்ணு ஸாதித்த ஸ்துதியில் இன்னமும் ஆச்சரியமாகவே [illegible] ங்கள் அமைந்துள்ளன. இப்போது இதரார் கள் அச்சிட்டிருக்கிற ஸப்ததிரத்ந மாலிகையும் அதன் தலையிலுள்ள தாக நம் எதிரி உதாஹரிக்கிற அண்ணு தனியனும் யதார்த்தமா கில், அந்தத் தனியனோடு கூடிய அந்தஸ்துதியைப் பழைய வோலைச் சுவடியிலுள்ளதாக ஒருவர் காண்பித்துவிட்டால் போதும். உண் மையில் இல்லாதது எங்ஙனே கிடைக்கும்? ※ காந்தோபயந்த்ருயமிநః கருணைகபாத்ரம் ※ என்னும் பாதத்தோடுகூடிய தனியன் நூற்றுக் கணக்கான ஓலை ஸ்ரீகோசங்களில் மூதலிக்கப்படும். அச்சிடப்பட் டுள்ள ஸ்ரீவைஷ்ணவஸமயாசாரநிஷ்கர்ஷத்திற்கு மாத்ருகையான ஓலை ஸ்ரீகோசங்கள் ஸ்ரீவானமாமலைமடம் முதலானவிடங்களில் இன்னமும் சேமிக்கப்பட்டே யுள்ளன. குறைந்தது முந்நூறுவரு ஷங்களுக்குமுன் அவை எழுதப்பட்டவை என்பதை நம் எதிரியும் மறுக்கமுடியாத நிலைமையில் அவையுள்ளன. அவற்றில் அண்ணு தனியன் இதரர்கள் சொல்லுகிறபடியல்லாமல் கந்தாடையாரு முட் பட ஸத்ஸம்ப்ரதாயஸ்தர்கள் அநுஸந்தித்து வருகிறபடியேதான் உள்ளதென்பதை எதிரியும் இசைகின்ருரா? மறுக்கின்ருரா?

[உண்மையான த்ரிசங்கு யார்?]

39. இப்படியிருக்க, எதிரி படியடக்கம் முதல்பக்கத்தில், அண்ணு தனியன் இரண்டாம்பாதம் காந்தோபயந்த்ருயமிநః கருணை கபாத்ரம் என்று மாற்றப்பட்டு ஒரு ஸ்வாமியால் அநுஸந்திக்கப் பட்டதாகவும் அதைத் தாம் ஒருதரம் கேட்டு விஸ்மிதரானதாகவும் எழுதியிருப்பதும் ஒருவாறு பொருந்தும். அக்ஷராப்யாஸமே ஆகாதவர்களுக்கு எந்த விஷயமும் விஸ்மயமாகத்தானே யிருக்கும். இயற்கையிலிருந்த கந்தாடைசிஷ்யத்வத்தை விட்டுத்தொலைத்த பின்

பும் அதிலே நசைவைத்துத் தவிக்குமவர்கள், கந்தாடையாரும் அநவத்யமாக ஆதரித்துவருகிற அண்ணுதனியனை உள்ளபடி அநுஸந்தித்தாலன்றி ஒரு விபூதியிலும் க்ஷேமம் பெறுர்களென்று ஆத்தான் பணிப்பராம். உண்மையான த்ரிசங்குவின்படி யாருக்கோ? எந்தத்திருமாளிகை குருபரம்பரையில் இவர்க்கு அந்வயம்?

[அச்சுப்புத்தகங்களின் ஆராய்ச்சி.]

40. இங்கே ஒரு தத்வார்த்தம் வெளியிடுகின்றேன். இது நமது எதிரிக்கும் சிறிது அநுகூலமாகவேயிருக்கும். இருந்தாலும், உண்மையை வெளியிட ஒருநாளும் இருய்க்கமாட்டேன். சரித்திரபரமாகவுள்ள நூல்களில், அதிலும் தமிழ் வசனரூபமாகவுள்ள நூல்களில் எத்தனையோ ப்ரக்ஷேப உத்க்ஷேபங்கள் ஸம்பவித்திருப்பதுண்டு. மாத்ருகையிலிருந்து புத்ரிகையாக ஏட்டுப்பிரதி எழுதுகிற காலங்களிலும் அச்சிடுங் காலங்களிலும் அவரவர்களுக்குத்தோன்றினபடி வாக்கியங்களை நுழைப்பதும் எடுப்பதும் விசேஷதः ஸம்பாவிதமே. இதிஹாஸபுராணங்களிலும் அருளிச்செயல் வியாக்கியானங்களிலும் மற்றும் பலவற்றிலுங்கூட இப்படிப்பட்ட ஸம்பாதங்கள் அனேகமுண்டென்பதை அடியேன் ப்ரஹ்மவித்யாபத்ரிகையிலும் பிறவிடங்களிலும் "அச்சுப்புத்தகங்களின் ஆராய்ச்சி" என்ற மகுடத்தின்கீழ் விசதீகரித்து வெளியிட்டேயிருக்கின்றேன். அண்ணுவுக்கும் மாமுனிகளுக்குமுள்ள ஸம்பந்தத்தை யாம் யதீந்த்ரப்ரவணப்ரபாவாதிகளைக் கொண்டே புதிதாகத் தெரிந்துகொண்டிருப்போமாகில் இந்தவுணர்ச்சி வ்யபிசரிதமானுலும் ஆகக்கூடும். ஆனுல் இது அவிகீதஸம்ப்ரதாயபரம்பரையாக ஏககண்டமாய் அனைவரும் அநுஸந்தித்துவருகிற விஷயமாதலாலும் அண்ணுவின் பலபலக்ரந்தங்களோடு ஸஸம்வாதமாகிறபடியாலும், ப்ரக்ஷேபோத்க்ஷேபாதி சங்காஸ்பதங்களான அர்வாசீநக்ரந்தங்களுங்கூட, ஒன்றும் மாறுபடாமல் எல்லாமுமே இதில் ஒருமிடருயிருக்கிறபடியாலும், இதில் ஸம்ப்ரதிபந்நமான காரணலேசமுமில்லாமல் ஔபாதிகமான ஆக்ரஹத்தையே கொண்டு ஏறிடும் அவத்யம் அணுமாத்ரமும் நிலைநிற்காது.

* நிஃஶேஷாகாஶ விக்ஷிப்தவம்ஶ ந்யாயேந வாதிந:।
ஸ்வயமேவாவஸீதந்தி வாயுக்ஷிப்தம் ஸ்வயம்॥ *

[முதலாழ்வார்களின் திருவவதாரம் எங்கே?]

41. இதற்கு முக்கியமாக ஒரு சான்று காட்டுவோம் காண்மின்;—திருவந்தாதிக்கு வியாக்கியானமெழுதத்தொடங்கிய பெரிய

வாச்சான்பிள்ளை முதல்வரியிலேயே என்ன எழுதியிருக்கிறாரென்று கண்திறந்து பாருங்கள். முதலாழ்வார்கள் ஓரோவிடங்களிலே அவதரித்திருந்தாலும் அவர்கள் இந்த யுகத்திலன்றிக்கே யுகாந்தரத்திலவதரித்தவர்களாகையாலே அவர்கள் இன்ன இடத்திலே அவதரித்தார்களென்று நிச்சயிக்கப்போகாது என்று அருளிச்செய்திருப்பதை ஒவ்வொருவரும் காணலாம். திருவந்தாதி வியாக்கியானம் பல பதிப்புகள் வெளிவந்திருக்கிறது. எல்லாவற்றிலும் இவ்விதமாகத் தவிர வேறுவிதமாகக் கிடையாது. கீழே அரும்பத வுரைகாரர் ஷ வாக்கியங்களுக்கு அர்த்தமெழுதத் தமக்குத் தெரியாதென்று எழுதிவிட்டிருக்கிறார். இதனால் புராதன வோலை ஸ்ரீகோசங்களிலுங்கூட பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான பங்க்திகள் அப்படியேதானிருக்கின்றன வென்பது விளங்கிற்றாகும். இது இப்படியிருக்க, * பொய்யிலாத மணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலையில் "எண்ணருஞ்சீர்ப்பொய்கை முன்னோர் இவ்வுலகில் தோன்றியவூர், வண்மைமிகு கச்சிமல்லை மாமயிலை" என்று அருளிச் செய்கிறார். தேசிகனும் இப்படியே. * கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர் வந்துதித்த பொய்கைப்பிரான் * என்றும் * கடன்மல்லைப் பூதத்தார் பொன்னங்கழல் * என்றும் திருவந்தாதித் தனியன்களுமுள்ளன. முதலாழ்வார்களின் திருவவதாரஸ்தலமென்று மூன்று திவ்யதேசங்களுக்கு ஸ்ரீவைஷ்ணவவுலகம் முழுவதும் ஆதாரம் செய்கின்றது நெடுநாளாகவே.

42. இவ்விஷயத்தைப்பற்றி நம் எதிரியைக் கேட்போம்; பெரிய வாச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்தியைநம்பி மற்ற மாமுனிகள் முதலானோருடைய ஸ்ரீஸூக்திகளையும் அநுஷ்டானங்களையும் பழிக்க நினைக்கிறீரா? அல்லது, மாமுனிகள் முதலானோருடைய ஸ்ரீஸூக்திகளை ஆதரித்துப் பெரியவாச்சான் பிள்ளையைப் பழிக்கப்போகிறீரா? * கவெஹர்க்ஷா ஃர்கவெஷவ உவம் வா ஃஶர்யிஷவஸி? * மஹாமேதாவிகள் விமர்சிக்கவேண்டிய இப்படிப்பட்ட விஷயங்கள் நூற்றுக்கணக்காக எடுத்துக்காட்டுவேன்; இப்படிப்பட்ட விஷயங்கள் பலவற்றையு மெடுத்துக்கொண்டு அடியேனது நூல்களில் எவ்வளவு ஆராய்ச்சிகள்செய்து எத்தனை விவேகிகளை உகப்பித்திருக்கின்றேனென்பது கிணற்றுத் தவளைகட்குக் கனவிலுந் தெரிய ப்ரஸக்தியில்லையே.

[சடங்கர்களின் துராக்ஷேபாநுவாதம்.]

43. "ஸ்ரீமந்நாதமுனிகள் காலத்திலே * ஆராவமுதே * என்கிற பத்துப்பாசுரந் தவிர வேறொருதனுக்கையுங் கிடையாமலிருந்த

தாகவும், ஆழ்வார்கள் அவதரித்திருந்தார்களென்றும் அவர்கள் அருளிச்செயல் பாடியிருந்தார்க ளென்றுங்கூடத் தெரியாமலிருந்த தாகவும், நாதமுனிகள் பகீரதப்ரயத்நங்கள் பண்ணி யோகத்திலே நம்மாழ்வாரை ஸாக்ஷாத்கரித்து அவர்முகமாக நாலாயிரத்தையும் பெற்றதாகவும் இதிஹாஸங்கள் எழுதிவைத்திருக்கிறீர்களே; இப்படியானால் அந்த ஆழ்வார்களுடைய வரலாறுகளும் அந்த வரலாறுகளிலே அவ்வாழ்வார்களே ஸாதித்ததாக வெளிவந்திருக்கின்ற * அக்கரங்களக்கரங்கள் * கணிகண்ணன்போகின்றான் * ஈயத்தாலாகாதோ * இத்யாதியான பல பாசுரங்களும், அவர்களின் அவதார காலதேசாதிகளும் எவ்வாறு வெளியிடப்பட்டன? இவற்றையெல்லாங்கூடவா நம்மாழ்வார் யோகதசையிலே நாத முனிகட்கு உபதேசித்தார்?'' என்று இங்ஙனே பற்பல பூர்வபக்ஷங்கள் பிறர் கேட்பதுண்டு, எழுதிவைத்திருப்பதுமுண்டு. இத்தகைய விஷயங்களில் வாய்வைத்து ஆராய்ச்சிகளைச்செய்து சடங்கர் வாயடங்கிடச் செய்தால் ஸ்ரீவைஷ்ணவவுலகுக்குப் பெருநன்றி புரிந்ததாகும். இவற்றையெல்லாம்விட்டு * காகஸ்ய கதிவா உஷ: ஶேஷ ஸ்நாநம் க்ரிய தத்வ * என்றாற்போன்ற சுஷ்கவாதங்களையே தெருக்கூச்சலிட்டுத் திரிவதும் அஸூயையேகொண்டு அநவத்யஸம்ப்ரதாயங்களை அந்யதாகரிக்கப்பார்ப்பதும், சே! சே! என்ன பிழைப்பு! என்ன போதுபோக்கு!. * விதிரேவ விஶேஷகர்ஹணீய: கரட! த்வம் ரட கஸ்த்வாவராய: । ஸஹகாரதரௌ வகாரயஸ்த்ர ஸஹவாஸம் ஸரஸேந கோகிலேந ॥

ஸ்ரீ பாஷ்யார்த்த குணதோஷ விமர்சம்.

44. அண்ணா நயினாராசார்யரிடத்தில்ஸ்ரீபாஷ்யமதிகரித்ததைப் பற்றி எதிரி அவத்யமாக எழுதியிருந்ததற்கு விடையாக அடியேன் விளக்கநூலில் (பக்கம் 21ல்) "ஐகாந்திக ஸம்ப்ரதாயார்த்தக்ரஹணமென்பது ரஹஸ்யப்ரஸ்தாநத்திலும் பகவத்விஷயப்ரஸ்தானத்திலுமேயுள்ளது. அப்படிப்பட்ட ஐகாந்திகக்ரந்தங்களை அண்ணா நயினாராசார்யரிடத்தில் அதிகரித்ததாக அண்ணா வைபவத்தில் ஓரெழுத்துமில்லை. அங்கே ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபம் செய்தாரென்றவளவால் ஒரு குறையும் வாராது'' என்று தொடங்கிப் பலவிஷயங்கள் எழுதியுள்ளேன். எதிரி அவற்றில் பலவற்றை விட்டிட்டுச்

சிலவற்றை உதாஹரித்து அதிகமான ப்ரஸங்கங்கள் செய்திருக்கிறார். "கார்யாதிகரணத்திலே கைவல்யவிஷயத்தைப்பற்றிய விவாதம் ஜகத்ப்ரஸித்தம்" என்றும். "வாத்ஸல்யம் தயைமுதலானவைகளில் உள்ள பேதங்கள் இவருக்கு லகுவாய்த் தோற்றுகிறது போலும்" என்றும் ஸர்வாத்மநா தாம் வாய்வைக்கச் சிறிதும் அர்ஹமல்லாத விஷயங்களைத் தொட்டுக்கொள்கிறார். ஆங்காங்குத் திருமாளிகைத் திருவத்யயனங்களில் ஆத்யந்த ஸ்ரீபாஷ்யஸூத்ரங்களைப் பெரியோர்கள் ஸேவிக்கத் தொடங்கும்போது சில ஜடங்களும் நிர்ப்பயமாய் மேல்மிடறிட்டுக்கத்துவதுண்டு. அதுபோலவே நமது எதிரியும் வெகு ஸாஹஸமாய்த் தொடங்கிவிட்டார். ஆனாலும், ஸ்ரீபாஷ்யத்தில் கார்யாதிகரணமென்று ஒரு அதிகரணமிருப்பதாக இவர் தெரிந்து கொண்டதற்கு நாம் மிக மகிழ்கிறோம்; ரோஜாமாலையுமிடுகிறோம்.

45. உண்மையாக ஸ்ரீபாஷ்யாதிகாரிகளான மஹான்களை அடிபணிந்து இங்கே சில விண்ணப்பஞ் செய்கிறேன். அபிப்ராய பேதமென்பது ஒவ்வொரு புஸ்தகத்திலுமுண்டு. தென்கலையார்க்கும் வடகலையார்க்குந்தான் பரஸ்பரம் அபிப்ராயபேதம் என்றில்லை. ஒவ்வொரு ஸம்ப்ரதாயத்திலும் ஸயூத்யர்களுக்குள்ளேயே பரஸ்ஸஹஸ்ரம் அபிப்ராய பேதங்களுண்டென்பது குருகுலபரிச்ராந்தர்களுக்குத் தெரிந்த விஷயம். வடவாசார்யர்களுள் மடத்தாரும் முநித்ரயத்தாரும் எத்தனையோ விஷயங்களில் பரஸ்பரம் ஓயாத விவாதமுடையவர்களே. தேசிக ஸ்ரீஸூக்திகளையே பற்றிக்கொண்டு 'இப்படித்தான் அர்த்தம், இப்படித்தான் அர்த்தம்' என்று அவர்கள் போராடுவது புதிதோ? அங்ஙனமே பிள்ளைலோகாசார்யர் ஸ்ரீஸூக்திகளிலும், உத்க்ருஷ்ட ஜந்மப்ரபாவம். ஹேதாந தத்வி வாரம், முதலிய விஷயங்களிலே க்ரந்தச் சண்டையிட்டிருப்பாரும் பலருண்டே.

46. எம்பெருமானார் எழுந்தருளியிருந்த அக்காலத்திலேயே சிஷ்யர்களிலேயே அர்த்தபேத விவாதங்கள் விளைந்தன வென்றும் அதை எம்பெருமானார்தாமும் தீர்த்தருளவில்லையென்றும் * ஹா வாம் விவாத ஸம்வ்ருத்தௌ ஸாக்ஷாத்காரௌ பவாரிதௌ *இத்யாதிகாரிகைகளாகலே (ரஹஸ்யத்ரயஸாரத்திலே) தேசிகனே அருளிச்செய்கிறார். ப்ரஹ்மஸூத்ரத்தில் சதுஸ்ஸூத்ரியும்சாஸ்த்ராரம்பஸமர்த்தக மென்பாரும், ப்ரதமஸூத்ரம் மாத்திரமே அது-என்பாரும், ப்ரபத்தி ஸர்வாதிகாரமென்பாரும் அது— அதிக்ருதாதிகாரமென்பா

ருமாய் இப்படி எத்தனை பேதவாதங்கள் மலிந்து கிடக்கின்றன? தெரியுமோ?

47. அவ்வளவுதூரம் போகவேண்டா; நமது பூருவர்களான தென்னாசார்யர்களுள் வாதிகேஸரி அழகியமணவாளச்சீயர் உபதேசரத்தினமாலையிலும் * தம் பெரிய போதமுடன் என்று சிறப்பித்துக்கூறப்பட்டவர் என்பதுண்டே. இவர் லோகாசார்ய ஸம்பிரதாயத்தில் வருகிறவர்தானே. இந்த ஸ்வாமி தத்வதீப தீபப்ரகாசாதிகளில் எழுதியிருக்கிற அர்த்தவிசேஷங்களில் உள்ள விசேஷங்களை ஆராய்ந்த மஹான்கள் பலர் இருக்கக்கூடுமே. எத்தனை அம்சங்களில் இவர் லோகாசார்ய விஸம்வாதீ என்பதைக் குறிப்பில் கொண்டாருண்டோ? "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்ற எட்டெழுத்துக்குள்ளே ஸர்வ பதத்தில் எத்தனை அர்த்தபேதங்கள், தர்மபதத்தில் எத்தனை அர்த்த பேதங்கள், பரித்யாகத்தில் எத்தனை? இங்ஙனே பலவகைப்பட்ட பேதங்கள் மலிந்த ஸ்ரீகோசங்களெல்லாமுஞ் சேர்ந்தேயன்றோ தென்னாசார்ய ஸம்ப்ரதாயக்ரந்தங்களென வழங்கப்பட்டு வருகின்றன.

48. நித்யவிபூதி ஜடமா? அஜடமா? என்று ஒரு விசாரம். பிள்ளை லோகாசார்யர் தத்வத்ரயத்திலே "இத்தைச்சிலர் ஜடமென்றார்கள், சிலர் அஜடமென்றார்கள்." என்றருளிச்செய்தார். தேசிகனும் தத்வமுக்தாகலாபத்திலே * ஊஹ்ஜ ஸாஸாஷிஸம் கெவிஷாஹு: * என்றார். இவ்வாறு முன்னோர்களுக்குள்ளேயே பல விஷயங்களில் பக்ஷபேதங்கள் ப்ரஸித்தம். வேதத்தில் புகுந்தால் * ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி * என்கிறவாக்யம் ஆயிரந்தடவை ஓதப்படும். ப்ரஹ்ம வித்துக்களுக்குள்ளே உண்டான மதபேதங்களை அநேகச: அந்த வாக்கியம் எடுத்துக்காட்டுவதுண்டு. அதில் * வதந்தி * என்பதற்கு * விவதந்தி * என்று பலவிடங்களில் அர்த்தஞ்செய்திருக்கவில்லையா? மாறன்பணித்த தமிழ்மறையிலும் * பிணங்கி அமரர்பிதற்றுங் குணங்கெழு கொள்கையினானே * என்றருளிச்செய்யப்பட்டுளது. ஒரு பிணக்குமற்ற பரமபதத்திலும் அயர்வறுமமரர்களுங்கூட பகவத்குணங்களிலே பிணங்குகின்றார்களாம். இங்கே பிணக்கமாவது வாதயுத்தம். இஃது இருள்தரு மாஞாலத்தில்மாத்திரமன்று; இருளும் மருளுங்கெட்ட நலமந்தமில்லதோர் நாட்டிலுங்குடிபுகுந்தது கிடீர். * மதிவிகற்பால் பிணங்குஞ்சமயம் பலபலவாக்கி * என்று திருவிருத்தத்தில் ஆழ்வாரருளிச்செய்வதைப்பார்த்தால் மிகவும் ஆவச்யமாகவே இத்தகைய பிணக்கங்கள் எம்பெருமா

ஞலேயே ஏற்படுத்தப்பட்டனவாக விளங்கும். உலகத்தில் பல வகைப்பொருள்களில்லாமல் ஒரே பொருள் இருந்திருந்தால் எப்படி லோகயாத்திரை நடைபெறுமோ, அப்படியே பலவகை மதங்களின்றியே ஒரேமதமாக இருந்திட்டால் சாஸ்த்ர யாத்ரையே நடைபெறாது, பகவத்குணங்களும் கேட்பாரற்றதாகும் என்று வியாக்கியானங்களிலே தெரியவைக்கிறார்கள்.

49. வடக்குத் திருவீதிப்பிள்ளை திருவாய்மொழிக்கு விரிவாக வியாக்கியானமருளியிருப்பவர். அவருடைய திருக்குமாரரும் பிள்ளைலோகாசார்யருடைய திருத்தம்பியாரும், த்விதீயபரப்ரஹ்மமென்று உலகெலாம் போற்ற உரியருமான அழகியமணவாளப் பெருமாள்நாயனார் தாமருளிய ஆசார்யஹ்ருதயத்திலே,தமது திருத்தகப்பனர் அருளாத சில அர்த்தங்களிலே சில ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளை யோஜித்திருக்கிறார். அவ்விடங்களை வியாக்கியானிக்குமிடத்து மணவாளமாமுனிகள் * பூருவர்களின் வியாக்கியானங்களிலே இப்படி அர்த்தமில்லையே என்றுசங்கித்து இதுவுமொரு யோஜனையாயிருக்கத் தகுமென்று ஸமாதான மருளியிருக்கிறார். சிலவிடங்களில் நஞ்சீயர் ஒரு அர்த்தமருளிச்செய்ய அதுகேட்ட நம்பிள்ளை இப்படி அர்த்தமிருக்கலாமேயென்று சொல்லித் தாமொரு அர்த்தம் விஜ்ஞாபிக்க அவர் அதுகேட்டு உகந்து 'வாஸ்தவமாய் இப்படித்தான் அர்த்தம்' என்று தழுவிக்கொண்டதாகவும் பெரிய திருமொழி வியாக்கியானத்திலுள்ளது. பூருவர்களும் சிலவிடங்களில் 'இங்குஎன்ன அர்த்தம்?' என்று பரஸ்பரம் விசாரித்துக்கொண்டே காலங்கழித்து விட்டதாகவும், பட்டர் திருவவதரித்து அந்த அர்த்தங்களை விடுத்ததாகவும், இப்படி ஒரு ஆசார்யரிடத்திலும், கேட்கப்பெற்றதில்லை யென்று முதலிகளெல்லாரும் வியந்ததாகவும் பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்கிறார். தூஷிக்கவேணுமென்னும் நினைவோடே புகுந்து விட்டால் வேண்டியவளவு விஷயங்கிடைக்கும். ஆனல் ஸதாசார்ய ஸந்நிதியிலே பணிந்து குனிந்து கேட்டிருப்பவர்கள்தாம் இத்தகைய விஷயங்களிலே நல்தெளிவு பெற்றிருப்பர்கள். இப்படிச் சில விஷயங்களுண்டென்று தெரிந்து கொண்டிருப்பவர்களே துர்லபர் என்றுதான் அடியேனது அவலேபம். ஸம்ஸ்க்ருத வேதாந்தக்ரந்தங்களினுட்புகுந்தும் நுட்பமாக ஆராய்ந்தால் இங்ஙனே பல அபிப்ராய பேதங்கள் காணக்கிடைக்கும். அடியேனுடைய க்ரந்தங்களையெல்லாம் ஆநுபூர்வியாகக் கடாக்ஷித்தால் பல மருமங்கள் போதரும். கார்யாதிகரணவிஷயமென்று நாற்சந்தியிலே கேட்ட ஒரு விஷயத்தை எதிரி பிடித்துக்

கொண்டு கொக்கரிப்பது குலுங்கக் குலுங்க நகைக்கவுரிய தத்தனை.

50. இப்போது இங்ஙனே பல விஷயங்களை அடியேன் விரிவாக எடுத்தெழுதுவதைக்கொண்டு 'உலகத்திலுள்ள ஸகலமதங்களும் யுக்தந்தான், கண்டிக்க வேண்டாதவைகள் தான்' என்று அடியேன் சொல்லப்புகுவதாக விவேகிகள் கருதமாட்டார்கள். இதரஸம்ப்ரதாயங்களிலுள்ள பலபல விஷயங்களை ஆவச்யகதைக்கு ஏற்பக் கண்டித்திருக்கிறேன், கண்டித்துக் கொண்டுமிருக்கிறேன், கண்டிக்கவும் போகிறேன், ஆதலால் எல்லாமதங்களும் யுக்தமென்கிற கருத்துடையேனல்லேன். வைதிகஸம்ப்ரதாய நிஷ்டர்களும் பகவத்ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண துரந்தரர்களுமான மஹான்களுடைய க்ரந்தங்களிலே—"இப்படி ஆளவந்தார் நிர்வஹிப்பர் - இப்படி எம்பெருமானார் நிர்வஹிப்பர் - இப்படி பட்டர் நிர்வஹிப்பர் - இப்படி ஜீயர் நிர்வஹிப்பர்" என்று பாரச்சதமிருப்பதுபோலச் சில அபிப்ராயபேதங்கள் ஏற்பட்டிருப்பது மஹாமதிகளுக்கு ஒரு பெரியவிஷயமாக எடுத்துக் கொள்ளத்தக்கதேயன்று என்றுதான் எழுதவருகிறேன். வேதாந்த ப்ரஸ்தானத்தில் தேசிகனுடைய சில அபிப்ராயபேதங்கள் நம் எதிரி எழுதுகிறபடி கர்ஹணீயங்களாயிருந்தால் அவருடைய அதிகரண ஸாராவளி, தத்வடீகை முதலானவற்றை வடிக்கட்டின ஸம்ப்ரதாயஸ்தர்களான தென்னாசார்யர்கள் ப்ரவசநாதிகள் செய்வது பொருந்துமோ? ப்ரஹ்மாநந்தீயம், சங்காபாஷ்யம் முதலான குத்ருஷ்டிநூல்களையும் பிரவசனஞ்செய்கிற கணக்கிலே இதுவுமாகலாமென்று எதிரியின் அபிப்ராயம் விளங்குகின்றது. பேதையனும் இந்த த்ருஷ்டாந்தம் சொல்லப்பெறான். ப்ரஹ்மாநந்த, சங்கராசார்யாதிகளுக்கு அல்பஸத்காரமும் நாம் செய்வதில்லை. அவர்களை விக்ரஹமாக வைத்து ஆராதிக்கிறோமா? தனியனிட்டு வாழ்த்துகிறோமா? என்ன செய்கிறோம். ஒன்றுமில்லை. இதரர்களுக்கு ப்ரவேசலேசமும் ஸம்பாவிதமல்லாத ஸந்நிதிகளிலுங்கூட தேசிகனை ஆராதித்து வருகிறோம். சோளஸிம்ஹபுரத்தில் எதிரியின் தலையெழுத்தாசார்யர்கள் திருமாளிகையில் நாளைக்கும் தேசிகனை ஆராதித்து வருகிறார்கள். அவர்களை அபவதித்தாலும், காஞ்சீ அழகிய மணவாளச்சீயர் மடத்துத் தலைவரான ஸ்வாமி தாமருளிய ஜககண்டிய க்ரந்தத்திலே தேசிகனை உபச்லோகித்திருப்பது எதிரிக்கு அஸமாதேயமேயாகும். அவையெல்லாம் ஒரு புறமிருக்க, நாமெல்லாரும் கண்ணாலே ஸேவிக்கப்பெற்றவரும் உலகுக்கே ஸூர்யனாக விளங்கினவரும்

தென்னுசார்யர்களில் அத்விதீயராக விளங்கினவருமான [கீர்த்தி மூர்த்தி]குன்றபாக்கம் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி தாமருளியஸ்ரீபாஷ்யவிவரண - தத்வரத்நாவளீ க்ரந்தத்திலே தேசிகனை ஒரு ச்லோகத்தால் ஸ்துதித்து அச்சிட்டும் வெளியிட்டிருக்கிருரே. இதற்கு என்ன சொல்லுகிறீரென்று விளக்கநூலிலேயே நாம் கேட்டிருக்கவில்லையா? இப்படிப்பட்ட விஷயங்களுக்கு ஒரு அக்ஷரமாவது எதிரி வாய்திறந்ததுண்டோ? திறக்கத்தான் முகமுண்டோ? அந்த மஹான்கள் ஸேவித்தும் ஸேவிப்பித்தும் போந்த ஸ்ரீபாஷ்யத்திலே கார்யாதிகரணமில்லைபோலும். அத்விதீய ஸ்ரீபாஷ்யவித்வானை நம் எதிரியொருவர்க்குத்தான் கார்யாதிகரண ஸ்வாரஸ்யங்கள் தெரியும் போலும். அந்தோ! ஊத்தைவாயை உள்ளடக்கி வைக்கலாகாதா?

51. கார்யாதிகரணவிஷயமாக அடியேனும் ஸஞ்சிகை யெழுதி அச்சிட்டு வெளியிட்டே யிருக்கிறேன். ஸ்தோத்ரவ்யாக்யாநசோதநமென்று அடியேன் வெளியிட்டிருக்கும் நூலில் முதல்விஷயமாக இவ்விஷயத்தையே விவரித்து, இதற்குமேல் ஒருவரும் வாய்திறக்க முடியாதென்று உபயஸம்ப்ரதாய வித்வான்களும் கையெழுத்திடும்படியாகவே எழுதியிருப்பதை யாவரும் காணலாம். திருவயிந்திரபுரம் சேட்லூரார் கைவல்ய விஷயத்தை யெடுத்துக்கொண்டு இதில் தென்னுசார்யர்கள் தடுமாறிப்போய்விட்டார்களென்றுபோலே தவறுனப்ரஸங்கத்தைப் பரவ விட்டிருந்தபடியால், தென்னுசார்யர்கள் சிறிதும் தடுமாறவில்லை, வடவாசார்யர்கள்தாம் தடுமாறியிருக்கின்றன ரென்று அலசியலசிக்காட்டி யெழுதியிருக்கின்றேன். சிறிய விஷயங்களைப் பெரிதாக்கிக்கொண்டு வருபவர்களைத் தகர்ப்பது அடியேன் பணி.

52. எதிரி (பக்கம் 23ல்) "வாத்ஸல்யம் தயை முதலானவைகளில் உள்ள பேதங்கள் இவருக்கு லகுவாகத் தோற்றுகிறது போலும்" என்று அவலீலையாக எழுதிவிட்டார். அந்த வாத்ஸல்ய தயைகளையும் பற்றி விரிவான ஸஞ்சிகைகள் எழுதி வெளியிட்டிருப்பவன் அடியேன். 'இந்த இரண்டு குணங்களின் ஸ்வரூபத்தை மாறுபடுத்தினவர்களோடு நிர்க்குணப்ரஹ்மவாதிகளோடு வாசியில்லை' என்றும் எழுதியிருக்கிறேன். இக்குணங்களில் தேசிகன் தென்னுசார்யர்களுக்கும் மேலாகவே உருகி உள்குழைந்திருப்பவர் என்பதையும் ஸ்ரீஸூக்திசதங்களைக்கொண்டு நிரூபித்தெழுதியிருக்கிறேன். கண்ணுடையார் காணலாம். வாஸ்தவத்தில் இந்த விஷயங்களெல்லாம் லகுவானவைகளே. காலக்கொடுமையாலே ஸப்ப்ர

தாய வைஷம்யம் முற்றிப் பிற்காலத்தவர்கள் இவற்றைப் பெரிதாக்கி ஸர்வஜ்ஞர்களான ஸத்ஸம்ப்ரதாய மஹாசார்யர்களை தூஷித்து க்ரந்தங்கள் வெளியிடப் புறப்பட்டதனால் தான் அடியேன் ※ க்ருதஶ்ருதி க்ருதம் ஸர்வேஷாம் தஸ்கர ஸர்வதே ※ என்ற கணக்கிலே அதிக ஸம்ப்ரமங்கள் கொள்ள வேண்டிற்றென்பதையும் ஏற்கனவே சில நூல்களில் பரவவிட்டுமிராநின்றேன்.

சாந்தியே வடிவெடுத்தவர்களிறே நம் ஆசிரியர்கள்.

53. படியடக்கம் (பக்கம் 22ல்)—"ஸம்ப்ரதாயபேதங்களுக்கு மூலமே அக்காலமாயிருந்து இருஸம்ப்ரதாயங்களிலும் ஏராளமான க்ரந்தங்கள் அவதரித்து பரஸ்பர வைஷம்யம் ப்ரமாதமாக இருந்திருக்க, இக்காலத்திற்போல் அக்காலத்தில் அவ்வளவு வைஷம்யங்கள் பாராட்டப்பட்டிருக்கவில்லை யென்கிற (அண்ணங்கராசாரியருடைய) மாயமயக்குக்கு உட்படுவாராருமில்லை" என்று—(ஸிவில், க்ரிமினல்) இருவகையான நியாயஸ்தலங்களும் தேசிகன் லோகதேசிகன் மாமுனிகள் முதலானாருடைய காலந் தொட்டே விளங்கினவாக நம் எதிரி எழுதுகிறார். இவருமப்போதே ஜநித்திருந்தால் இருபுறத்திலும் அமுது செய்யக் கடலில் ஏற்றமிட்டிருக்கலாமே. அந்தோ! இழந்தார் பாவம்!. தேசிகன் வேதாந்தத்தில் மாறுபடுத்தினதாகச்சிலர் நினைக்கிற சிலஅர்த்தங்கள் நம்பிள்ளைகாலத்திற்கு முன்னமே பிரசாரத்திலிருந்தனவென்பது ஈட்டில் ※ ஒன்றுந்தேவுப்ரவேசம்ஸேவித்தால் தெரியவரும் சந்த்ரார்த்தந்த்ர விஷ்ணு: ॥

அண்ணா மாமுனிகளை ஆச்ரயிக்க ஆவச்யகதை.

54. வேதாந்தப்ரஸ்தானத்தில் தேசிகனுக்குள்ள அபிப்ராய பேதங்கள் அகிஞ்சித்கரமாகில் அப்படியே ரஹஸ்யப்ரஸ்தாநங்களிலுள்ள அவரது அபிப்ராய பேதங்களும் அகிஞ்சித்காமாகக் குறையில்லையன்றோ. ஆகவே, அந்த ஸம்ப்ரதாயத்திலேயே அண்ணா ரஹஸ்யார்த்தங்களையும் அதிகரித்திருக்கலாமே; அவ்விடத்தை விட்டு மாமுனிகள் பக்கலிலேவந்து சேருவானேன்? ※ வேதாந்த ஸூரிபதஸம்ப்ரதாயஸ்காலித்யத்ருக் ※ என்னும்படியாக தேசிக மார்க்கத்திலே ஸம்ப்ரதாயஸ்காலித்யமிருந்ததாகவும் அதில் அந்வயிக்க இருப்த்து மாமுனிகள்பாடே வந்து சேர்ந்ததாகவுஞ் சொல்லுகிறவற்றுக்கு ஸமாதானமென்? என்கிற கேள்வி உண்டாகும். இதற்கும் தினவடங்கவிடையளிக்கின்றேன் கேண்மின். ஆழ்வானும் எம்பாரும் உடையவர்பக்கலிலே ரஹஸ்யார்த்தங்கள் சிக்ஷிக்கப்பெற்ற

வர்களென்பதும் இருவரும் சுத்தஸம்ப்ரதாயஸ்தர்களே யென்பதும் நிர்விவாதமானவிஷயம். பட்டரும் சிராமப்பிள்ளேயும் ஆழ்வான் பக்கலில் திருவாய்மொழி அர்த்தம் கேட்டுக்கொண்டிருந்ததாகவும், * வீடுமின்முற்றத்திலே * எண்பெருக்கந்நலத்து என்கிற பாட்டள விலே வந்தவாறே ஆழ்வான் இரு குமாரர்களேயும் நோக்கி 'இப்பாசுரம் திருமந்த்ரார்த்தமாகையாலே உங்களுக்கு உடையவர் நியமித்த ஆசார்யரான எம்பாரிடத்தே சென்று கேட்டுக்கொள்ளுங்கள்' என்று நியமித்ததாகவும் அப்பாசுரத்தின் நம்பிள்ளேயீட்டிலே வ்யக்தமாகவுள்ளது. இவ்விஷயம் மற்ற சரித்திர நூல்களில் இருந்தால் ப்ரக்ஷேப சங்காஸ்பதமுமாகலாம். அங்ஙனன்றியே ஈட்டிலேயேஉள்ளது. சரீரத்தின் நிலேயின்மையைநோக்கி அந்தப் பாசுரார்த்தத்தையும் ஆழ்வானே அப்போதே உபதேசித்தருளினுரெனினும், முந்துற நியமித்ததன் நோக்கம் ஆராயத்தக்கது. 'திருமந்த்ரார்த்தச்ரவணத்திற்குத் தனியே ஒரு நியதி அவசிய மிருந்தே தீரவேண்டும்; மற்றக்ரந்தங்களே அதிகரிப்பதுபோலேயன்று' என்கிற வ்யவஸ்தையை நியமிப்பதே மேற்குறித்த ஈட்டு ஸ்ரீஸூக்தியின் நோக்கமாகும். இக்காலத்திலும் மற்றக்ரந்தங்களதிகரிப்பதையபேக்ஷித்துத் திருமந்த்ரார்த்த மதிகரிப்பதிலுள்ள கட்டு திட்டங்கள் கூடியமட்டில் அழியாதேயிருப்பது ப்ரத்யக்ஷமே. பகவத்விஷயமும் ரஹஸ்யார்த்த ப்ரசுரமாகையாலே அதை அதிகரிப்பதிலும் நியதி பெரும்பாலும் நியதமே.இங்ஙனே ஸ்ரீபாஷ்யத்தில் ரஹஸ்யார்த்த சிக்ஷணமின்மையால் உபகாரகமாத்திரமான அதை அதிகரிக்கும் க்ரமம்நெடுநாளாகவே ஒருவிதமாயுள்ளது.வடகலேயாரிடம் ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபஞ்செய்த (செய்கிற)தென்கலேயார்களேயும், தென்கலேயாரிடம் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபஞ்செய்த (செய்கிற) வடகலேயார்களேயும் இன்றைக்கும் பலரைக் காட்டுவேன். இங்ஙனம் திருமந்த்ரார்த்தகாலக்ஷேபத்தில் ஒருநாளும் ஒருவரையும் காட்டமுடியாதென்பது திண்ணம்.

55. ஸம்ஸ்க்ருத வேதாந்த க்ரந்த காலக்ஷேபத்திற்கு இல்லாத கட்டுதிட்டங்கள் தமிழ் க்ரந்த காலக்ஷேபத்திற்கு மிக அவசியமோ? என்று எண்ணவும் ப்ரஸக்தியில்லாதபடி தேசிகன் "செய்ய தமிழ் மாலேகள் நாம் தெளிய வோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்ருேமே" என்று அருளிச்செய்திருப்பது நோக்கத்தக்கது.

56. அண்ணு லோகாசார்ய ஸந்ததியில் திருவவதரித்தவராகையாலே அவருடைய ரஹஸ்யார்த்தங்களே அதிகரிக்க ஆசை

கொண்டிருப்பதே அவர்க்கு ப்ராப்தம். அங்ஙனம் பரமோத்தேச்யரான ஆசார்யவர்யர்களை * ஊஜவ‍ஞவஸ்ரூ‍தொஃஞவெ‍ா யஃணாஃவிஸாஃ....ஃநூயாஃநவஃஷீநாஃஹ திஸா திஃநாதூநாழ......ஐதிஃநெஸிஃவெஹாக்ஷூ * இத்யாதிகளான கடுஞ்சொற்களாலே அநாவச்யகமாக நிந்தித்தும் மாறுன சில அர்த்தங்களை ஏறிட்டும் எழுதப்பட்டிருந்த க்ரந்தங்களிலே நாம் அந்வயிப்பது தகாதென்கிற திருவுள்ளத்தோடே மாமுனிகளிடம் எழுந்தருளி ஆச்ரயித்ததுபற்றி *ஸம்ப்ரதாயஸ்காலித்யத்ருக்* எனப்பட்டதும் பொருந்தியதே. ஆக இவ்வளவாலும், எதிரி * ஸ்காலித்யத்ருக் * என்பதற்கு அபார்த்தம் செய்துகொண்டும், அவஸ்தாத்வயமென்று அபசப்தப்ரயோகம் செய்துகொண்டும் எழுதியிருந்தவையெல்லாம் தீயினில் தூசாயின.—உடையவர் யாதவப்ரகாசரிடத்தில் பூர்வபக்ஷ க்ரந்தங்கள்தான் வாசித்தாரித்யாதிகளைப்பற்றி விடை கூற அவசியமில்லாதபடியாகவே நாம் விஷயோபஸம்ஹாரம் பண்ணியிருக்கிறோம். நாம் கொடுத்திருந்த யாதவப்ரகாசத்ருஷ்டாந்தம் அங்வாருஹ்யவாதம். * தஷ்ஃதநூயதஃவெஹாக்ஷும். இவர் உண்மையாகவே யாதவப்ரகாச ஸமதுலையில் தேசிகனையேற்றி துராக்ஷேபங்களை வளர்க்கிறுர். யாதவப்ரகாசரிடத்தில் உடையவர் வாசித்தது பூர்வபக்ஷ க்ரந்தமல்ல என்பதை ஸப்ரமாணமாக முன்னமே நிரூபித்திருக்கிறேன். இன்னமும் விரிவாக நிரூபிக்க வல்லேனாயினும் இவ்விஷயம் இங்கு ஸுதராம் அப்ரஸக்தமென்று விரதனாகிறேன்.

அண்ணுக்ரந்தங்களுக்குஎழுதிய அந்யதாஸித்திக்கு மறுப்பு.

57. அண்ணு அருளிச்செய்த க்ரந்தங்களிலுைம் அவர்மாமுனிகளை ஆச்ரயித்தமை நன்கு விளங்குகின்றதென்று பல க்ரந்தங்களை விளக்கத்தில் உதாஹரித்துக் காட்டியிருந்தேன். அண்ணுவின் அஷ்டச்லோகீ வியாக்கியானம் முதலிய பல க்ரந்தங்களைப்பற்றி எதிரி வாய்திறவாது விட்டதுபோலவே மற்றுஞ்சில க்ரந்தங்களைப் பற்றியும் வாய்மூடியிருந்து வீறு பெற்றிருக்கலாம், அஸமஞ்ஜஸத்வம் எங்ஙனே அடங்கிநிற்கும்?— * கௌஸல்யாஸுப்ரஜாராம * என்கிற ஸ்ரீராமாயணச்லோகத்தை அண்ணு ஸுப்ரபாதத்தின் முன்னே அநுஸந்திக்கிறபடியால் அது அண்ணு அருளிச்செய்ததன்று என்கிறுர். (தேசிகனுடைய) ஹயக்ரீவஸ்தோத்ரத்தின் முன்னே * ஜ்ஞாநாநந்த மயம்தேவம் * என்கிற சங்கராசார்யருடைய ச்லோகம் நிவிஷ்டமாயிருப்பதால் அந்த ஸ்தோத்ரம் தேசிகனுடைய

நன்று என்றும் சொல்லவருவர்போலும். இதனிடையில் * ஈசாநாம் ஜகதோஸ்ய வேங்கடபதே: * என்கிற அண்ணாவின் ச்லோகத்தை வேறொரு ப்ரஸித்தாசார்யர் பணித்ததாக எழுதியிருக்கிறார். தேசிகனுடைய ச்லோகமாக அதைச் சிலர் ஸ்ரீஸ்துதியின் முன்னே அச்சிட்டிருப்பதைக்கொண்டு எதிரி ப்ரமித்தபடியிது. இது தேசிகனுடையதன்று என்பதை தேசிக தர்சநாசார்யர்கள் பலரும் ப்ரஸித்தப்படுத்தியிருப்பது அந்தோ! நம்கூபகூர்மத்திற்குத்தெரியாது. இவர் பேணுகிற குடந்தைக் கோமளாம்பா அச்சுக்கூடத்தாரும் அந்த ச்லோகம் தேசிகனுடையதன்று என்றே மறுத்து அச்சிட்டு விட்டார்கள். இது அண்ணாவின் ஸ்ரீஸூக்தியே யென்று அனந்தாண் பிள்ளைப்பண்டிதர்கள் (ஹூ 1922ல்) அச்சிட்டுள்ளார்கள்.

58. ஸ்ரீவேங்கடேசஸ்துதியில் * ஸௌஶீல்யவயஶ்ரு… நிநா … ஷி…தௌ * என்று அண்ணா ஸாதித்திருக்கிறாரென்றதற்கு இதரபுஸ்தகங்களில் இதரர்களும் இப்படி ஸாதித்திருப்பதாக ஒருவிடை கூறுகின்றார். இதனாலென்ன? இதரர்களும் ஸாதித்திருக்கட்டுமே. * கடைநின்றமரர் கழல்தொழுது * என்றவொரு பாசுரம் பூர்த்தியாக ஒரேவிதமாய் பூதத்தாழ்வார் பிரபந்தத்திலுமுள்ளது, திருமழிசைப்பிரான் பிரபந்தத்திலுமுள்ளது. * உளன் கண்டாய்நன்னெஞ்சே * இத்யாதி இரண்டடிகளும், * சுரும்பமர் சோலைசூழ்ந்த * இத்யாதி இரண்டடிகளும் சிறிதும் மாறுபடாதபடி இரண்டாழ்வார்களின் திருவாக்கிலுள்ளன. ஸ்தோத்ரரத்நத்திலுள்ள சில ச்லோகங்களை ஸ்ரீவைகுண்டகத்யத்தில் அப்படியே ஸ்வவாக்யரீதியாக ஸ்வாமி அருளிச்செய்திருக்கிறார். இப்படி பல்லாயிரம். அன்றியும், மாமுனிகளிடம்வந்து ஆச்ரயிப்பதற்கு முன்னமே அண்ணா திருவேங்கடமுடையானது திருவடிகளைக் கண்டிருக்கிறாராதலால் * ஸௌம்யோபயந்த்ருமுநிநா மம தர்சிதௌ * என்றிருக்கத் தகாதென்று எழுதியிருப்பதற்கு ப்ராத்யக்ஷலக்ஷந்தான் பரிசளிக்கவேணும். அமுதனார் * காரேய்கருணையிராமானுசா! - உன்சீர் - இன்று தித்திக்கும் * என்கிறார். தேசிகனும் ஸப்ததியில் * ஸ்ரீமதே … ஸ… ஸா… யதிராஜகீர்த்திகதைகைவிஶோயிதா * என்கிறார். இருவரும் தமக்கு உடையவருடைய சீரும் சீர்கலந்த சொல்லும் இன்றைக்குத் தான் தித்திப்பதாக அருளிச்செய்தார்கள். இதற்கு; நேற்றுவரையில் கசப்பாயிருந்தன என்று கருத்துப்போலும். * இன்று கண்டு கொண்டேனே * என்று பலவிடங்களிலும் ஆழ்வார்கள் பேசுகிறார்கள். அப்போதைக்

கப்போதுண்டாகிற விலக்ஷண ஸ்வாரஸ்யாதிசயத்தையிட்டுப் பேசுகிறபேச்சுக்களன்றோ இவை. ஆசார்யன் காட்டக் காண்கையே காண்கையாகும் என்கிற சாஸ்த்ரார்த்தம் பொலிய இங்ஙனே அண்ணா அருளிச்செய்த சுவடு அரஸிகர்க்கு நிலமன்று.

59. கோயிலில் மாமுனிகளின் திவ்யமங்கள விக்ரஹத்திலேயே அண்ணாவும் ஏறியருளப்பண்ணப்பட்டிருக்கிறார் என்று அடியேனெழுதியிருந்ததற்கு, 'அந்தத் திருமேனியிலில்லை; கவசாதிகளில் இருக்கிறார், இதுவும் துர்ப்போதனையினால் செய்யப்பட்ட காரியம்' இத்யாதிகளை எதிரியெழுதுகிறார். ஸூத்வ த்வத்ஸங்கதா நியமேஷு ரதி ஸம்ஸ்ருதியாதலால் தமக்குள்ள துர்ப்போதனையைப் பிறர்மீதும் இழுசத்தானே வேண்டும். இவையெல்லாம் கிடக்க. இராமபிரான் "தரமல்லாதவையல்களோடே பணிபோருகையாயிற்றே!" என்று வருந்தினாப்போலே அடியேனும் போசஅநுதபித்து, சண்டாளவாடிகையிலே கங்காதீர்த்தம் பெருகினாற்போலே இஃது என்னபெருக்கு! என்றும் நொந்து நொந்து * க்ஷீரம் ரூபி வைசம்பாயனக்ஷயம் ஸமஸ்வநி: * என்ற ஸுபாஷிதத்தையும் நினைத்து நினைத்து வாளா நின்றிடுவோமென்றாலும் நிற்கவொட்டுகின்றிலனே நிமலன்நின்மலன் நீதிவானவன்.

* அண்ணா தனியன் அமைந்த அதிசயம். *

60. * ஸ்வாத்ம்ருஷாஜ்யாவேஷ்ஹாவநமாரவைரஹரி வைத: ஸுருக்ஷேப்ராத்ரவைத: ஸ்வாரமாரவாஸிதவசை: க்ருதம் தைஸ்த்வஸ்வைர்மார்ரஹிரஹாயோகி ஸிரிதி வஸ்வஸ்த்ஸ்ஸ்ஞோ ஹ்ருதி ஹ்ருதஸஞ் ரூதிகரு *

என்று அற்புதமாகஅருளிய அண்ணாவின் திருவுள்ளம் உகக்குமாறு நம் மணவாளமாமுனிகளின் நாற்றிசையுங் கொண்டாடும் நற்குணமொன்றை நாவுறவழுத்தி இவ்வவதாரிகைபைத் தலைக்கட்டுகின்றேன்.—ஒவ்வொரு ஆசாரியருடையவும் தனியன்களை ஊன்றிப் பாருங்கள்; 'இவர் இன்ன ஆசார்யருடைய கடாக்ஷத்தாலே ஞானம் பெற்றவர்' என்று தெரிவிக்கிற தனியன் ஆழ்வார் தொடங்கி மணவாளமாமுனிகள்வரையில் ஒரு ஆசாரியருக்காவது உண்டோ? சில தனியன்களிலே 'இவர் இன்னாருடைய திருக்குமாரர்' என்பது மாத்திரம் காணக்கூடுமேயல்லது 'இவர் இன்னாருடைய அநுக்ரஹத்தாலே ஞானம் பெற்றவர்' என்னுமிவ்விஷயவிந்யாஸம் ஒரு தனியனிலும் காணக்கிடைக்காது. ஆனால் இது அண்ணா தனியனென்றில் மாத்திரமே காணக்கிடைத்திருக்கின்றது. இதரர்களும்

நம் எதிரியும் சொல்லுகிறபடி. இந்தத் தனியன் ※ வேதாந்த தேசிக கடாக்ஷவிவ்ருத்தபோதவித்வஜ்ஜநேட்ய வரதார்ய தயைகபாத்ரம் ※ என்றிருக்கத் தகுதியே கிடையாது. ஏனெனில்; அப்போது முதல் பாதம் நயினாராசார்யருக்கு அந்வயிக்கவேணும்; அவர் வேதாந்த தேசிககடாக்ஷத்தினால் போதம் வளரப்பெற்றவரேயானாலும் அவருக்கென்று ஏற்பட்டிருக்கிற தனியனிலும் இடாத இவ்விசேஷணம் இதில் இடப்படுவதற்கு என்ன அவசியம்? என்று புத்திமான்கள் ஆலோசிக்கவேண்டாவா? ※ ஸ்ரீமல்லக்ஷ்மணயோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜம், விச்வாமித்ரகுலோத்பூதம் வரதார்யமஹம் பஜே ※ என்பது நயனாராசாரியர் தனியன். இதில் தேசிககடாக்ஷத்தை நிவேசித்து ச்லோகம் பண்ணினால் கூடாமற்போகுமோ? ப்ரஹ்ம தந்த்ரஸ்வதந்த்ர ஸ்வாமியின் தனியனிலாவது இத்தகைய விசேஷணமுண்டோ? ஆதலால் வரதாசார்யாந்வயியாக அந்த விசேஷணம் அமைய ஒரு ஸம்பாவனையுமில்லை அன்றியும், அண்ணா மாமுனிகளின் ஸம்பந்தம் பெறாமல் அத்தலையில் ஸம்பந்தத்தோடே விச்ராந்தராயிருந்தால், ※ வஸ்தா நயவஸாயாவஸி நூ கஸாஹம் வி நயொஜ்ஜவலு। வாஜிஹீக்ருஷ்ஙாரம் வந்தே வாஷாயவசாஸ்ருதம் ※ என்றாற்போலே வேதாந்த தேசிககடாக்ஷ ப்ரஸ்தாவகந்தமேயில்லாத தனியன் ஏற்பட்டிருக்குமேயன்றி வேறு விதமாக அமையாது. இதனால் அண்ணா தனியனை பிறர் சொல்லுகிற பாடப்படியே வைத்துக்கொண்டு முதல்பாதத்தை மாத்திரம் அநந்வயமாக்கி அண்ணாவுக்கு விசேஷணமாக இசைத்து விடலாமென்று சிலர் சொல்லுகிற வார்த்தையும் நிரஸ்தம். ஆக இவ்வளவாலும், பிறர் சொல்லும்படிகள் பொருந்தமாட்டாவென்று தேறியபின், வஸ்துஸ்திதியின் பொருத்தத்தை விவேகிகளுக்குத் தெளிவிக்கின்றேன்;—

61. அண்ணா மாமுனிகளிடம் வந்து பணிந்தார்; இவருக்கு ரஹஸ்யார்த்த பகவத் விஷயார்த்தங்களை உபதேசித்தருளிப் பணிமானம் பிழையாமே பணிகொண்டபின் இவரைக்கொண்டு ஸ்ரீபாஷ்யப்ரவசநம் செய்விக்க மாமுனிகள் திருவுள்ளம்பற்றினர். அப்போது தனியன் அவதரிக்க ஆவச்யகதை உண்டாயிற்று. 'பிறர் யாரேனும் தனியன் இயற்றப்புகுந்தால் மற்றையோருடைய தனியன்களைப்போலவே கோத்ரஸூத்ராதிகளையிட்டு ஸாதாரணமாக வொருதனியன் இயற்றிவிடுவார்கள், அங்ஙனமாகாது' என்று திருவுள்ளம்பற்றிய மாமுனிகள் தம்முடைய ஒப்புயர்வற்ற ஹ்ருதயவை

சால்யத்தை வெளியிடவேண்டிப்போனும் வேதாந்ததேசிககடாக்ஷ விவ்ருத்தபோதம் என்று தாமே தனியனிடத் தொடங்கிவிட்டார். ஆசார்யஸம்பந்தம் அடியோடு தோற்றுத மற்ற தனியன்கள்போலல்லாமல் ஆசார்யஸம்பந்தத்தைக் காட்டுகின்ற தனியனை வுண்டாகி அதில் * ஸ்ரீஜ்ஞநிதாநம் தபஸாம் விவாகமாய் ஸமுஹ்ஹோலமாய்க்கிடைத்த மாமுனிகளின் ஸம்பந்தம் விளங்காமற்போவது பரமதௌர்ப்பாக்யமாகுமே யென்று வருந்திய அண்ணு தாமே * காந்தோபயந்த்ருயமிந: கருணைகபாத்ரம் * என்று த்விதீயபாதமாகச் சேர்த்தார். பின்னடிகள் கோயிலண்ணன்முதலான சிஷ்யர்களிலொருவர் இயற்றினது - என்றிங்ஙனே தத்துவமுள்ளது.

அண்ணுதனியனில் முதல்பாதத்தைப்பற்றின ஆராய்ச்சி.

62. இதில் முதல் பாதம் மாமுனிகள் அருளிச்செய்திருக்கக் கூடுமா? தேசிக ஸம்ப்ரதாயம் ஸாவத்யமென்கிற திருவுள்ளம் மாமுனிகளுக்கு இருந்திருக்கவில்லையென்று யாரேனும் நினைக்கவாவது முடியுமா? உபதேசரத்தினமாலையில் * முன்னோர்மொழிந்த வித்பாதிபாசுரம் அமைந்திருக்கு மழகை ஆழ்ந்து நோக்கினல் இப்படியுஞ் சொல்லவொண்ணுமா? என்று பலர் சங்கிக்கக்கூடும். இந்த சங்கை மிகவும் யுக்தமானதே. மாமுனிகள்தவிர மற்றையோர்விஷயமாக இந்த சங்கை கிளர்ந்தால் வாய்மூடிக் கைகூப்பியே நிற்பேன். 'ஸர்வாத்மநா அஸம்பாவிதமிது' என்றே பறையறைவேன். மற்ற ஆசார்யர்களைப் போலவா மணவாளமாமுனிகள்? மாமுனிகளின் உண்மையான வைபவங்கள் யாருடையபுத்திக்கு எட்டும்? அவருடைய திவ்ய ஸ்ரீஸூக்திகளிலே ஆழ்ந்து உருகி உள் குழைவார்க்கன்றோ அவரது அருமை பெருமைகள் தெரியும். * அஸ்லிஷ்டவிதபவாவாநரஸ்ஸித: * என்னுமாபோலே யிருப்பார்க்கு அவருடைய ஞானக்கடலில் ஒரு திவலையேனும் தெரியுமோ? அவரது ஆத்மகுணஸாகரத்தில் ஒரு பிந்துவாகிலும் எட்டுமோ? நம்பிள்ளை, உலகாசிரியர் முதலானோரையும் உள்ளடக்கி மாமுனிகளையே உலகமெல்லாம் ஆராதித்து வாழ்த்திப்போருவது வெறுமனேயோ? இப்போது இந்த வாக்கியங்களை அடியேன் எழுதுகையிலும் *உள்ளஞ்சோர வுகந்தெதிர்விம்மி உரோம கூபங்களாய்க் கண்ணீர்கள் துள்ளஞ்சோர * என்னும் நிலைமையெய்தி என்னுள்ளமுமுடலும் படுகிறபாடு யாரறியகிற்பார்? மாமுனிகளை நினைத்த நெஞ்சினுலும் வாழ்த்தின வாயினுலும் தொழுத கையினுலும் மற்றோராசிரியரை நினைக்கவும் வாழ்த்தவும் தொழவும் அடியேனது மன மொழி மெய்கள் இசை

கின்றிலவே. மாமுனிகளின் ஸூக்திஸௌஹுவத்திலே பிணிப் புண்டு பதஞ்செய்துகிடக்கும் நெஞ்சு மற்றொன்றினைப் பேணுதே.

63. இதரஸம்ப்ரதாயஸாரக்ரந்தத்திற்கு ஐந்து மஹாவித்வான்கள் வியாக்கியானஞ் செய்திருக்கிறார்கள். மதவிஷயங்கள் வருமிடங்களில் என்ன ஆர்ப்பாட்டஞ் செய்கிறார்கள் பாருங்கள். பெரிய வாச்சான் பிள்ளையை தேசிகன் அபியுக்த பதத்தாலே உபாதானம் பண்ணியுள்ள விடத்து "ஸ்வகோஷ்டியில் அபியுக்தரென்றபடி" என்று அர்த்தமெழுதியுள்ள அவர்களின் மனநலத்தை என்ன வென்போம். இங்ஙனே பல பல. நம்மணவாள மாமுனிகளின் வியாக்கியானத்தையெடுத்து ஸேவியுங்கள். பூச்சொரிந்தாப்போலே விஷயங்களை வாரியிறைத்துத் தேனும் பாலு மமுது மாக்கி, மாண்ட வுயிரும் மீண்டுவரும்படியாகவன்றோ ஒவ்வொரு ஸ்ரீஸூக்திவிந்யாஸமு முள்ளது. வெறும் அபிமானத்தாலே எழுதுகிற வார்த்தையா இவை? எந்த மதஸ்தரும் உருகாமையில்லையே. * வஞ்ச முக்குறும்பாங்குழியைக் கடக்குங் கூரத்தாழ்வானென்று நிகரில் புகழ்பெற்ற ஆழ்வானுங்கூட ஸுந்தரபாஹுஸ்தவத்திலே * ப்ரத்யக்ஷம் ஸுநிரஸ்ய சைவ விஷயம் ப்ரத்யக்ஷயிதி நாம ப்ராயச்சி ந: * என்றும் * யோ ஹ்ருத்தா விரஹிதா ந ஸ்தாயதி * என்றும் மெய் மறந்து அருளிச்செய்ய நேர்ந்துவிட்டது. அவரினும் விஞ்சிய வீறு பெற்ற பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலே * பாஹி! ஸுமதவா ஸ்வோஜ்ஜாரஜாவம் விஜாவ்ருஃ * என்று சீற்றத்தினெல்லையிலே நின்று பணிக்க நேர்ந்துவிட்டது. நம் மணவாளமாமுனிகளின் திவ்ய ஸூக்திகளிலே இப்படிபோலேசிலவார்த்தைகள் தலைகாட்ட மிகவும் அவசியமிருந்தும் ஒரு அக்ஷரமாவது தலைகாட்டிற்றுண்டோ? நிரதிசய ஸூக்தி மாதுர்யத்திற்கு ஓரிடத்திலேனும் ஒரு அணுவளவேனும் கண்ணழிவுண்டோ? விஷய நிரூபணங்களிற் பார்த்தாலோ, எந்த ப்ரதிவாதிநிரஸநத்திற்கும் இனி வேறொரு சுவடி தேடியோடவேண்டா, ஸ்வாமியின் திவ்யஸூக்திகளை ஆழ்ந்து அகங்கொண்டால் * தத்தத்க்ருத்ஸ்நமேதி விஜயம் தத்தத் தஸ்யாவதாரஸ்ய வாக ப்ரஜ்ஞாநமேதத்க்ருத்யாகநிஜோ கோஜாஹம: * என்று ஸ்ரீதேசிக னருளிச்செய்கிறபடிதவிர வேறுண்டோ? மாமுனிகளுக்குள்ள இவ்வற்புதமெல்லாம் ஜந்மாந்தரஸுக்ருத விசேஷத்தாலே அவரவர்களின் நெஞ்சுக்கு அநுபவ கோசரமாகவேண்டு மத்தனைபல்லது நாயினேன் விவரித்தோ சிலர் மதியிலேற்றுவது? இத்தகைய பெருமைகள் புல்லறிவாளனை நீச

னேன்வாயில்வருவதுங்கூட "மாசூணாவான்கோலத்தமரர்கோன் வழிப்பட்டால்,மாசூணாவுன பாதமலர்ச்சோதி மழுங்காதே * என்ற கணக்கிலே அத்தலைக்கு நிறக்கேடாய் முடியுமென்றும் நினைக்கலாகு மிறே.

அவதாரிகா நிகமநம்.

64. வநதாவதாகிஉ்க்ஷூஹவதி? நந்நீஉஶேவ॥ மாமுனிகளுக் குள்ள ஹ்ருதய பரிபாகம் பரமவிலக்ஷணம். * விஶிஷ்ணோவா வஶீரவ! யதிவா ராவணஃஸ்வயம் * இத்யாதியிடங்களுக்கு ஶாத்ரவாதக்கனுடைய நெஞ்சும் ப்தமாம்படி நம்பிள்ளை முதலா னோர் அருளியிருக்கிற வியாக்கியானங்களின்படி. உண்மையான ஆத்ம குண ஸம்ருத்தி மாமுனிகளொருவர்க்கேயுள்ளது. அவருடைய திவ்யசரித்திரங்களும் திவ்ய ஸ்ரீஸூக்திகளும் அந்த ஸம்ருத்தியையே காட்டுகின்றன. நம் ஆசார்யர்கள் மிதித்தவழிக்குச் சிறிதுவேறுபட் டிருந்ததோடு நில்லாமல் அவர்களை இழித்துரைத்தும்போந்தவோ ராசிரியர்ஸந்ததியிலே சிலகாலமிருந்து வந்தாரென்கிற விதனைக்கொ ண்டுஇவ்வகுப்பிலேயுள்ளார் சிலர் ஏதேனும் நினைக்கவும் சொல்லவும் இடம் நேர்ந்தாலும்நேருமோ என்று மாமுனிகள் எண்ணி, 'அத் தலையில் ஸம்பந்தமே பச்சையாக இவரை நாம் அங்கீகரித்திருக் கிறோ' மென்பதை வ்யக்தமாக்கிவிடுதல் நலம் என்று திருவுள்ளம் பற்றியும், வஸ்துதஃ வேதாந்தப்ரஸ்தானத்தில் உபகாரகாக விளங் கினதேசிகனுடைய கடாக்ஷமேயடியாக அண்ணா வளர்ந்தாரென்கிற உண்மையை அபலபியாமல் வெளியிடுதலிலுள்ள ஊற்றத்தை உல குக்குக் காட்டவேண்டியுமே மாமுனிகள் அந்த முதல்பாதமருளிச் செய்தார். இந்தமஹாகுணத்தில் வியந்தே அண்ணாவும் * போய் யிலாத மணவாளமாமுனி புந்திவாழி * என்று வாழ்த்தினர். மற்று ஆர்க்கேனும் இத்தகைய வாழ்த்துஉண்டோ? 'மற்றையோர் புந்தி யில் ஒரு பொய்யாவது இருந்துதீரும்;மாமுனிகளின் புந்தியில் அது இறையுமில்லை' என்பதன்றோ இங்கு விவக்ஷிதம். ... ... *

ஸ்ரீஜகத்ரக்ஷாவாஹாஜ்ஞவாம்ஸந்நாதா உந்மேஷிணா ।
ஶ்ரீவிதா ஜயதாஶாதிஷீக்ருதிஜயவீதிகா ॥

உபரிக்ருத்யஸங்கல்ப்யகாஶநபரிஶ்ரமஃ ।
நாதஸ்யாவஸ்யகஜந்தோவநிஶ்சிதஸ்யாஜ்ஞவிஶ்யதே ॥

ஸ்வகீயஹ்ருதயோவிதைவஸ்ஸஹஹஸௌஉக்ஷஹஷிகைதஃ
விவேகிவிஶ்ரமூல்க்ருதே விஷயஞ்ஜவேகக்ருஷிசு ।

ஶ்ரீகாஶ்ரநிஜவாஷிகம்ஶ்ரீவரஹோஃ! ஶ்ரீகாஶம்ஸவெ!
உ-யாகிஶவிவெஞூிவெஃஷிவஷிவகூயா தஂஶயா ॥

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய நூல்களில் தொண்ணூற்று மூன்றுவதான வாதிபீகர விஜயத்தின் அவதாரிகை முற்றிற்று.

59:99
134

"லௌகிகவைதிகங்களிரண்டிலும் தேர்ச்சியடைந்த மத்யஸ்தர்களைக் கொண்டு ஸபைகூட்டினால் வந்து பதில் சொல்ல ஸித்தம்" என்று படியடக்கத்தில் எழுதியுள்ளார். இவரே தேர்ந்தெடுக்கும் மத்யஸ்தர்களின் முன்னிலையில் இவருடைய அஸத்ப்ரலாபங்களை அடியறுக்க ஸர்வதா அடியேன் ஸித்தன். இந்த நிரூபணத்தில் தோல்வியடைந்தால் அடியேன் ஆயிரம் ரூபாய்இழக்கத் தடையேகிடையா தென்பதைப் பன்முறையும் பகர்கின்றேனாதலால் ஷி க்ரவ்யலாபத்தில் நசையுடையார் முன்னின்று ஸபை கூட்டலாம்.

சுகவிம் கவியது சுவட-ம் வட-யது
சுவெ-யம் வ-யயது சுமு-ா-ா மு-ா-யது ।
வாவாஷிஹயம்காவாதராஜஃ-
வாஶாண-வாாகூ ஶ உஷ்வஸதி ॥

59796

R. G. Press, G. T. Madras.

அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின் பதிப்புகள்.

ஸ்தோத்ரபாட வியாக்யானங்கள்.

(தமிழ் எழுத்தும் கிரந்த எழுத்தும்கலந்த மணிப்ரவாள நடை)

	ரூ.	அ.
முகுந்தமாலை (மிகவும் தெள்ளிய உரை)	0	6
ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்நம் (அமுதப்பெருக்கு உரை)	1	0
ஸுதர்சந சதகம் (எளிய நடையில் உரை)	1	0
ஸ்ரீரங்கராஜஸ்தவம் (அத்புதமான வியாக்யானம்)	2	8
வரதராஜஸ்தவம் ஸ்ரீஸ்தவம் விரிவுரை(தெலுங்குலிபி)	2	0
அதிமாநுஷஸ்தவம் ஷை	0	10
ஸ்ரீவைகுண்டஸ்தவம், ஸுந்தர பாஹுஸ்தவம், ஸுதர்சன சதகம், கத்யத்ரயம் இவற்றின் உரை மாதஸஞ்சிகையாக வெளியாகிறது. (தெலுங்கு லிபி)		

ஸத்ஸம்ப்ரதாயார்த்தச் சிறு நூல்கள்.

சேஷாவதாரச் சிறப்பு	0	2
நமஸ்காரதத்வ விஜயத்வஜம்	0	6
ப்ரணவாதிகார தத்வம்	0	4
ஸ்தோத்ர வ்யாக்யாந சோதநம்	0	3
வாத்ஸல்யார்த்த விவரணம்	0	2
சேட்லூரர் மாயமயக்கம்.		
விதவா வபந வித்வம்ஸநம்	0	4
பாதுகா ஸஹஸ்ராவதார தத்வம் (சுத்த ஸம்ஸ்கிருத பாஷையில் தமிழ் மொழிபெயர்ப்புச் சுருக்கத்துடன்)	0	4
உபதேச ரஸாயன ஸாரம் (கும்பகோணதுர்வாதி கர்வ பங்கம்)	0	4

சரித்திர நூல்கள்.

கூரத்தாழ்வான் வைபவம்	0	4
பிரதிவாதி பயங்கரம் அண்ணா வைபவம் ஸம்ஸ்க்ருத காவ்ய ரூபம், தமிழ் உரையுடன் } ஸ்ரீ ஜகத்குருஸ்வாமி ஸூக்தி.	0	8
ஸத் ஸம்ப்ரதாயப் படி—அண்ணா வைபவ விளக்கம்	0	4
பகவத் கதாம்ருதம்—நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களிலடங்கியுள்ள இதிஹாஸ புராண கதைகளின் விவரணம்	0	12
வாதிபீகரவிஜயம்	0	4
சென்னை உபந்யாஸ விசேஷங்கள்	0	2

ரஹஸ்யார்த்த நூல்கள்.

ஸ்ரீவசன பூஷண ஸாரம்	0	1
ஆசார்ய ஹ்ருதய ஸாரம் (மாத ஸஞ்சிகையாக வெளியாகின்றது)		
ஆசார்ய ஹ்ருதய மூலம்-திருத்தமான பதிப்பு (தெலுங்கு லிபி)	0	6
முமுக்ஷுப்படி, தத்வத்ரயம், ஸ்ரீவசனபூஷணம் மூலம் தெலுங்கு லிபி	0	8

காஞ்சீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின்பதிப்புகள்.

சுத்த ஸம்ஸ்கிருத பாஷா கிரந்தங்கள்.

	ரூ.	அ.
திவ்யப்ரபந்தவைபவவிவேக:	0	8
உபந்யாஸரத்நமாலா (ஐந்து உபந்யாஸங்கள்	0	6
தர்க்க சாஸ்த்ர ஸர்வஸ்வம் (நாகர எழுத்தில்)	0	8
ரஸிக புதாஞ்ஜனம் (கும்பகோணப்ரதிபக்ஷி துர்வாத கண்டனம்)	0	6
காஞ்சீ ஹஸ்திகிரிவைபவம் (தேவப்பெருமாள் மகிமை)	0	4
பரிபந்தி பஞ்ச பங்கீ (வியாகரண விசாரம்)	0	2
ரக்ஷாவிலோசக பாவ ப்ரகாசிகா (புத்தங்கோட்டர்க்குமறுப்பு)	0	5
யாத்ராஸ்தோத்ராம்ருதம்	0	1
அனேக அருளிச்செயல் மொழிபெயர்ப்புக்கள்	0	8
உபாக்யானஸாகரம்	0	8
ஸ்தோத்ரரத்நமாலா	0	8

யஜுர்வேத விசார நூல்கள்

வேதாத்யயந ஸர்வஸ்வம் 1, 2 பரிச்சேதம் (சுத்த ஸம்ஸ்க்ருத பாஷையில்)	1	0
ஸர்வஸ்வ ஸம்ரக்ஷணீ (மணி ப்ரவாளம்) கும்பகோணவாதிகண்டனம்	0	8
ஸர்வஸ்வ கவசம் (ஸம்ஸ்க்ருத பாஷையில்)	0	4
பரமார்த்தபரித்ராணம் ஷை மன்னார்குடி துர்வாதகண்டனம்	0	4
அஸூயா பரமௌஷதம் (மணிப்ரவாளம்) ஷை	0	4
சாஸ்த்ரஜ்ஞாந சாணபலகம் ,,	0	6
ஸர்வஸ்வரக்ஷா (கும்பகோணத்தாரின் வேதலக்ஷண ஸித்தாஞ்சன த்திற்குக் கண்டனம் மணிப்ரவாளம்)	0	12
வேதவேதாந்த வைஜயந்தி ஸஞ்சிகைகள்—15	2	8

விளம்பரம்

திருவாய்மொழி உரை

"திவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகை" யென்னும் பெயரால் திருவாய்மொழி **வியாக்கியானம்** மாத ஸஞ்சிகையாக வெளியாகிறது. வருஷச்சந்தா ரூ. 3—8—0 தபால் செலவு தனி.

இப்படியே ஸ்தோத்ரவியாக்கியானஸஞ்சிகைகளும் தெலுங்குலிபியில் பிரதிமாதம் வெளிவருகின்றன. வருஷச்சந்தா ரூ. 3—0—0

தனி ஸஞ்சிகை விலை 0—5—0

மாதிரிக்குப் புஸ்தகம் கேட்போர் 6 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

பி. ஆர். ஆராவமுதையங்கார்,

44, நாராயண முதலி வீதி, ஜீ. டி. மதராஸ்.